# இக்காலத் தமிழ்க் கவிஞர்

சு. அ. இராமசாமிப்புலவர்,
கருப்பக்கிளர் (அஞ்சல்)
கோட்டூர் வழி, தஞ்சை மாவட்டம்

ஆசிரியர்.
பண்டித, வித்துவான், இ. இராமாநுசன்
தமிழ் விரிவுரையாளர்,
அரசர் துரைசிங்கம் நினைவுக் கல்லூரி,
சிவகங்கை.

வெளியிடுபவர்:
A T N நாகலிங்கம் & கம்பெனி
புதுமண்டபம், மதுரை.

உரிமை பதிவு
செய்யப்பட்டது. }

1953 [விலை ரூ. 1 50

மூன்றாம் பதிப்பு 1953

Approved by the Text Book Committee, Madras, for class use Vide Fort. St George Gazette Supple, ment to Part I-B of Consolidated list of approved-books, 7th May 1952, Page 114 of Part II

VIJAYA PRINTERS, Ltd., MADURAI-53,

# எனது வேண்டுகோள்

பழங்கவிஞர்களை இன்று நாம் புகழுகிறோம், போற்றுகிறோம், அவர்தம் வாழ்க்கை வரலாற்றையும் படிக்கிறோம், அவர்க்கு விழாக் காண்கிறோம். இவை எல்லாம், நல்லனவே!

இக்காலக் கவிஞர்களையும் அப்படியே நாம் போற்ற வேண்டும். ஆனால், போற்றினதில்லை, போற்ற விரும்பினதுமில்லை. இது, நம்மிடை நேற்று வரை இருந்த குறை. நல்லவேளை, காலமாற்றத்தாலே நாம் நம் கடமையை உணர்ந்தோம்!

அக்குறையைப் போக்குவதற்கு சிறு முயற்சியின் அறிகுறியே இந்நூல். இக்காலக் கவிஞர் எழுவர் வரலாறுகள் இதில் உள்ளன. வாழ்க்கை நிகழ்ச்சிகள், இளைஞர்கட்கு ஆகும் வகையில் அமைக்கப் பட்டுள்ளன. நடை, எளிய இனிய தமிழ் நடை. மாணவர்கட்கு நன்கு புரியும் நடை. மாணவர்கள் படித்துப் பயன் அடைதல் நல்லது.

என் நோக்கம் அறிந்து அன்பர் திரு A. T N. நாகலிங்கம் அவர்கள் இதனை வெளியிட்டுள்ளார்கள். அவர் முயற்சி நாட்டிற்கு நல்ல பணி. அவருக்கு எனது நன்றி என்றும் உரியது!

'காலம் என்பது பெருமணற்பரப்பு. அதில் நாம் நமது அடிச் சுவட்டையும் பதித்துச் செல்ல வேண்டும்,'' என்றார், ஆங்கிலக் கவிஞர் ஒருவர். இச் சீரிய உண்மை இளைஞர் மனத்தில் முளையிலே பதிதல் தகும். அதற்கு, மாணவருலகிலே இது பரவுதல் வேண்டும். அவ்வகையில் உதவி புரியக் கல்வித் துறைத் தலைவர் முன்வருதல் நலம். மனமுவந்து உதவுமாறு அவர்களைப் பணிவுடன் வேண்டுகிறேன்.

தி. இராமனுசன்

# பொருள் அடக்கம்

## I கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை


| எண் | | | பக்கம் |
|---|---|---|---|
| I. | பிறப்பும் இளமையும் | .. | 1 |
| II. | கல்வி பயிலுதல் | ... | 7 |
| III. | ஆசிரியத் தொழில் | ... | 14 |
| IV. | இலக்கியத் தொண்டு | .... | 20 |
| V. | பேரும் புகழும் | .. | 27 |
| VI. | குணநலன்கள் | .. | 32 |


## II. அரசவைக் கவிஞர் இராமலிங்கம் பிள்ளை


| | | | |
|---|---|---|---|
| I. | பிறப்பும் வளர்ப்பும் | .. | 35 |
| II. | கல்விப் பயிற்சி | ... | 41 |
| III. | தொழில் முயற்சி | ... | 48 |
| IV. | நல்ல பரிசு | ... | 57 |
| V. | அரசியல் தொண்டு | .... | 64 |
| VI | தமிழ்ப் புலமை | ... | 71 |


## III கவி யோகியார் சுத்தானந்தர்


| | | | |
|---|---|---|---|
| I. | பிறப்பும் இளமையும் | .. | 77 |
| II. | கல்வி கற்றல் | ... | 82 |
| III. | ஆசிரியத் தொழில் | ... | 89 |
| IV. | கவி யோகியார் | ... | 95 |
| V. | பொது நல வாழ்வு | ... | 100 |
| VI. | இயற்றிய நூல்கள் | ... | 106 |

சு. அ. இராமசாமிப் புலவர்,
கருப்பக்கிளார் (அருசல்)
கோட்டூர் வழி, தஞ்சை மாவட்டம்

# இக்காலத் தமிழ்க் கவிஞர்

## I

கவிமணி

# தேசிக விநாயகம் பிள்ளை

## I பிறப்பும் இளமையும்

நாகப்பட்டினம் தமிழகத்துச் சோணாட்டுப் பேரூர்களுள் ஒன்று. கடல்நாகை எனப் பழைய நூல்களில் அது புகழப் பெறும். அஃது ஒரு கடற்கரைத் துறைமுகம், ஏற்றுமதியும் இறக்குமதியும் சிறக்கும் இடம். கடலோடிப் பொருள் தேடுவார் பலரும் அங்குத் திரண்டனர். திரண்டவர் பலரும், வேறு வேறு நாட்டவர். நாடுகள் வெவ்வேறு எனினும், அவரவர் கூடியே உறைவர். இங்ஙனம், சீரும் சிறப்பும் மிக்க அதனைத் '**திருவுறை பேரூர்**' எனினும், அது மிகை ஆகாது.

நாஞ்சில் நாட்டுத் தேரூரினர், தாளாண்மை மிக்க வேளாளர்; பெருக்கம் மிக்கவர். வளர் பொருள் ஈட்டும் திருவுளமும் பெருகியவர். அவருட் சிலர், பண்டு நாகை புகுந்தனர்; புகுந்து, தகுந்த வழியில் மிகுந்த நிதியும் தேடினர். **தேரூர்ச் சாமிநாத முதலியார்** என்பார் அவர்களுள் ஒருவர்.

முதலியார் அவர்கள் பெருந்தனவணிகர், நிலபுலம பலவும் உடையவர். அவா பொருளைத் தேடியது மட்டும் அன்றி, அருளையும நாடினர்; 'இலலை' எனறு உரைப்பார்க்கு 'இலலை' என்று உரையார், கப்பல பல கொணடு ஒப்பிலா வாணிகம் பேணினர். பெருமுயறசியும, நிறைமொழுக்கமும் உடைய முதலியாருககு மூன்று மக்கள் பிறந்தார்கள் கணபதியும் நடராசரும் ஆடவர்கள, **பருவத வர்த்தினியார்** ஒருவரே மகளார்.

தாமரைக்குளத்து **மணிவாசகனார்** நாஞ்சில் நாட்டு நலலறிஞர்; தமிழிற் பெரும்புலவா, காரி அநதாதி பாடிய கவிராயர் சாமிநாத முதலியார் தம் மகளாரான பருவத வர்த்தினியாரை மணி வாசகனாருககு மணம புரிவித்தார் பருவத வர்த்தினியார் உத்தம இயல்பினர், பெண்டிருள் நல்லார். இருவர்தம் இல்லறமும் செவ்வனே நடந்தது. இருவர்க்கும் இரு மக்களே பிறந்தார்கள். அவர்களுள் ஒருவரே **ஆதிலட்சுமி** அம்மையார்; மற்றொருவர் **கண்ணுப் பிள்ளை**. தந்தையாரை ஒப்பவே மைந்தரும் தமிழிற் புலவர்; கம்பர் கவிதையில் பயிற்சி மிக்கவர்.

தமிழ்க் குடியிலே பிறந்த ஆதிலட்சுமியாருக்கு உரிய பருவம வந்தது. பெற்றோர் மணவினை கருதினர் தேரூர்ச் சிவதாணுப் பிள்ளை என்பவர் உள்ளூரினர், 'மூத்த பிள்ளை' என்று, மன்னர் மெச்சிய பட்டம் பெற்றவர், ஆங்கிலமும் அருந்தமிழும் பாங்குறப் பயின்றவர்; உப்பளத்தில் ஒப்பிலா அலுவலும் ஆற்றி வந்தார். அவரது ஒத்த குலமும் நலமும் கண்ட பெற்றோர், அவ்விரு

வரையும் வாழ்க்கைக்கு உரியர் ஆக்கினர். பண்பு மிக்க அவர்தம் இல்லறம், பயனும் உடையதாயிற்று. அவ்வில்லறத்தின் நல்லறப் பயனாய் நம் **'கவி மணி'** தோன்றினார்.

நம கவி மணி அவர்கள், கொல்லம் ஆண்டு ஆயிரத்து ஐமபது (கி. பி. 1876), ஆடித்திங்கள், பதினாலாம் நாள பிறந்தார். ஒரு பெருநாளிலே உற்றவரும் பெற்றவரும் கூடினர். கவி மணிக்குப் பெயரிடும சடங்கு நிறைவேற்று **'தேசிக விநாயகன்'** என முதியவர் ஆசி கூறினர். **'தேச-கவி-நாயகம்'** என்பதுதான் 'தேசிக விநாயகம்' என முதியவர் வாக்கில் மருவி வந்தது போலும்!

வளம் மிக்க குணங்கள் பலவும் இளமையிலே நம் கவிமணியை வந்து அடைந்தன இவர் நாளும் காலையில் எழுவார், ஆறு சென்று நீராடுவார்; கோயில புகுந்து கடவுளைத் தொழுவார்; இடையிடையே மடத்தில நடக்கும் பூசனைகளிலும் சென்று கலப்பார்

நம் கவி மணிக்கு இளமை தந்த வளம் இரண்டு: ஒன்று, சீரிய தமிழ்ப்புலமை; மற்றொன்று, பேரிய சைவப்பற்று இவரிடம் அன்று முதலே தமிழும் சைவமும் தழைத்து இனிது

தேரூரை அடுத்தது ஓர் ஏரி. அதன் நடுவே அழகிய திட்டு ஒன்று உண்டு. அதற்கு **'வாணன் திட்டு'** என்பது பெயர். அங்குத் திருவாவடு துறையார் மடம் ஒன்று இருந்தது. அதன் தலைவர் **சாந்த லிங்கத் தம்பிரான்** என்பவர். அவர்

நல்ல தமிழறிஞர், சைவ சமயப் பெரியார்; இலக்கிய இலக்கணங்களை எவருக்கும் வழுவிலாது கற்பிப்பவர் சைவ மடங்கள் இத்தகையாரையே தலைவராக்கி, அக்காலத்தில் தமிழை வளர்த்தன. நம் கவி மணிக்கு இளமையில் பள்ளியிலே தமிழ் கற்க வழியில்லை நாஞ்சில நாட்டார் எவரும் மலையாளமே கற்க இயலும் தமிழறிஞர் வழி வந்த புதல்வர் நம் கவி மணி. ஆதலால், அந்நிலை இவருக்குப் பெரிதும் வருத்தம் தந்தது. இவர் தமிழைத் தனித்துக் கற்க வழி தேடினார் தம்பிரான் சாந்த லிங்கனார் அதற்கு உறுவழி காட்டி உதவினார்.

கவிமணியும் மற்றுஞ்சிலரும் தம்பிரானிடம் தமிழ் கற்றனர் முறையான கலவிப் பயிற்சி சிறப்பாய் நடந்தது. கவி மணி கோட்டாற்றுக் கல்வி நிலையத்தில் படித்து வந்தார், மாலையில் வீடு வந்ததும் தம்பிரானிடம் தமிழ் கற்பார் இலக்கிய இலக்கணங்களும் தேவார திருவாசகங்களும் சிறுகச் சிறுகப் பாடம் ஆயின. ஐந்தாறு ஆண்டுகளில நல்ல தமிழ் அறிவு பெற்றார்; அன்றே வளமார்ந்த பாடல்கள் பல இயற்றும் வன்மையும் பெற்றார், எந்தப் பாடலைக் கேட்டாலும் கேட்டபடியே மீட்டும் சந்தம் தப்பாது பாடுவார் கேட்டவர் எவரும் மட்டற்ற மகிழ்ச்சி கொள்வர். இப்படிப் பள்ளிப் பருவத்தில் பிள்ளை அவர்கள் பாடிய பாடல்கள் எண்ணில் அடங்கா. சுசீந்தை மாலையும் அழகம்மை விருத்தமும் கவி மணியின் இளமைப் பரிசுகள்.

ஒரு சமயம் சிவராத்திரி கழிந்த மறுநாள் கவிமணி தோழர் சிலருடன் மடத்துக்கு வந்தார். தம்பிரானும் சில பெரியார்களும் குழுமி இருந்தார்கள். சிறுவர் பலரும் பொறுமையோடு சூழ்ந்தனர் தம்பிரான் முன்னர் அப்பம், வடை பொங்கல் இவை ஏராளமாய்க் குவிந்திருந்தன. தம்பிரான் தாராளமாகத் தருவர் எனச் சிறுவர் கருதினர், நம கவி மணியும் குறிப்பு உணர்ந்து விருப்பத்துடன் சென்றார் அவை யாவும் பேரம் பலவர் கோயில உணவுகள்,

சிறுவர்கள் விரும்பியது கிட்டவில்லை தம்பிரான் அவைகளைத் தர ஒரு கட்டளை இட்டார்: தாம் படிக்கும் தேவாரப் பாடலை ஒரு முறை கேட்க வேண்டும்; மறு முறை பார்க்க வேண்டும், மூன்றாம் முறை ஒப்புவிக்க வேண்டும் தப்பாது இது செயவார்க்கு அப்பமும் வடையும் கிடைக்கும் பரிசு கிட்டத் தம்பிரான் இட்ட திட்டம் இது கேட்ட சிறுவர் பலரும் மலைத்தனர் சிலர் முயன்றும் தோற்றனர். நம் கவி மணி, சோதனைக்கு உட்பட்டார்; அரிய சாதனை செய்தார்; பாடிய வாய் மூடியவுடன் பாடலைப் பாராது ஒப்புவித்தார். வடையும் அப்பமும் கூடை கூடையாய் வந்தன. அருகிருந்த பெரியார் வியந்தனர். சிறியவர் பலரும் வாயூறினர். நம் கவி மணி, தாம் பெற்ற பரிசினைப் பலருக்கும் பகிர்ந்து கொடுத்தார். அத்தகவுடைமை என்றும் நம்மால் போற்றத் தக்கது!

**உமையொருபாகக் குருக்கள்** என்பார், நெல்லையப்பதி மடத்துத் தலைவர் ; கல்வி கேள்வி

களிற் சிறந்தவர் திருமடத்து அலுவலாய் அவர் ஒரு முறை கோட்டாறு வந்தார். நம் கவி மணி, நல்லவர் எவர் வந்தாலும், ஓல்லையில் சென்று அவரைக் காண்பார்; கண்டு, அவர் கூறும் அற வுரைகளைத் திறம்பட அறிவர். குருக்களை மடத் திலே கண்டு நம் கவிமணி அடைக்கலம் அடைந் தார், சமய உட்பொருளும், ஒழுக்க நிலையும் அமையுமாறு கேட்டார். கேட்டவருக்குச் 'சிவ தீட்சை' பெற உள்ளம் இயைந்தது. தம் கருத்தை விருப்புடன் தெரிவித்தார் தேசிகரும், கவிமணியின் மாசற்ற மனநிலை அறிந்து, தீட்சை செய்வித்தார் கவி மணியின் மனம் மகிழ்வுற்றது 'பிறவி இருளை அகற்றிய பொய்யா விளக்கு,' எனக் குரவரின் அறிவுரையைப் போற்றினார்; 'உமை அன்றி வேறும் ஒரு துணை வேண்டுமோ!' எனக் குருக்களை புகழை விருப்புடன் பாடினார். 'அப்பனே, நீ தப்பாது பெரியவன் ஆவாய்!' எனக் குருக்களும் ஆசி கூறினார். பெரியவர் ஆசி பிழைக்குமோ?

கவிமணியின் தந்தையார் மைந்தரின் பத்தா வது ஆண்டில உயிர் நீத்தார். 'தந்தையொடு கல்வி போம்,' என்பர். ஆயினும், நம் கவி மணி யிடம் இஃது 'அழிவழக்கு' ஆயிற்று தந்தை யார்க்குப் பின்னரும் தனியர் கற்றுச்சிறந்தார்.

கசடறக் கற்ற கல்வி, தெளிவுறக் கேட்ட கேள்வி, இரண்டிறகும் முரண்படா ஒழுக்கம் ஆகிய மூன்றினும் ஊன்றி நிற்பவனையே சான்றோன் என்பர். இனிய மகனை ஈன்று புறந்தருவள் தாய், உற்ற மகனைச் சான்றோன் ஆக்கல் பெற்ற தந்தையின் கடன். கவி மணியின் தந்தையார் இக்கடமை அறனை உணராதவர் அல்லர். தந்தையார் சிவதாணு, மைந்தரை உரிய பருவத்தே பள்ளியிற்சேர்த்தார்.

கவி மணியின் ஆரம்பப் படிப்பு, தேரூர் தொடக்கப் பள்ளியில நடந்தது. அங்கு இவர் எண்ணும் எழுத்தும் கண் எனக் கற்றார், நாளும் பொழுதொடு பள்ளி செல்லுவார், ஆசிரியரை வழிபடலில் முனிவில்லார். 'இரு' என இருந்து, 'சொல்' எனச் சொல்லிக் கருத்துடன் கற்றார், பாடம் போற்றவும் போற்றியது நினைக்கவும் நாள்தோறும் தவறார், ஆசிரியர் மனம மகிழப் பேசவும் வல்லார்; சித்திரப் பாவையை ஒத்திருந்து பாடம் கேட்பார். பேணிய குணங்களாய் மாணவருட்சிறியர் ஆயினார் நம் கவி மணி.

ஆரம்பப் பள்ளியில் அக்காலத்தில் தமிழ் கற்றல் இயலாது; மலையாளமே கற்பிக்கப்பட்டது. நம் கவிமணியும் மலையாது மலையாளத்தைக் கற்றார், இதனால், மலையாளப் பயிற்சி இளமையிலே வாய்த்தது. எனினும், அமிழ்தினும் இனிய தமிழை இவர் இழக்கவில்லை. தனிப் பெறும்

பிலே தமிழை விழைந்து கற்ருர்; கற்றது மட்டும் அன்றித் தக்க புலமையும் ஐந்தாண்டிலே நிறைவு எய்தியது. பலரும் பாராட்டக் கவி புனையும் திற மும பெற்ருர். இங்ஙனம், தம் முயற்சியாற் செந் தமிழ் கற்ற இவரது மொழியார்வம் போற்றற்கு உரியது! மற்ருென்றும் நாம் ஈண்டு எண்ணத் தகும் இவர் விரும்பிக் கற்ற தமிழே திருந்திய வாழ்க்கைக்குத் துணை ஆயிற்று. தமிழ் தந்த புகழே இன்று இவருக்கு அமிழ்து நம் கவி மணி இன்று தமிழ்த்தாயின் தவப்புதல்வராய்த் திகழ் கின்றனர்.

தேரூரில் தொடங்கிய ஆரம்பக்கல்வி முடிவு அடைந்தது. பின்னர் நம கவி மணி, கோட்டாறு உயர்நிலைப்பள்ளியில் சேர்ந்தார், அங்கும் பாங் குறப் பயின்ருர், ஆங்கிலத்தில் நல்ல தேர்ச்சி பெற்ருர்; சரித்திரத்தையும் விருப்புடன் வருந்திக் கற்ருர், தமிழையும் இழுக்கு நேராது போற்றி ஞர்; 'ஓதுவதைககாட்டிலும ஒழுக்கமே சிறந் தது'' என்பதை எடுத்துக் காட்டிரு்ர். பள்ளிப் படிப்புடன் கவிமணி உள்ளம்அமைதிபெறவில்லை

ஓய்வு நேரங்களை நம் கவி மணி வீணுக்கக் கழித்தறியார், சரித்திர நூலைத் திறம்பட ஆராய் வார் கல் வெட்டாராய்ச்சியில் கவி மணிக்குச் சொல்லொணு ஆர்வம் உண்டு. ஆங்கிலக்கவிதை களையும் பாங்குறப் பயில்வார்; ஆற்றுப் பெருக் கைப் போல மாற்றுயர்ந்த கவிதைகளைத் தமிழி லே பாடுவார், நண்பர்களைச் செய்யும் கேலியும் செய்யுளிலே அமையும். இவரது பாட்டைச் சுவைத்த நண்பர், இவர் தம்மை வைவதையும்

மறப்பார். கவி மணி உறுதியுடன் இறுதியில் 'மெட்ரிகுலேஷன்' பரீட்சையில் தேறினர் தந்தையார் அற்ற நிலையிலே மைந்தர் சிந்தை திரியாது கற்றது அருமையினும் அருமையன்றோ?

கவி மணிக்குக் கற்ற கல்வியைச் சிதையவிட மனம் இல்லை. மேலும் கற்க விரும்பினர். கோட்டாற்றில கலலூரி இல்லை. அதனுல், இவர் நாகர் கோயிலையடைந்து, கல்லூரியிற் சேர்ந்தார். 'இடைக்கலை' வகுப்பில் தொடங்கிய கல்வி முடிவடையவில்லை ஓராணடு முடிவதற்குள் படிப்பும முடிந்தது தந்தையார் அற்ற குடும்பத்தைத் தாங்கும் சுமை கவி மணிக்குக் கனத்தது; வாழ்க்கை முறையிலே மாற வேண்டிய சூழ்நிலையும் ஏற்பட்டது இவர் அலுவல் ஒன்றைத் தேடிப் பிறைக்க வழி கோலினர்; மனவே, மாணவ வாழ்க்கை நிலை மாறி. மண வாழ்க்கையுள் நுழைந்தார், புத்தேரியில் இருந்த உமையம்மையாரை வாழ்க்கைத் துணைவியாராக ஏற்றார் கவி மணியின் திருமணம் 1901-ஆம் ஆண்டு நடந்தது. அப்பொழுது இவருக்கு வயது இருபத்தைந்து.

"கல்வி தொடக்கத்திலே துன்பமும், முடிவிலே இன்பமும் தரும்" என்பர் குமரகுருபரர். நம் கவிமணிக்கோ, கல்வி என்றும் இன்பமே தந்தது. பள்ளிப் பருவத்தே இவருள்ளம் பெற்ற இன்பத்திற்கு இணை இல்லை. முறையாகப் படிப்பதும், படித்ததைவிடாது எழுதுவதும் இவருக்கு மகிழ்ச்சி அளித்தன. எழுதியதைப் பிறர் கண்டு புகழும் போது இவர் மகிழ்ச்சி அளவிறந்து பெருகும் பிறர் நெருக்கு நேர் நின்று தம்மைப் புகழ்

வதை இவர் விரும்புவதில்லை.

கல்லூரியில் பயிலுங்கால் கவிமணி அரிய பாடல் ஒன்று பாடினர் சொல்லழகும் பொருட் பொலிவும் அதிற்சிறந்திருந்தன. அதைத் தாமே பல முறையும் பாடிச் சுவைத்தார் அதிலும் மன வமைதி பிறக்கவில்லை. பிறகு, உரிய பாட்டினைப் பெரிய கடிதத்தில் தீட்டினர், முன்னரே சென்று ஆசிரியர் அமரும் ஆசனத்தில் வைத்துவிட்டு அகன்றார், அறியாதவர் போல உரிய நேரத்தில், பிறருடன் வகுப்பறைக்கு வந்தார் முந்தி வந்த பையன் ஒருவன் கவிதை கண்டு ஆசிரியரிடம் கொடுத்தான் தமிழ்ப் புலவர் பாட்டின் பொருளை எடுத்து உரைத்தார். கேட்டவர் எவரும் பாராட் டினர். பாட்டின் சொல்லழகும் பொருளழகும் பிறர் உளளத்தைக் கவர்ந்தன. எவருக்கும் அது கவி மணி பாடியது என்பது தெரியாது. ஆனால், இவர் நெஞ்சை ஒளித்த வஞ்சகமா இது? மறை விலே எழுந்த மனமகிழ்ச்சி இவர் முகத்திலே தெரிந்தது. நேர்ப் புகழ்ச்சியினும் இப்மகிழ்ச்சி பெரிதல்லவா?

சரித்திர ஆராய்ச்சியில் நம் கவி மணிக்குப் பெரிதும் தேர்ச்சி உண்டு. இவர் ஆராயாத கல் வெட்டு இல்லை என்றே சொல்லலாம். இவர் பிழைகள் கண்டால், தக்க சான்றுடன் உரிய வகையில் திருத்துவர்; தேவை நேர்ந்தால், மறுப் புரையும் வரைவர்; இவ்வாறு கல்லூரியிற் பயி லும்போதே பல கட்டுரைகளை எழுதினர். அவற் றுள் ஒன்றுதான் '**காந்தளூர்ச் சாலை**' என்னும் கட்டுரை. அஃது அரியதோர் ஆங்கில ஆராய்ச்சிக் கட்டுரை.

இவருடைய ஆராய்ச்சி முடிவுகள் எவர் மனத்தையும் கவரும், மறுப்புரையோ, பொறுப்பின்றி வழுவாது. பேசிலும் இனிமை உண்டு அளவோடு பேசும் பேச்சுக் கேட்டவரைத் திகைப்புறுத்தும் இவர் பிறரிடம் கேட்ட முடிவுகளையே மீண்டும் சொல்லுவதைக் கேட்டால், சொன்னவருக்கே அது புதிய சுவை தரும். நம் கவி மணியின் வாக்கு வளம் அத்தகையது

திருவனந்தை அரசியலில் சாசன ஆராய்ச்சித்துறை ஒன்று இருந்தது. ஒரு கால கணேசப் பிள்ளை என்பவர் அதில் அலுவல் புரிந்து வந்தார். அவர் மனைவியாரின் உறவினர்கள் தேரூரார்கள். ஆதலின், கணேசப்பிள்ளை அடிக்கடி தேரூர் வருவார். அவர் வந்து தங்கும் வீடோ, நம் கவிமணியின் வீட்டிற்குப் பக்கத்து வீடு. கவி மணியும் கணேசரோடு அடிக்கடி அளவளாவுவார். ஒரு முறை, கணேசர் பெரியதொரு சுவடிக் கட்டுடன் தேரூர் வந்தார் கவிமணி, கட்டினைக் குறித்துக் கேட்டும் சரியான பதில் வரவில்லை. கவி மணி உள்ளமோ, கல்வெட்டாராய்ச்சியில் பண்பட்ட உள்ளம். ஆதலின், அஃது அக்கட்டினைக் காண விரைந்தது. கவிமணி கணேசரின் மைத்துனர் மூலம் அக்கட்டினைப் பெற்று, முழுவதும் வழுவாது படித்துக் குறிப்பெடுத்துக் கொண்டார்; பின்பு கட்டினைத் திருப்பித் தந்துவிட்டார்.

கணேசருக்கு இச்செய்தி தெரியாது. ஊர் சென்றவர், ஒரு நாள் '**திருவாங்கூர் டைம்ஸ்**' என்னும் பத்திரிகையைத் திருப்பினார். அஃது, ஓர் ஆங்கில வார இதழ். பல ஆராய்ச்சிக்கட்டுரை

கள் அதனைக் கண்டு மகிழ்ந்தனர். **'நாஞ்சில் நாடன்'** என்னும் கட்டுரையாளர் புனைபெயருடன் கட்டுரை ஒன்று இருந்தது. கட்டுரையைக் கணேசர் படித்தார். அவர் கொண்ட வியப்பிற்கு எல்லை இல்லை! அக்கட்டுரையில் தாம் அரிதின் ஆய்ந்து கண்ட முடிபுகள் பெரிதும் மறுக்கப்பெற்றிருந்தன. **சுங்கான் கடை** என்னும் இடத்தருகே பழங்கோட்டை ஒன்று இருந்தது என்பது அவரது முடிவு. அதனைப் பொய்யாக்கிய 'நாஞ்சில் நாடன்' காட்டிய ஆதாரங்கள் வலியவை. கட்டுரை தம கூற்றை மறுத்தாலும், எழுதியவர் ஆற்றலை அவர் வியந்தார். நம் கவி மணியே அந் 'நாஞ்சில் நாடன்' என்பதைக் கணேசர் அன்று அறியார். இப்படி, மறுப்பெரும் விருப்புடன் மகிழும் திறமை பெரிதன்றோ?

பள்ளிப் படிப்புடன் கல்விக்கு முற்றுப்புள்ளி வைப்பவர் பலர். 'கல்வி கரையில, கற்பவர் நாள் சில.' கரை அற்ற கல்வியை முறையோடு போற்றுவது அரிது. 'இருக்கும் வரை படிக்கவா வேண்டும்?' என்று அற்பர் கேட்பர். 'இறக்கும் வரை ஒருவன் கற்க வேண்டாவா?' என்று வள்ளுவர் வினவுவர். நம் கவி மணியோ, முதிய பருவத்தும் புதியன கற்கின்றார், கல்லாத நாளை 'இல்லாத நாள்' என்கிறார். இவரது உடல் நோயால் நலிவுற்றும், வாய் பாடல் பாடுகிறது!

சில ஆண்டுகளுக்கு முன்னர், கவி மணிக்கு ஒரு நோய் கண்டது. **'எக்ஸிமா'** என்னும் தோலைப்பற்றிய நோயால் நான்கைந்தாண்டுகள் நலிவுற்றார். அன்பூறிய நண்பர் பலர் கவி மணியைக் காணச் சென்றனர். அவருள் ஒருவர் பெரு

வியப்படைந்தனர். காரணம் என்ன? நோயும் பாயுமாயக் கிடந்த நிலையிலும், கவிஞரின் வாய் பாடிக்கொண்டேயிருந்தது. முன்னைய பழம் பாடலையே பின்னையும் அவர் பாடவில்லை. புதியதொரு நூலை முதிய நிலையில் இயற்றியதாகத் தெரிய வந்தது. 'முருகன்மீது பாடினால் நோய் தீரும்,' என்று ஒருவர் சொன்னார் அதன்படி கவி மணியும் பாடினார். ஆகவே, நம் கவி மணி வாழ்வில் கல்விக்கு முடிவேது?

குடும்பச் சுமையும் பொறுப்புணர்ச்சியும் நம் கவி மணிக்கு வரவரப் பெருகின. இவர் கல்லூரிப் படிப்பை இடையே நிறுத்தியதும் அத் தொல்லையாலேதான் ஏதேனும் அலுவல் ஏற்றுக் குடும்ப நிலையை உயர்த்தக கவி மணி விரும்பினார். அரசாங்க அலுவலில் ஆசை எழுந்தது. ஆனால், அஃது எவருக்கும் கிடைக்கும் எளிய வாய்ப்பன்று மேலும், எல்லாரும் எல்லாத் தொழிலிலும வெற்றி பெறல் இயலாது. இயல்பாகவே சிலருக்குச் சில தொழிலில் அமைப்புண்டு. ஒருவர் அமைப்புக்கு இயையத் தொழில் கிடைப்பின், அத்தொழிலில அவர் வளம் பெறுவர்.

நம் கவிமணி இடைக்கலை வகுப்புப் படிப்புத் தடைபட்டவுடன ஆசிரியர் பயிற்சிப் பள்ளிக்குச் சென்றார் ; அங்கு உயர்நத பயிற்சியும் பெற்றார். பயிற்சி முற்றிய நேரம் தேர்ச்சியும் வந்தது. முடிவு தெரிந்ததும் திருவாங்கூர்த தனியரசில் அலுவல் செய்யத் தொடங்கினார் ; 1901-ஆம் ஆண்டில் கோட்டாற்று நடுநிலைப்பள்ளியில் ஆசிரியர் ஆனார். கவி மணியின் திறமை உரம் பெற்றது மேலவர் பலரும போற்றுமாறு தொண்டாற்றினார், மேலவருக்கு அடங்கியும், மாணவரை அடக்கியும், வழி காட்டியும், தம் இனிய குணங்களால் மாணவர்களை மனமகனிய வைத்தார்.

கவி மணி கற்பிக்கும் முறை மாணவர் அனைவர் மனத்தையும் கவர்ந்தது. கவிஞர் கடமை

உணர்ச்சியும் பெருமுயற்சியும் மேற்கொண்டு பாடம் நடத்துவார், பேருண்மைகளையும் சீரிய வழியில் தெரிவிப்பார்; சொல்லும் பொருளைப் பசுமரத்தாணி போல மாணவர் மனத்திற்பதியச் சொல்லுவார், இடையிடையே கேள்வி கேட்டு விடையும் பெறுவார், மாணவர்களையே செய்யு ளுக்கு உரை சொல்லச் சொல்லுவார் வகுப்பிலே சிறந்த அமைதி நிலவும். மாணவர் உள்ளத்திலே களிப்புப் பெருகும் இங்ஙனம் நல்லாசிரியர் கட்கும நம் கவி மணி ஓர் எடுத்துக்காட்டாய் இலங்கினர்.

பிள்ளைகளோடு பழக வல்ல வெள்ளை உள்ள மும் நம் கவிமணிக்கு வாய்த்திருக்கிறது. குழந்தை உள்ளத்திலிருந்தே கவிதை வெள்ளம் புறப்படும். இவர் எதையும் எளிய நடையில் நல்ல பாட் டாக்கி மாணவர்களுக்குத் தருவார், தாமும் அவர்களோடு கூடிப் பாடுவார் சிறுவர்களுக்குத் தேனையும் பாலையும்விடக் கவிமணியின் பாட லிலே விருப்பம் அதிகம். நம் கவிமணி அவ்விளம் பாடல்களிலே பூனையும் புலியும் பேச வைப் பார்; குதிரையையும் குருடனையும் புலம்ப வைப் பார், கோழியையும் கிளியையும் கேட்க வைப் பார், இப்படி, அறிவைக் குழைத்துக் கவிதை புனைவார். பண்ணோடு இசைத்தும் பாடுவார். சிறுவர்களுக்கு இதனினும் வேறு என்ன இன்பம் வேண்டும்?

சில ஆண்டுகளில் கவிமணி கோட்டாற்றுப் போதனை முறைப் பள்ளிக்கு மாற்றப்பட்டார். அதுவும் இவரது தகுதி தந்த வெகுமதியே ஆயிற்று. அங்கும் நம் கவிமணி கற்பிப்பதில் ஒப் புயர்வற்றோ விளங்கினர் ; பின்னர்த் திருவனந்த

புரத்திற்கு மாறினார், அங்குப் 'பெண்கள் போதனா முறைப் பள்ளி' ஆசிரியராய அமர்ந்தார். சிறந்த பணியினை உயர்ந்த முறையில் ஆற்றினார், பெண்களைத் தம் கண்கள் என மதித்து ஒழுகினார் மற்ற ஆசிரியர்களும் மாணவிகளும் இவரிடம், தந்தையாரிடம் காட்டுமன்பு காட்டினார்கள் இதற்குள் அரசியலாருக்குக் கவி மணியின் 'தமிழ்ப்புலமை' நனகு தெரிந்தது அரசர் உயர்நிலைப் பெண் பள்ளித் தமிழாசிரியர் பதவியை இவருககு விரைந்து தந்தார்கள். இவர் அங்கும் புகழ் மங்காது அலுவல ஆற்றினார்

இதறகு இடையே பெண்கள் கல்லூரியில் தமிழ் விரிவுரையாளர் பதவி காலியாயிற்று திருமதி வாட்ஸ் அம்மையார் கல்லூரித் தலைவியார். அவர் கவி மணியின் திறமை கண்டு, அப்பதவிக்கு இவரை உயர்த்த விரும்பினார், கவி மணிக்கும் தம் கருத்தைத் தெரிவித்தார். "எவரேனும பெண்டிர் அப்பதவிக்குக் கிடைத்தால, அப்பதவி எனக்கு வேண்டா, கிடையாவிட்டால், தங்கள் சொல் தவறாது வருகிறேன்," என்றார் கவி மணி. திருமதி வாட்ஸ அம்மையார், கல்வி இலாக்காத் தலைவரிடம் தாமே சென்றார், கவி மணிக்குப் பதவி தரத் தனித்துப் பேசினார். அவர் பேச்சினைக் கேட்ட தலைவரும் அதற்கு ஒப்பினார். ஒப்பிய அவர் நம் கவி மணியைப் **'புகழ் மொழி இதழ்'** ஒன்று வாங்கி அனுப்ப வேண்டினார்.

கவி மணியின் மனப்பண்பு வாட்ஸ் அம்மையாருக்கு நன்குதெரியும் கவிமணி தமையா வேண்டார். எவரிடமும் கெஞ்சி நில்லார். திறமை அறிந்து

தானாய வருவதையே முறையுடன் ஏற்பார். இவ்வியல்பினை வாட்ஸ் அம்மையார் கல்வித் துறைத் தலைவர்க்கு எடுத்துரைத்தார் "எவரது புகழுரையும் அவருக்குத் தேவையில்லை அவர் தக்கவர் என்பதற்கு நானே நற்சான்று தருகிறேன் அவரினும் மிக்கவரில்லை மீறி வேண்டினால், அவர் பதவியே வேண்டா என்பவர். தப்பாது உத்தரவை அனுப்பி வையுங்கள்," என்று சொல்லி வந்தார் இரண்டொரு நாளில் உயர்பதவி கவி மணியைத் தானே தேடி வந்தது.

நம் கவிமணி ஓய்வு பெறும் வரை பெண்கள் கல்லூரியிலேயே அலுவல் ஆற்றினார். பொதுவாகத் தமிழாசிரியரை எவரும் பாராட்டுவதில்லை. வேற்றவர் ஆட்சியிலே விளைந்த மாற்றம் அது. தமிழுக்கே பெருமை ஒழிந்த காலத்தில் தமிழ் ஆசிரியருக்கு எங்கிருந்து பெருமை வரும்? நம் கவி மணியோ, கல்லூரியில் கறியோடு உப்புக்கு உள்ள உறவைப்போல, இன்றியமையாதவராய் இருந்தார். கல்லூரி நூல் நிலையம் கவிமணியின் மேற்பார்வையிலேயே பல்லாண்டு இருந்தது. கல்லூரி 'இதழ்' நடத்தும் பொறுப்பையும் கவிமணி விருப்புடன் மேற்கொண்டார். கல்லூரித் தலைவியார் திருமதி வாட்ஸ் அம்மையாருக்கு இவரிடம் தனிமதிப்பு உண்டு. எல்லாப் பள்ளிச் செய்திகளையும் அவர் கவிமணியுடனிருந்து ஆராய்வார். கவிமணி கல்லூரி விட்டு விலகும் வரை அவ்வம்மையாருக்கு அத்தகைமை அன்பு குறையவே இல்லை.

திருவனந்தைப் பல்கலைக்கழகம் இதற்கிடையே ஒரு முடிவு கண்டது: பெண்கள் கல்லூரி

யில் ஆடவர்களை ஆசிரியராக அமர்த்த அது விரும்பவில்லை. கவி மணியோ, அவ்விதிக்கு ஒரு விலக்கு ஆவர். மேலும், ஆடவர் கல்லூரியிலும் ஒரு பதவி அப்பொழுது காலியாயிருந்தது. கல்லூரித் தலைவர் நம் கவி மணியை அக்கல்லூரிக்கு அழைக்க விழைந்தார். அவர் கவி மணியுடன் ஆலோசித்து முடிவு செய்யத் திருமதி வாட்ஸ் அம்மையாரோடு ஒரு முறை வந்தார். நம் கவி மணியும் செய்தி உணர்ந்தார். கவி மணிக்கு மாறுவதில் விருப்பமில்லை.

“அஃது எனக்கு வேண்டா; தனியுரிமையோடு இங்கேயே இருக்கிறேன்,” என்றார் நம் கவி மணி. பல்கலைக் கழக முடிவினை அவ்விருவரும் காட்டினர்; “இசையாவிடில் நாங்களே மாற்ற நேரிடும்,” என்று கூறினர். அது கேட்ட நம் கவி மணி, “யான் இதுவரை இங்கிருந்தது பதவி வேட்கையால் அன்று; தமிழ் கற்பிக்கப் பெண்டிர் எவரும் முன் வாராமையே யான் இப்பதவியி லிருந்ததற்குக் காரணம். பெண்டிர் முன்வந்தால், யான் விட்டு விலகுவதே முறை; நீங்கள் மாற்ற வேண்டா; நானே நின்றுவிடுகிறேன்; எனக்கு ஓய்வு தந்தருளுங்கள்!” என்றுரைத்து மீண்டார். கல்லூரித்தலைவரோ, குழைந்து பேசும் பணியாளரையே பண்டு கண்டு பழகியவர், அடிமைப் பேச்சுக்களையே பலபடக் கேட்டவர். அவருக்கு இவர் உரை புதுமையாயிருந்தது. இரண்டொருநாளில் கவிமணி எழுதிய விடுதலைத்தாளையும் பார்த்தார். கண்ட இருவரும் துணுக்கம் கொண்டனர்.

இப்போது கல்லூரித் தலைவியார் திருமதி வாட்ஸ் அம்மையார் அல்லர். அப்பதவிக்கு வந்தவர் புதியவரேனும், இந்த நிலை கண்டு நொந்தார்; நல்லவரை வைத்து வேலை பார்க்கத் தமக்கு வாய்ப்பில்லையே என்று ஏங்கினார். "நான் கல்லூரிக்குப் புதியவள்; உங்கள் உதவி எனக்கு இன்றியமையாதது. தலைவரிடம் நான் சொல்லுகிறேன்; கல்லூரியை விட்டு விலகாது இரண்டாண்டையும் இங்கேயே கழியுங்கள், உங்கள் பிரிவு கல்லூரிக்கே துயர் தரும்," என்று பன்முறையும் வேண்டினார் நம் கவி மணியோ, அதற்குச் சிறிதும் இசையவில்லை. இவர் பதில் ஆள் கிடைக்கும் வரை பதவியில் இருப்பது என்னும் முடிவுடன் சில நாள் இருந்தார்; ஆயிரத்துத் தொள்ளாயிரத்து முப்பத்தோராம் ஆண்டில் வேலையினின்று விலகினார்.

உடலில் உரம் உள்ள வரை நம் கவி மணி மாணவர் குழுவைப் பேணி வாழ்ந்தார்; அன்பையே உயிர்ப்பு எனக் கொண்டார்; அழகுப் பொருள்களையே கண்டு மகிழ்ந்தார். மாணவிகள் பேசும் செஞ்சொற்களையே கேட்டு உவந்தார்; தீந்தமிழையே பாங்குற ஆய்ந்தார்; பாடிய வாய் தேனூறுமாறு தீந்தமிழ்க் கவிகள் பல பாடினார். இவர் இத்தகைய இன்பத்தை வேறு எத்துறையிலேதான் பெற முடியும்?

"இலக்கியப் புலவன் கண் மூடிக்கவிஞனாய் உலகை மறப்பவன் அல்லன். இலக்கியம் வாழ்க்கையினின்றே தோன்றுகிறது வாழ்வினை வேண்டியே அது வளமும் பெறுகிறது; வாழ்வுக்கே எக்காலத்தும் அஃது உரியது" இவ்வாறு ஆங்கிலப் பேராசிரியர் ஹட்ஸன் குறிப்பிடுகின்றார். ஆகவே, இலக்கியத் தொண்டும் உலகினில் சிறந்தது ஆகும். இலக்கிய ஆசிரியர்களை 'முடி சூடா மன்னர்கள்' என்பார் எனவே, இலக்கியப் பணி புரியும் எவரும் புவிக்கண் முதல்வர் ஆவர்

நம கவிமணி, புவி புகழுமாறு இலக்கியப் பணியை மேற்கொண்டார். இவருக்குப் பாடும் புலமை இளமையிலேயே அமைந்தது. கவிமணி ஆங்கிலம கற்றது மொழி பெயர்ப்புக்குத் துணை புரிந்தது. சரித்திரத்தில் பதிந்த உள்ளம், இவரைக் கல்வெட்டுப் புலமையில் வெற்றி பெறச் செய்தது. எனவே, பல துறையிலும் நம் கவிமணி, நூல்களை ஆக்கியுள்ளார் மரபு நெறி தவறாது அருந்தமிழைக் கற்ற பெருமையும் இவருக்கு உண்டு. இவர் ஓதலினும ஒழுக்கமே மேல் என மதித்தவர் இவை எல்லாம் இவர்தம் இலக்கியங்களுக்குச் சொல்லொணாச் சிறப்பைத் தந்தன.

நம் கவிமணி இயற்றிய நூல்களுள் பயிலாத பொருளே இல்லை. உலக இன்பத்தை உயரிய முறையில் அவை எடுத்தியம்பும்: மெய்யுணர்வு இன்பத்தையும் ஐயுறவின்றி ஆராயும்: அரசியலை

யும், அருளியலையும் அழகுறத் தொகுத்துத் தரும்; பொருளுரையையும் அறவுரையையும் கதையின்றிக் காட்டும், மக்கள் நலமுடன் வாழ்வும் பெறத் தெளிந்த வழி வகுக்கும். எனவே, நம் கவிமணியின் இலக்கியத்தை எல்லாரும் விரும்புவர்.

பலரும் இவரைப் போற்றக் காரணம் பிறிதொன்றும் உண்டு. கருத்து உயர்ந்ததாய் இருப்பினும், விரித்துரைக்கும் முறையில் நடைச்சிறப்பு வேண்டும். கவிமணியின் நடை, தனிமிகச் சிறந்தது. படித்துப் பழகாத பாமரரும் அதனைப் பாடிப் பழகலாம். எளிமையும் இனிமையும் அதன் சீரிய இயல்புகள். மிகக் கடினமான சந்திகள் அதில் இரா; ஒன்றிப் பதம் கூட்டும் தொல்லையும் நேராது. தமிழின் போக்கும், கருத்தின் அமைப்பும் கற்பவர் உள்ளத்தைக் கவரும்; எல்லாருக்கும் இனிக்கும் தமிழே கவிமணிக்குச் சொல்லேவலியாய் அமைந்துள்ளது.

இனி இவர் இயற்றிய சில நூல்களின் சிறப்பியல்புகளைத் தனித்தனியே காண்போம்:

**'குதிரையின் புலம்பல்'** என்பது ஒரு பாட்டு. நமக்கு விலங்கினங்கள் எவ்வளவோ ஏவல் செய்கின்றன! நன்மை பெற்ற நாம் மறந்து அவைகட்குத் தீங்கினையும் இழைக்கின்றோம். இக்கொடுமைகளைக் கவிமணி அதில் எடுத்துக் காட்டுகிறார். கேட்கும்போது கல் நெஞ்சும் கரைந்துருகும். கிடைத்ததைப் பகிர்ந்து உண்ணுமாறு **'அப்பம் திருடின எலி'** பாட்டிலே சொல்லும். பத்திச் சுவையின் உச்சநிலையை **'அன்பின் வெற்றி'** என்னும் தொடர்நிலை மொழியும். **'தேசியக்'**

**கொடி, கதர் விற்பனை'** முதலிய பாட்டுக்கள் நாட்டுப் பற்றினை ஊட்டும் 'கள்ளவழி போவாரை எள்ளளவும் எமன் விடான்,' என்னும் இக்கருத்தினை **'நெற்பானை எலி'** தப்பாது வற்புறுத்தும். இப்பாடல்கள் எல்லாம் **'மலரும் மாலையும்'** என்ற தொகுப்பில் உள்ளன; இவை போன்ற பிறவும் அதில் உண்டு.

**ஆசிய ஜோதி:** இத்தொடர், **'ஆசியாக்** கண்டத்தின் பேரொளி' எனப் பொருள்படும். அப்பேரொளி ஆவார் **சுத்தோதனர்க்கு** மகவாய் வந்துதித்த **புத்தர்.** அவர் உலகிற்கே உய்ய வழி காட்டிய பேரொளி ஆவார். **எட்வின் ஆர்னல்டு** எனும் ஆங்கிலப்பேராசிரியர் **'ஆசிய ஒளி'** என்ற புத்தரைக் குறித்த நூல் ஒன்று இயற்றினார். நம் கவி மணி தமிழ் மணம் கமழ, அதைத் தழுவி **'ஆசிய ஜோதி'** என்னும் நூலைப் பாடியுள்ளார். **புத்தர் அவதாரம், புத்தரும் ஏழைச் சிறுவனும், கருணைக்கடல், புத்தரும் மகனிழந்த தாயும்** என்னும் பகுதிகளைக் கொண்டது இந்நூல்.

**மலரும் மாலையும்.** இஃது ஒரு பல்சுவைக் கவிதை நூல். வலிய பேருண்மைகள் இதில் மெல்லிய கவிமலராய்ப் பூத்திருக்கின்றன. உதிரி மலர்கள் போலத் தனிப் பாடல்களும் உண்டு. தொடர்ந்த கவிதைகளும் மாலையைப் போல மணம் வீசும். எனவே, இந்நூல் **'மலரும் மாலையும்'** எனப் பெயர் பெற்றது; சிறுவருக்கும் பொருள் இனிது விளங்கும் எளிமையுடையது. பாட்டில் பயில்வன எல்லாம் வெள்ளைச் சொற்

களே. அவை நம் உள்ளத்தைக் கொள்ளை கொள்ளும் சில பாடல்கள் ஆங்கில மூலத்திலிருந்து தமிழுக்கு வந்தவை 'மூன்று செய்திகள்' என்ற தலைப்புடன் கூடிய பாடல், **வில்லியம் பிளேக்கு** என்னும் ஆங்கிலக்கவிஞரின் பாடலின் அடியொற்றி எழுந்தது. **'அஞ்சலிப் பாடல்கள்,'** தாகூரின் **கீதாஞ்சலியைப்** பின்பற்றியவை இவ்வாறே வடமொழிக் கவிதையும்,வங்காளிப்பாடலும தமிழுருப் பெற்றுள்ளன.

**பாரசீக கவியமுதம்:** **'உமர் கயாம்'** என்பவர் சிறந்த பாரசீகக் கவிஞர்; கவிதைப் பண்பு நிறைந்த மேதை. **'ரூபாயத்து'** என்பது அவர் பாடிய நூல். **'பிட்ஜெரால்டு'** என்பவர், ஆங்கிலத்தில் அதனை மொழி பெயர்த்தார். அதன் துணையால நம் கவிமணி, தமிழில் அதனை இயற்றினார். ஆங்கிலத்தில் நூற்று எண்பத்தைந்து பாடல்கள் உள்ளன. அவற்றுட் சிறந்தனவற்றைப் பொறுக்கி அறுபத்தொரு பாடலைக் கவிமணி இயற்றினார். நிலையின்மை, உயிரின் சிறுமை, உலக இயற்கை, வாழ்க்கை இன்பம் முதலிய பல தலைப்புக்களிலே அவை மிளிரும். இத்தமிழாக்கம் மொழி வளர்ச்சிக்கு ஒரு சீரிய தொண்டு; தமிழ்க் கவிதைக்கே புதிய முறை; உயிரும் ஊக்கமும் தருவது.

**மருமக்கள் வழி மான்மியம்:** இதுவும் ஒரு கவிதை நூல்; நகைச்சுவையூட்டும் முறையில் மிகுதியும் எழுதப் பெற்றது. முதலில் **'தமிழன்'** என்ற இதழிலே இந்நூல் முழுவதும் வெளி வந்தது. இது நாஞ்சில் நாட்டு வேளாளரைச்

சீர்திருத்திய நூல், மருமக்கள் வழி உரிமையை வெட்டி வீழ்த்திய கோடரி; இது பிறர் குறையை நகைச்சுவையோடு மறையாது சொல்லும், மரு மக்கள் வழி வந்த குடும்பத்தின் சீர்கேட்டைச் சித்திரிக்கும் இந்நூல் வெளிவந்தபோது எல்லார் சிந்தையையும் திருப்பிற்று. இளைஞர் யாவரும் முனைந்து எழுந்தனர் மக்கட்டாயக் கிளர்ச்சி, திக்கு எல்லாம் நடந்தது. நாஞ்சில் நாட்டினர் மக்கட்டாயச் சட்டமும் பெற்றனர் இத்தகைய நன்மையைச் செய்தது இந்நூல். இதன் நயம் செப்புந் தரம் அன்று

**சுசீந்தை மாலை.** கவிமணி அவர்கள் இள மையில் இயற்றிய நூல் இது. இவர் தமது இருபதாம் ஆண்டில் இதனைப் பாடினார். இது சாந்த லிங்கத் தம்பிரான் தூண்டுதலால் வெளி வந்தது. 'சுசீந்தை' என்பது 'சுசீந்திரம்' என் பதன் மரூஉ மொழி. இத்தலம் குமரி முனையின் அருகே உள்ளது, மிகப் பழைய சிற்றூர். '**தாணு மாலயன்**' என்பது இங்குள்ள பெருமானுக்குப் பெயர். நூல் முழுவதும் இப்பொழுது இல்லை இளமையிலேயே எழுதிய பிரதிகள் தவறின. 'திங்கள் உன் கருணை காட்டும்,' என்று தொடங் கும் ஒரே பாட்டு உண்டு இதன் தமிழ் நடை சற்று மிடுக்கானது

**அழகம்மை ஆசிரிய விருத்தம்:** கவி மணி இயற்றிய முதற்கவிதை நூல் இதுவே; பத்து ஆசிரிய விருத்தங்களால் ஆனது. கவிமணி யின் செந்தமிழறிவும், கற்பனைத் திறமும் இதில் களிநடம் புரியும். இது பொருட்சிறப்பில்

அருட்பாவை ஒத்தது, கற்பனையில் கம்பனையும் வென்றது, இனிமையிலே திருவாசகத்தை நிகர்த்தது குலசேகரபுரம் சிவராமலிங்கம் பிள்ளை என்ற நல்ல தமிழறிஞர், இந்நூலைக் கண்டார் கண்டதும், அவர்கொண்ட உவகைக்கு ஓர் எல்லை இல்லை அவர் நம் கவிமணியை நோக்கி, "தம்பி, நீ ஏதாவது சித்து வைத்திருக்கிறாயா?" என்று கூறி வியந்தார் இப்படிப் பிறர் நயக்கும் புலமை காட்டிய வியத்தகு நூலிது

இந்நூல்களை அன்றிக் கவி மணி பாடிய தனிப்பாடல்களும் பல உள. வாழ்த்துரையும், கையறுநிலையும், சாற்றுக்கவியும் எனப் பல துறை பற்றிப் பாடப்பட்டவை அவை. கல்வெட்டு ஆராய்ச்சியும் சரித்திரப் பயிற்சியும் கவிதையைப் போலவே இவர் மனத்திற்கு உகந்தவை. இவர் பருவம் முதிர அவற்றில் இவருக்குப் பெரிதும் ஈடுபாடுண்டு. இவர் இலக்கிய ஆராய்ச்சியும் இடைவிடாது செய்வார். இவரது சரித்திரக் கட்டுரைகள் பலவற்றைப் பத்திரிகைகள் தாங்கிவரும். இவர் ஆங்கிலத்திலும் கட்டுரைகள் எழுதுவார். 'காந்தளூர்ச் சாலை' என்பது ஆங்கிலத்தில் எழுதிய அரியதோர் ஆராய்ச்சி நூல். '**நாஞ்சில் நாட்டு மக்கள் வரலாறு**' என்ற கட்டுரையும் அது போல்வதே. பலகிளர்ச்சிகளுக்குக் கவி மணி தலைமை தாங்கியும், சிறப்புரை ஆற்றியுமுள்ளார் அவற்றுட்சில புத்தக வடிவிலும் வெளிவந்துள்ளன.

இயற்றமிழ் அளவோடு நம் கவிமணி முயற்சி நின்றதில்லை. நம் கவிமணி இசையும் பாடும்

இசைத்தமிழ்ப் புலவரும் ஆவர். இவர் தமிழிசை இயக்கத்துக்குப் போதிய ஆதரவு காட்டினார்; 'தமிழில் கீர்த்தனைகள் இல்லை,' என்ற குறையை நீக்கினார். இவருடைய இசைப்பாடல்கள் இலக்கியப் புலவர்க்கும் இன்பம் ஊட்டும்; இதயக் கருத்தைப் பொருத்தமாக வெளியிடும்; நடனக் கலையாளருக்கும் நன்கு பொருந்தும். ஒலி பரப்பு நிலையங்களை இவர்தம் இசைக்கவிகள் நிரப்பும். இசைத் தட்டுக்களும் இவர் பாடல்களின் இன்னிசையை ஒலிக்கும். இவருடைய இசைக்கவிகளுட்சில '**காதல் பிறந்த கதை**' என்ற நூல் வடிவில் வெளிவந்துள்ளன. பிற எல்லாம் '**தேவியின் கீர்த்தனங்கள்**' என்ற பெயரிலே விரைவில் வெளிவரும்.

'பாம்பின் கால் பாம்பு அறியும்,' என்பர். புலமை பற்றிய செய்தியும் அப்படியே. புலவனைப் புலவனே உணருவான். கவிமணியின் பெருமை உணர்ந்த ஒரு புலவர் பேசுவதிது:

"உணர்ச்சியானது சொல், இசை, கட்டுக்கோப்பு இவைகளோடு ஒத்த உருவத்தில் வெளிவந்துவிட்டது என்றால், அதுவே கவி. இப்படி எழுந்த ஒரே கவிக்காக அந்தமொழிக்கு உரியவர் ஒரு விழாக்கொண்டாடினால், அது பொருத்தமே. தேசிக விநாயகம் பிள்ளை இவ்விதமான கவிகள் பாடியிருக்கிறார்".

பேரும் புகழும் பெருவாழ்வின் சிறப்பியல்புகள். பெருவாழ்வு வாழவே நாம் பழகுதல் வேண்டும். ஆனால், அவ்வாழ்வு ஓரிருவர் கூடி விருப்புடன் தரும் பரிசு அன்று. 'தன்னைத் தலையாகச் செய்வானும் தான்,' என்றார் ஒரு தமிழ்ப்புலவர். மேயும் மாட்டின வாயிலே புலலைத் திணிப்பதில்லை. தன் முயற்சியாலேயே ஒருவருக்கு உயர்ச்சிவரும். இப்படி உயர்ந்த பெரியார் புகழ்ச்சியே என்றும் நிலைத்து நிற்கும்; அவர் உயர்ந்த நெறி நிற்க நமக்கும் மகிழ்ச்சி தரும். பிறர் மகிழத் தம் முயற்சியால் உயர்ச்சி எய்திய சீரியர் சிலரே. அச்சிலருள்ளும் தலை மணியாய் உயர்ந்தவர் நம் கவி மணியே ஆவர்.

அலுவல் ஆற்றிய துறையிலும் நம் கவி மணி பெரும்பெயர் பெற்றார். பெற்ற முறை முன்னரே நமக்குத் தெரியும். ஆயினும், அஃது ஒரு வரையறைக்கு உட்பட்டது.எல்லை கடந்து இவர் புகழ் விரியத்தொடங்கியது ஓய்வுபெற்ற பிறகே ஆகும். அதன் பின்னரே இவரது இலக்கியப் பணியுள் பெரும்பகுதி நடந்தது. ஆயிரத்துத் தொள்ளாயிரத்து முப்பத்தொட்டாம் ஆண்டு நம் கவிமணியின் கவிதைகள் **'மலரும் மாலையும்'** என்ற தொகுப்பிலே வெளி வந்தன. அந்நூல் மணத்தோடு கவி மணியின் புகழ் மணமும் வீசிற்று. அந்நூலை அன்று படியாதவர்களும் இல்லை; படித்தவருள், போற்றுதவர்களும்

இலலை இந்துப் பத்திரிகையில் சிறிய பாராட்டு ஒன்றும் வந்தது. மனமகிழ்ந்து கவிமணியைப் பாராட்டினார் பலர். மனத்தோடு அவருக்கு அமைந்த குணமும் அவரது புகழ்மையை உயர்த்தியது.

ஆயிரத்துத் தொள்ளாயிரத்து நாற்பதாம் ஆண்டு சென்னை மாகாணத் தமிழ்ச் சங்கத்தின் ஏழாவது ஆண்டு விழா நடந்தது. **குமார ராஜா சர் முத்தையச் செட்டியார்,** அவ்விழாவினைத் தொடங்கி வைத்தார். **திவான் பகதூர் நாராயணசாமிப்பிள்ளை** விழாத் தலைவர். தமிழ்ச் சங்கத்தார் புலவர் சிலருக்குப் பட்டம் வழங்கத் திட்டமிட்டிருந்தனர். அக்கூட்டத்தில் புலவர் குழுத் தலைவர் உமாமகேசுரனார், நம் கவிஞருக்குக் **கவி மணிப்** பட்டம் வழங்கினார். அன்று முதல் இவரது இயற்பெயர் மறைந்து '**கவி மணி**' என்னும் சிறப்புப் பெயரே பெரிதும் வழங்குகிறது.

செட்டி நாட்டு மக்கள் நல்ல கலையார்வம் உள்ளவர்கள், வரையாது வழங்கும் வள்ளல்கள்; கவி மணியைப் போற்றுவது தமக்குக் கடமை எனவே அவர்கள் கருதினார்கள். இதற்கு விரைந்து வந்திராத கவிமணியைப் பரிந்து வந்து அழைத்தார்கள். ஆத்தங்குடி நகரத்தார் சார்பிலே பாராட்டுக் கூட்டம் ஒன்று நடந்தது. பல்லாயிரக் கணக்கில் மக்கள் குழுமியிருந்தார்கள். **செட்டி நாட்டு அரசர் அண்ணாமலை வள்ளல்** கவிமணியை வரவேற்றார், அரியதொரு சொற்பொழிவும் நிகழ்த்தினார். புலவரைப் புரவலர் போற்றிய பழைய மரபின்படி கவி மணிக்

குப் பொன்னாடை போர்த்தினார், வெள்ளிப்
பேழையுள் வைத்த புகழ்மொழி இதழ் ஒன்றை
யும் தந்தார்.

அண்ணாமலை வள்ளல் மறுநாள் கவிமணிக்கு
விருந்து ஒன்று நடத்தினார். சுவைச் செல்வரும்
கவிச் செல்வருமாய்ப் பலர் வந்து கூடினர். விருந்
தின் முடிவிலே அண்ணாமலையார் ஆயிரம் ரூபாய்
அளித்தார், காணிக்கை எனக் கைக்கொள்ளு
மாறு கவி மணியை வேண்டினார். கவி மணிக்
குப் பணம் பெற மனம் இல்லை, மறுக்கவும் முடிய
வில்லை. குறிப்பறிந்த மன்னர் அதை வெள்ளிக்
கலங்களாக அவரில்லத்திற்சேர்த்தார். கவி மணி
அவற்றைத் தமவெனக் கொள்ளவில்லை, அம்
மதிப்பு விலையை மாணவர் பரிசுத்தொகையாக
கினார்

அடுத்த ஆண்டே கலையன்பர் பலர் நெல்லை
யில் கூடினர், கவி மணியைத் தம் பதிக்கு வர
வழைத்தனர். பெருங்கூட்டம் ஒன்று கூடிற்று.
விருந்தும நடனமும் இவர்பொருட்டு நடந்தன.
இறுதியில் பொன் தகட்டில் பொறித்த 'புகழ்
மொழி இதழ்' ஒன்று வழங்கினார். இப்படிப் பல
ரும் நாடுவது கண்டு நம் கவிமணியைப் பதவிகளும்
தேடி வந்தன. சென்னைப் பல்கலைக் கழகம் தமிழ்ப்
பேரகராதி வேலைக்கு இவருதவியை நாடிற்று.
திருவனந்தைப் பல்கலைக் கழகப் பாடக் குழுவி
லும் பாட புத்தகத் திருத்தக் குழுவிலும் இவர்
முழுவதும் இருந்து பணியாற்றினார் கடந்த ஆண்
டில் அண்ணாமலைப் பல்கலைக் கழகமும் இவரைப்
பேராசிரியர் பதவிக்கு அழைத்தது. கவி மணி
யின் உடல் நிலை அதனை ஏற்க மறுத்துவிட்டது.

கவிமணியின் எழுபதாவது ஆண்டு விழா வந்தது. நாடெங்கும் உள்ள மக்கள் அதனைக் கொண்டாடினார்கள். நாகர் கோயிலில் திருவிதாங்கூர் நீதிபதி **சத்திய நேசன்** தலைமை தாங்கினார் கூட்டத்திற்குக் கவி மணியும் அழைக்கப் பெற்றார். பல பெரியார் பாராட்டுரை வழங்கினர். பிறந்த தின நினைவாகக் '**கவி மணி மலர்**' வெளி வந்தது. இதை ஒட்டிச் **சுத்தானந்த அடிகள்** கவி மணியின் வரலாற்றை எழுதினார். எழுபதாண்டு நிறைந்த கவி மணியின் உடல் நிலையும் சிறிது பழுதுற்றது. ஆயினும், அவரது புகழ வலி குறையவில்லை

பழுமரம் நாடும்பறவைபோலக் கவிமணியைப் உழுவலன்பர் பலர் தேடிவந்தனர். சென்ற ஆண்டில், செந்தமிழ்ப் புரவலர் **ஆர். கே. சண்முகம் செட்டியாரவர்கள்** தலைமையில் பலர் இவர் இருக்குமிடம் வந்தனர். கவி மணியைக் கண்டு களிகூர்ந்தனர். பொன்னாடை போர்த்தி நெடுநாள் இருக்க வாழ்த்தினர். திருவாவடுதுறை மடத்தலைவர் **அம்பலவாணர்** அண்மையில் அங்கு வந்தார். வந்தவர், அன்புடன் நம் கவி மணியை வரவழைத்தார்; கவி மணிக்குப் பொன்னாடை போர்த்திப் புகழுரை நல்கினார். ராஜாஜி கையும் கனியுமாய் வந்து பல முறை இவரோடு அளவளாவுவார். இப்படிப் பலரும் விரும்பப் பயன்படுவார் ஒரு சிலரே!

தம் காலத்திலேயே போற்றப்பட்ட புலவர் நேற்றுவரை இல்லை. அதிகமானுக்கு ஔவையாரும், சோழனுக்குக் கம்பரும் பண்டு பெயர்பெற்றவர். இடைக்காலத்தில் தமிழ்நாட்டிலே நிலைமாறியது, வரகவி பாரதியாரை உரமில்லாமல் கைவிட்

டது. நல்ல வேளையாய் நிலை மாறுதலிலே அந்தக் கவலை தொலைந்தது இன்றைய தமிழர் புலவரைப் போற்றத் தொடங்கிவிட்டனர்; புலவர்களுக்குப் புகழ்மொழி வழங்குகின்றனர்; பாராட்டுரை தீட்டுகின்றனர், பொன்னுடை போர்த்துகின்றனர், நினைவு மலரைப் புனைகின்றனர்; காணிக்கை தந்து களிக்கின்றனர், அழகிய பாடல்களை அச்சிடுகின்றனர். இதிலே மகிழ்ச்சி நமக்குப் பெரிதில்லை. இப்புகழ்ச்சிகள் அனைத்தையும், வழுவாது நம் நாடு கவி மணிக்குத் தந்ததே! அதிலேதான் நமக்கு மகிழ்ச்சி மிகுதி!

குணமே ஒருவருக்கு மணம் தரும் குணம் அற்ற குலத்தாலும் பிறப்பாலும் பயன் இல்லை 'நல்லார் குணங்கள் உரைப்பதுவும் நன்று,' என்பது நம்மவர் வழக்கு. 'குணம் என்னும் குன்றேறி நின்றாரே பெரியவர்,' என்பது வள்ளுவர் உள்ளம். நம கவி மணியின் பெயருக்கும் புகழுக்கும் காரணம் குணநலமே.

'இளமையிலேயே வளமுற்ற குணங்களை இவர் பெற்றார், காலையில் எழுவதும், ஆலயம் தொழுவதும் விழுமிய செயல் எனக் கண்டார்; மேலோர் பலரை அணுகி வேண்டுவன கேட்டார்; தம்பிரானிடம் செந்தமிழ் கற்றார்; கவித்திறம் கொண்டு கடவுள்மீது தோத்திரம் பாடினார்; தருக்கி நோக்கும் செருக்கினை விட்டார், பிறர் புகழ்ச்சியே பேசினார், குடத்துள் விளக்கு என அடக்கமும் பூண்டார்; எவருக்கும் இன்சொல்லை எடுத்து வழங்கினார்; தம் மானம் பேணித் தமிழ் வாழ்வு வாழ்ந்தார்; புலமைக் காய்ச்சலைத் தலை கவிழச் செய்தார்; பெற்ற அன்னையாரை மறவாது பேணினார்; உதவி செய்தவர்க்கு நன்றியும் காட்டினார்

நம் கவிமணி, தந்தையார் மறைவிற்குப் பின்னர்த் தம்மைப் பேணிய தாயாரை வாயார வாழ்த்தினார்: அவர் பெயர் அறியும் வகையில் உயரிய வழியும் செய்தார்; அண்ணாமலை வள்ளல் அளித்த ஆயிர ரூபாயைத் தாயாரின் பெயரால் பரிசு ஆக்கினார். திருவனந்தைப் பல்கலைக் கழக

ழும் அதை ஏற்றது மூலதன உதவியையும் சில தினத்தில தந்து வைத்தார் '**ஆதிலட்சுமி அம்மையார் தமிழ்ப் பரிசு**' என்பது அது. இனிய தமிழ் கற்கும் மாணவர்க்கே அவ்வரிய பரிசு கிடைக்கும் பி.ஏ. தேர்வில் முதல் தரத்தில் தேர்ந்தவருக்கே அப்பரிசு வாய்க்கும் கவி மணியின் தாயன்பும் மொழியன்பும் இதிலே தலை சிறந்துள்ளன.

'நன்றி மறப்பது நன்றன்று,' என்றார் வள்ளுவர்; 'மறப்பது ஐயறிவின் குற்றம்,' என்றும் கூறினர். எனினும், மறவாது நன்றியைப் போற்றுவார் சிலரே. கவிமணிக்கு நன்றி இயற்றினோர் பலருண்டு எவரையும் அவர் மறந்து அறியார் ராஜாஜி நோயுற்ற நம் கவி மணியைக் கண்டு பேசினார் மிக்காராய அவர் நினைவைக் கவிமணி தக்க முறையில் போற்றினார்; அவர் மீது சில பாடல்கள் இயற்றி, அவரை அழியாப் புகழாளர் ஆக்கினார். "இனிய கனிகள் கையில் எடுத்தீர் எளியேன் இருக்கும் இடம் தேடி நடந்தீர்; கனியும் அன்பால் உள்ளம் கனியச் செய்தீர்," என்றுருகி நம் கவிமணி நன்றி காட்டினார். பொன்னுடை போர்த்திய அண்ணாமலை அரசருக்கும் பாமாலை சூட்டினார்; "பெரியன் அண்ணாமலை மன்னன், அவன் நீடு வாழ ஈசனை நான் நித்தம் தொழுவேன்," என்று பாடினார்; தீட்சை அளித்த குருவினையும் மறவாது மாட்சிமைப்படுத்தினார். இந்நன்றி மறவாப் பெருங்குணமே நம் கவிமணியைக் குன்றின்மேல் இட்ட விளக்கு ஆக்கிற்று.

பள்ளித் தோழரை உள்ள வரை மறவாத உளத்தினர் ஒரு சிலரே. இறுதி வரை அவரைப்

பெரிதும் போற்றுவார் மிகமிகச் சிறியர். சிதம்பர கிருட்டிணர் என்பவர் நம் கவிமணியின் பள்ளித் தோழர், ஒரு சாலை மாணவராய்ப் பிரியாது பயின்றனர், கல்வெட்டாராய்ச்சியில் சில வேலை இவரோடு உழைத்தவர் கவிமணிக்கு அவரிடம் அன்பு மிகுதியுண்டு அவர் இறந்து விட்டார். இறப்பினும் இவருக்கு நட்புக் குறையவில்லை. நட்பின் நினைவுக்குறியாய்க் '**காந்தளூர்ச் சாலை**' என்னும் நூலை அவர்க்கு உரிமை ஆக்கினார். இப்படி நடப்பது அல்லவா சீரிய நட்புரிமைப் பண்பு!

பட்டமும் பதவியும் உதவி. நாட்டவர் இவரைப் புகழ்ந்தனர் அப்பொழுதும் இவர் தம் எளிமை பேசினார், 'புகழ் மொழி கேட்கும் எனது உடைமை பெருமிதம் கொண்டுவிடுமோ!' என்று வருந்தினார், 'ஆனைக்கு அணியும் பொன் னுடையை ஆட்டிற்கு அணிவித்தீர்கள்!' என்று செட்டி நாட்டில் சுட்டினார் இப்பண்பே நம் கவிமணிக்கு அணி. இஃதே இவரைப் புவியினுக் கும் அணியாக்கிற்று.

நம் **அரசவைக் கவிஞர் இராமலிங்கனார்** கவிமணியின் தோழர். அவருக்கு அறுபதாம் ஆண்டு நிறைவு விழா வந்தது. அவரை அரச வைக் கவிஞர் என அரசியலும் ஆக்கிற்று நம் கவிமணி தப்பாது அப்போது வாழ்த்துக் கவி அனுப்பினார் அதில், 'இராமலிங்க நண்பனே. செந்தமிழ் நாட்டரசவையில் கவிஞர்ச் சந்த தமும் சீரோங்கி வாழ நான் செந்தில் சண்முகனை நிதமும் போற்றுவேன்!' என்று அன்பு காட்டி னார் இப்படிப் பிறர் நலம் கண்டு மகிழும் சிறப் புரிமை நம் கவிமணிக்கே பிறப்புரிமை!

## II

### அரசவைக் கவிஞர்

# இராமலிங்கம் பிள்ளை

### பிறப்பும் வளர்ப்பும்

மோகனூர் என்பது சேலம் மாவட்டத்தைச் சேர்ந்த ஒரு சிற்றூர். அது காவிரி ஆற்றின் வடகரையிலே அமைந்தது. நீர் வளமும் நிலவளமும் படைத்தது. மக்கள் மனவளத்தாலும் மாட்சி உற்றது. சிவன் கோயிலும் காளி கோயிலும் அங்கே உண்டு. தேரும் திருவிழாவும் அவ்வூரில் நன்று நடைபெறும்.

**வேங்கடராமப்பிள்ளை** என்பவர் அவ்வூரில் போலீஸ் தலைமை ஊர்க் காவலர். நல்ல உருவும் திருவும் உடையவர்; கள்ளம் கபடு அற்ற உள்ளத்தினர். ஆங்கிலக் கல்வி அறியாதவர்; எனினும், எவரையும் வெல்லும் நல்ல அறிஞர்; செல்விருந்து ஓம்பி, வருவிருந்து பார்த்திருப்பவர். கடவுளை வணங்கலும் உடைந்தவர்க்கு உதவலும் அவர்தம் சீரிய இயல்புகள். அவர் தம் அலுவலின் திறமையால் தலைமைப்பதவிக்கு உயர்ந்தவர்.

அவர்தம் வாழ்க்கைத் துணைவியார் **அம்மணி அம்மையார்**. அவரோ பெண்ணிற் பெருந்தக்கார்; சேலம் 'காகிதக்காரர்' வீட்டிற் பிறந்த

வர், நொந்தவர் இடனறிந்து உதவுபவர்; தொண்டர் வளம் அறிந்து வாழும் கொள்கையார், கடவுள் வழிபாட்டிலோ, அவரினும் சீரியர். இங்ஙனம் தக்கவர் இருவரும் வாழ்வினிற் புகுந்தனர், இல்லறம் என்னும் நல்லறம் நடத்தினர்; அன்பும் அறனும் இல்வாழ்க்கையின் பண்பும் பயனுமாகக் கொண்டனர்.

அவ்விருவருக்கும் ஏழு குழந்தைகள் பிறந்தன. ஆயினும், ஆண் குழந்தை ஒன்றேனும் நிலைக்கவில்லை. அக்கவலை அவர்தம் மனநிலையைக் குலைத்தது. "எட்டாவது பிள்ளை கிட்டவேண்டும்", என்று அம்மையார் இயற்றிய அறங்கள் அளவில. ஆலயத்தில் பூசையும் போற்றுதலும் மாசின்றி நடந்தன. பிறக்கும் ஆணைக் '**கருப்பன்**' என்று வழங்கத் தாயார் விழைந்தார். கருப்பன் அருளால், ஆண் குழந்தை பிறக்கும் என்பது அம்மையாரின் கருத்து. அக்கருத்திலே பொருத்தமும் இருந்தது. எட்டாவது பிள்ளையும் கிட்டியது.

தந்தையாருக்கும் மைந்தனைப் பெறுவதிலே தான் மகிழ்ச்சி மிகுதி. பெண் பிறந்த செய்தி கேட்டபோதெல்லாம் அவரது மனம் புண்படும். ஒருமுறை வேங்கடராமப்பிள்ளை பரிசல் துறைக்கு வந்தார்; அந்தணர் ஒருவரைக் கண்டார்; கண்டதும் உண்டி கொடுத்து உதவினார். பின்னர் இருவருக்கும் இடையே பேச்சு நடந்தது. மறையவர் பிள்ளையின் மனக்குறை அறிந்தார். "இறையருளால் துரைமகன் பிறப்பான்! கவலை கொள்ளேல்! பிறக்கும் மகனை **இராமலிங்கன்** ஆக்கு," என்று சொல்லி, மறையவர் அகன்றார்.

மறையவர் உரைத்தது மனைவியாருக்கும் தெரிந்தது. களிப்புக் கடலில் இருவரும் மூழ்கினர். விரும்பியது கிட்டினால், அரும்பும் மகிழ்ச்சிக்கு அளவு ஏது?

ஆயிரத்து எண்ணூற்று எண்பத்து எட்டாம் ஆண்டு, அக்டோபர்த் திங்கள், பத்தொன்பதாம் நாள், வெள்ளிக்கிழமை இரவில் அம்மனை அம்மையார் திருமகன் ஒருவனைக் கரு உயிர்த்தார். பெற்றவர் இருவர்க்கும் மகிழ்ச்சி மட்டற்றது. 'எட்டாவது பிள்ளை உலகைக் கட்டியாளும்,' என்று கேட்டவர் போற்றினர். சொல் தவறாத தந்தையார் இராமலிங்கம் பெயரை மைந்தனுக்கு மறவாது சூட்டினார். தாயார் தனயனைக் கருப்பன் என்றே விருப்புற்று வழங்கினார். அம்மைந்தரே நம் **கவிஞர் இராமலிங்கனார்.**

மைந்தர் தாயாருடன் ஓயாது ஆலயம் செல்வது உண்டு. தாயார் பிள்ளைக்குப் பொருள் கொடுப்பார். நம் பிள்ளையோ, அதனை வாங்கி வறியார்க்கு வழங்குவார். "கடவுளே, நீ காப்பாற்று; எனக்கு நற்புத்தி கொடு" இதுவே தாயிடம் அவர் கோயிலில் கற்ற பாடம். திங்கள்தோறும் வீட்டிலே துறவிகட்கு அன்னம் இடுவது வழக்கம். அதில் பிள்ளையையே, நீரும் இலையும் தரப் பெற்றவர் பழக்குவார். மைந்தரும், பெற்றோர் கருத்தறிந்து விருப்புடன் வேலை செய்வர். காலையில் எழுதல், கடவுளைத் தொழுதல், நீராடல், கல்வி நவிலல், கெட்டது போக்கல்— இப்படி வளமான குணங்கள் பல இளைஞரிடம் முகிழ்த்தன.

அந்நாள் நாமக்கல் வட்டாரப் போலீசு மேற்பார்வையாளர் **இராகக்கு உசேன்** என்பவர்

அவர் உயரிய முகமதிய குடும்பத்தைச் சேர்ந்தவர். அவர் மனைவியாரான **பதுலா பீகம்** என்பவர் ஆர்க்காட்டு நவாபுவின் பரம்பரையினர். இருவருக்கும் எல்லா நலமும் எய்தியிருந்தன. எனினும், குழந்தை இல்லை. கவிஞரின் தந்தையாருக்கு உசேன் வீட்டில் பழக்கம் மிகுதி. அவர் நாளும் காலை மாலை தவறாது சென்று உசேனைக் கண்டு வருவார். பல முறை நம் கவிஞரும் தந்தையாரோடு செல்லுவர். குழந்தையற்ற உசேன் வீட்டில் நம் கவிஞர் மழலை பேசி அவர்களை மகிழ்விப்பர். உசேன், கவிஞரை அணைத்துத் தின்னப் பழம் ஈவர். பீகமோ, கவிஞரைத் தம்மடியில் வைத்துப் பாலும் சோறும் ஊட்டுவர். தமது ஆறாம் வயது தொடங்கிக் கவிஞர் அவர்கள் இல்லத்திற்குத் தாமாகவே போவதும் உண்டு. நெருங்கிப் பழகியும் இளைஞரிடம் அவர்கட்கு அன்பு குறையவில்லை. அவரைத் தாம் பெற்ற பிள்ளை எனவே அன்னோர் பேணி வந்தனர். அவர்கள் பழக்கத்தால் கவிஞரிடம் முகமதிய வழக்கம் படிந்தது. கவிஞரும் மண்டியிட்டு அவர்களோடு தொழுகையில் கலப்பார். இங்ஙனம் நம் கவிஞரின் பிள்ளைப் பருவம், முகமதியர் பழக்கத்திலேயே கழிந்தது.

கவிஞரின் தந்தையார் மரபினர் சைவர். தாயார் மரபினர் வைணவர். ஆகவே, திருமண் தரித்தவரும், திருநீறு இட்டவரும் அவர்கள் வீட்டிற்கு உறவாடி வருவர். சிவராத்திரி விரதமும் ஏகாதசி விரதமும் மாறிமாறி வரும். தந்தையார் வெங்கடராமர் சிவதீட்சை பெற்றவர். தாயார் செய்வித்த பழக்கத்தால், கவிஞர்க்குத் திருமண்

இரும் பழக்கம் ஏற்பட்டது. [illegible] பாடும் [illegible] படிந்தும் 'ஜெயபுரி' [illegible] ஏற்பம். இளமை விளையாட்டுப் பாட்டாகவிகள் [illegible] கொண்டனர். [illegible] பாடல் ஏற்றனர். [illegible] தம் வீட்டுக்கு வந்தனர். தந்தையார் அக்கவிதையை உற்று நோக்க கவிஞர் [illegible] கொண்டு தந்து அவர் [illegible] கொண்டார்; [illegible] பிச்சையிட வந்தார். பிச்சையிட வந்த அம்மையார் தம் [illegible] கண்டார். [illegible] கொண்டார். அவனை [illegible] பதக்கம் தந்தார். பின்னர்த் தந்தையாரும் அறிந்து சிந்தை மகிழ்ந்தார்.

எதுகையும் இருந்த [illegible] பழக்கம் இளமை தொட்டே கவிதைத் [illegible] நீட்டும் [illegible] வர் [illegible] மூலையும் [illegible] சிறு செயலையும் [illegible] ஞர். "இத்திறமையின் விளைவே என் கவிதைப் புலமை." என்கிறார் கவிஞர். 'இளமையிற் பயின்ற கல்வி சிலையின் எழுத்து.' அல்லவா?

சித்திரத்திலும் [illegible] கவிஞருக்கு இளமையிலேயே அமைந்து [illegible] அவரது [illegible] திறம் வாய்ந்தவர். இக்கலையில் [illegible] உண்டு [illegible] பெயர் பெற்றார். [illegible] தாயாருக்கு [illegible] காட்டிய [illegible]

வலுப் பெற்றது. அவர் கோரைப் பல்லரை அரக்கு போலப் படம் வரைவர், மயிர் விரித்தவரைப் பேய் எனத் தீட்டுவர். அவரிடம் கலைத்திறமை யோடு குறும்பும் உறவாடும். குறும்பு வரம்பு மீறும்போது தாயார் அவரைத் தடுப்பதும் உண்டு.

நம் கவிஞர் சீரிய காவியப் புலவர் மட்டும் அல்லர், அரிய ஓவியப் புலவரும் ஆவர். அவ்வோ விய வேட்கை முளையில் இருந்தே விளைந்தது. சித்திரப் புலமை அமைந்ததன் காரணம், மெச்சு தற்கு உரியது.

கவிஞரின் இளமை நமக்குக் காட்டும் படிப் பினைகள் பல. சிலவற்றைச் சிறப்பித்துச் சொல் லுதல் தகும். இளமையிலேயே நற்பழக்கங்களை வளப்படுத்துதல் வேண்டும். செய்வன திருந்தச் செய்யவேண்டும். சாதி சமய வேற்றுமையை அகற்ற வேண்டும். கடவுட்பற்றினைத் திடமாக்க வேண்டும். நம் கவிஞரது இளமை மட்டுமன்றி, அவரது வாழ்வின் ஒவ்வொரு பருவமும் நமக் குத் தாழ்வற்ற வழிகாட்டும். நல்லவர் வழியை நாமும் தொடருவது நலன். நமக்கும் நாட்டிற் கும் அது நன்மை தரும்.

கல்விப் பொறுப்புத் தந்தையையே சாரும். வேங்கடராமர் பொறுப்பு உணர்ந்த தந்தையார். அவர் நல்ல நாளில் பிள்ளையைப் படிக்கவைத்தார். கவிஞரது படிப்புத் தொடக்கம் ஒரு திருவிழாப் போன்று நடந்தது. உற்றாரும் உறவினரும் அன்று ஒன்று கூடினர். **பழனி உபாத்தியாயர் சண்முகம் பிள்ளை** என்பவர் கவிஞருக்கு எழுத்தறிவித்தார். பலகாலம் அவரிடம் படித்து வந்தார் கவிஞர்.

பின்னாளில் சண்முகம் பிள்ளை பழனிக்கே போக நேர்ந்தது. கவிஞருக்கும் வேறு பள்ளி சென்று படிக்க நேர்ந்தது. நாமக்கல்லில் **நம்மாழ்வார் பள்ளி** மிகவும் பெயர் பெற்றது. பள்ளித் தலைவர் நம்மாழ்வார், ஒரு சத்தாதவைணவர்; நல்ல கலையன்பர். நாள் முழுதும் அவர் பள்ளியில் இரார்; இடையிடையே வெளியே சென்று மீளுவர். அவர் தந்தையாரான பெரிய உபாத்தியாயரே பள்ளியில் இருந்து பிள்ளைகளைக் கவனிப்பார். கவிஞருக்கு நம்மாழ்வார் தனிச் சலுகை காட்டினர். நம் கவிஞர் நாலாம் வகுப்பில் படித்துவந்தார். நம்மாழ்வார் கரும்பலகையில் கணக்கு ஒன்று எழுதிப் பிள்ளைகளைச் செய்யச் சொல்லி வெளியிற் சென்றார். சென்றவர் வருமுன் மாணவர் கணக்கைச் செய்து முடிக்க விரைந்தனர். கவிஞருக்கோ, கணக்கில் விருப்பமில்லை. பையில் இருந்த நாடக விளம்பரத் தாளை எடுத்தார். அதில் கமல இந்திரன்

படம் ஒன்று அச்சிட்டிருந்தது அதைப் போலவே பலகையில் படம் தீட்டினார்; பலமுறையும் அழித்தழித்து எழுதிக் குறைவை நீக்கினார். இறுதியில் படம் சிறப்புற அமைந்தது. அதைக் கண்டு மிக்க மகிழ்ச்சிகொண்டார்; மற்றவருக்கும் காட்டி மகிழ்ச்சியூட்டினார் இந்தச் செய்தி பெரிய உபாத்தியாயருக்குத் தெரியாது.

பிள்ளைகளை வீட்டிற்குச் செல்லவிடும் நேரத்தில் நம்மாழ்வார் திரும்பிவந்தார். மாணவர் எல்லாரையும் போட்ட கணக்கைக் காட்டச் சொன்னார். அனைவரும் காட்டிவிட்டு வீட்டுக்குப் போயினர். சித்திரம் வரைந்த மகிழ்ச்சியால் கவிஞர் கணக்கை மறந்தே போனார். பலகையில் கணக்கு இல்லை, கமல இந்திரன் படமே இருந்தது. கவிஞர் காட்டும் முறை வந்தது. அவர் காட்டினார். கணக்கைக் காணாத ஆசிரியருக்குக் கோபம் மிகுந்தது அவர் கவிஞரை முழங்காலின் கீழ்ப் பிரம்பால் அடித்தார். அடியின் வலியால் கவிஞர் துள்ளித் துடித்தார். ஆனாலும், அருகிருந்த சிந்தாமணி ஆசாரி என்பவர் படத்தைப் புகழ்ந்தார். கோபம் தீர்ந்தபின் ஆசிரியரும் படத்தைக் கண்டு மெச்சினார்; ஒரு ரூபாய் வெகுமதியும் தந்தார்.

நம்மாழ்வார் பள்ளியில் படிப்பு முடிந்தது. கோயம்புத்தூர்க் கல்லூரிக் கிளைப் பள்ளியில் கவிஞர் சேர்ந்தார் அங்கும் கவிஞருக்குச் சித்திரம் வரைவதிலேயே சிந்தை நிலைத்தது. மூன்றாவது பாரத்தில் கவிஞர் படித்துவந்த போது ஒரு நாட் காலையிற் கணக்கு வகுப்பு நடந்தது. தலைமையாசிரியரே பாடம் நடத்தினார். மாணவர் ஆசிரி

யர் கொடுத்த கணக்கினைச் செய்து காட்டினர் கவிஞர் கணக்காக வரைந்தார். ஆசிரியர் படத்தை அப்படியே வரைந்தார் ஆசிரியரது கூரிய மூக்கு, சிறிய உதடு, திரண்ட தாழ்வாய் ஆகிய அனைத்தும் அப்படியே இருந்தன.

பக்கத்துப் பையன் சித்திரத்தைக் கண்டான், வியப்புக் கொண்டான், அதைப் பிடுங்கி மற்றையவரிடம் நீட்டினான். ஆரவாரம் எழுந்தது இவ்வமளியின் குலைவிலே ஆசிரியர் நோக்கினர்; நெருங்கி வந்தார். அவருக்கு விவரம் புரிந்தது. ஆனால் பின்னர் கவிஞரிடம் கோபம் மிகுந்தது. கவிஞருக்குக் கைக்கு மூன்றடி வீதம் பிரம்படி கிடைத்தது. கிடைத்த அடிகள் வீண் போகவில்லை; பின் பள்ளியிலிருந்து நீங்கும் வரை சித்திரத்தைப் பின் கவிஞர் தொட்டதில்லை "அந்த அடிகளே என் சித்திர ஆசையை முடுக்கிவிட்டன," என்று கவிஞர் கூறுகின்றார்

கவிஞருக்குக் கணக்கில் மட்டும் விருப்பம் இல்லாவிட்டாலும், மற்றைய பாடங்களில் அவர் விருப்பம் குறையவில்லை. அவர் கணக்கு ஒழிந்த மற்றைத் துறைகளிலே முதல் மாணவராய் நிற்பார். ஆண்டுதோறும் தேர்ச்சியும் தவறாது. அவர் ஆசிரியர்கள் மெச்சும் பரிசுகளும் பெற்றார். நான்காவது பாரம் வந்ததும் சித்திர விருப்பம் மீண்டும் தலை தூக்கிற்று. சித்திர ஆசிரியரே கவிஞரின் திறமை கண்டு வியந்தார். சித்திர ஆசிரியர் **கோபாலராவ்** நல்ல வித்தகர்; கவிஞரது வல்லமையும் திறமையையும் தினமும் புகழ்வார்.

கவிஞர் மூன்றாவது பாரத்தில் தேர்ச்சி பெற்

ஞர். இளைப் பள்ளியிலே நாலாவது பாரம் படிக்க இயலாது. அதனால், அவர் கோவைக் கல்லூரியிலேயே வந்து சேர்ந்தார். அவரது சித்திர வுணர்ச்சியும் தளிர் விட்டது. ஆங்கில வகுப்பிலே எலியட்டுத்துரை பாடம் நடத்தினார். 'நாகரிகம்' என்ற தலைப்பிலே மாணவரைக் கட்டுரை எழுத ஏவினார் கவிஞர் கட்டுரையை விரைவிலே எழுதி முடித்தார்; பின்பு துரையின் படத்தை வரைந்தார். அது கண்ட எலியட்டு மகிழ்ச்சி கொண்டார்; தலைமை ஆசிரியரிடம் கவிஞரை வியந்து பேசினார். கட்டுரையில் கண்ட பொருளுரையும் சிறந்திருந்தது.

கட்டுரை திருத்தம் பெற்று வந்தது துரை நம கவிஞரை நேரில் அழைத்தார். அறவுரையும் பாராட்டும் பலபட மொழிந்தார்; திறமையை வியந்து கவிஞரை ஊக்கினார். நாகரிகம் பற்றிக் கவிஞர் எழுதியதிலே பேச்சு நடந்தது. தம் நிலை தவறாது கவிஞர் வாதிட்டு வன்மை காட்டினார். மெச்சிய துரையும் உச்சி குளிர்ந்தார்; இரண்டு புத்தகங்களை எடுத்து வந்து கவிஞரிடம் தந்தார். இரண்டு நம் கவிஞரது வரிசைக்கு மெச்சின பரிசுகள். ஒன்று, கட்டுரை வரைவது பற்றிய புத்தகம். மற்றொன்று, அழகிய விவிலிய நூல் துரை தந்த ஆதரவால் சித்திர உணர்ச்சியும் கவிஞரிடம் வளர்ந்தது.

1906-ஆம ஆண்டு நம் கவிஞர் மெற்றிக்குலேஷன் தேர்வுக்குச் சென்றார். நன்றாகப் படித்த போதிலும், கவிஞருக்கு அச்சம் உண்டு. 'கணக்கிலே சுணக்கம் ஏற்படுமோ' என்ற ஏக்கமே அவ

ருக்கு மிகுதி ஆங்கிலமும் தமிழும் பாங்குறத் தேறும் என்றே நினைத்தார். அதற்குக் காரணம் என்றும் அவைகளில் அவர் தவருததே. ஆனல் இறுதியில் கணக்கிலே நல்ல மதிப்பைப் பெற்ருர். தமிழும் ஆங்கிலமும் வழுப்பட்டன. ஆகவே, கவிஞர் அவ்வாண்டில தேர்வு பெற வில்லை. மீண்டும் படிக்க நேர்ந்தது. முடிவு தவறியதில் வியப்பில்லை 'தமிழிலும் வழுப் பட்டதே!' என்றே நம் கவிஞர் கலங்கினர் 1907-ம் ஆண்டில் மீண்டும் பரீட்சை எழுதி னர்; நல்ல முறையில் தேர்ச்சியும் பெற்ருர்

பிறகு கவிஞரின் கல்லூரிப் படிப்புத் தொடங்கியது. அவர் திருச்சியிலுள்ள **பிஷப்பு ஈபர் கல்லூரியில்** இடைக்கலை வகுப்பில் சேர்ந் தார்; கல்லூரியில் நல்ல முறையிலேயே கற்ருர். தமிழில் தனிப்பெரும்பற்றுக் காட்டினர். தமி ழாசிரியர் **பிச்சை இபுராகீம் புலவர்** என்பவர். அவரும் கவிஞர் விருப்பம் அறிந்து கருத்தோடு தமிழ் கற்பித்தார். இடையிடையே நம் கவிஞர் வினவும் எழுப்புவர். தக்க விடையைப் பொறு மையுடன் ஆசிரியர் கூறுவது உண்டு. தேர்வுக் குரிய பாட நூல்களைப் படிப்பதோடமையாமல், கவிஞர் கேட்டதை விடாது உளத்தமைத்துப் பொருத்தமும் காண விழைவர்.

திருக்குறளில் 'புலால் உண்ணுமை' என்னும் அதிகாரம் பாடமாய் அமைந்தது இபுராகீம் புல வர் பாடம் நடத்தினர். 'ஊன் உண்ணு அன் ருத்தல் செய்யாது அளறு'' என்றது குறட் பகுதி. "புலால் உண்டவனுக்குக் கழுவாயே இல்லை. அவனை நரகம் உறுதியாய் உண்ணும்.

அவனை உண்ட நாகம் பின் வெளியே விடவென்றும வாய் திறவாது," என்று பொருளும் கூறினார் ஆசிரியர். நம் கவிஞர் முதலிலேயே புலால் உண்டு வந்தவர்; பின்னால் பலமுறை புலால் உண்ணாமை மேற்கொண்டும் தவறியவர். இறுதியில் சைவ சமய மாநாடு ஒன்று அவரைத் திருத்திற்று. பல பெரியார் சொற்பொழிவுகளைக் கேட்டுப் புலால் உண்பதில்லை என்று உறுதியும் செய்தவர். வள்ளுவர் குறளையும் ஆசிரியர் கூறிய உரையையும் கவிஞர் கேட்டார்; கேட்டதும் அவர் மனம் வாட்டமுற்றது. 'ஒரு முறை புலால் உண்டாலும் தவறாத நரகே வரும் என்கிறார் ஆசிரியர், நாமோ, அறியாது முன்னே உண்டோம்; இன்று தவறு உணர்ந்து மாறி விட்டோம். மாறியும், நரகம் நம்மைத் தப்பாதா?' என்று நினைத்து உளம் நடுங்கினார்.

வள்ளுவர் குறளுக்கு ஆசிரியர் கூறிய உரை பொருத்தம் அன்று என்று கவிஞர் கருதினார். ஆசிரியரோடு பலத்த விவாதமும் நடந்தது. முடிவில் கவிஞர் கருத்தறிந்து ஆசிரியர் மெச்சினார். இந்தப் பள்ளி நிகழ்ச்சி கவிஞரை எளிதில் விட்டு விடவில்லை. கவிஞர் கல்லூரியின் நீங்கிச் சென்று யிருந்த போதும் குறளை முறையாக ஆராய்ந்தார்; பற்பல குறள்களுக்குப் புத்துரையும் கண்டார். ஆண்டு முடிவில் கல்லூரி விழாவில் தமிழுக்கு எனத் தனிப்பரிசும் கவிஞருக்குக் கிடைத்தது. நாடகங்களிலும் கவிஞர் பங்கு பெற்று நடிப்பார்; உதை பந்தாட்டமும் விரும்பி ஆடுவர். கவிகளை மனனம் செய்து ஒப்புவித்தலில் கவிஞருக்கு இணை வேறு எவரும் இலர். ஆங்கில

மொழி பெயர்ப்பிலும் தமிழ்க் கட்டுரை வரைதலிலும் கவிஞரே முதலிடம் பெறுவர். எனவே, இவ்வாண்டிலும் நம் கவிஞருக்கு ஆண்டுவிழாப் பரிசு கிடைத்தது.

கல்லூரிக் கல்வி நல்ல முறையிலே அமைந்தும், படிப்பு இடையே முறிந்தது. இரண்டாண்டு படித்தும் தேர்வுக்குப் போகுமுன் கவிஞருக்குக் காது வலி ஏற்பட்டது. அதனால், அவர் படிப்பை நிறுத்தி வீடு வந்து சேர்ந்தார். மருத்துவமும் பொருத்த அளவிலே நடந்தது. கவிஞரும் பிறரும் சென்னை சேர்ந்தனர். மருத்துவப் புலவர் தொண்டைக் கோளாறே காது வலிக்குக் காரணம் என்பதைக் கண்டார். பின் சாயக் கொள்ளியிட்டுத் தொண்டையைச் சுட்டார். நாலு மாத காலம் மருத்துவம் நீடித்தது. முடிவு 'தலை வலி போய்த் திருகு வலி வந்த கதை' ஆயிற்று. காதில் வலி இல்லை; ஆனால், முழுதும் செவிடுபட்டது. பின்னர்ச் செய்த நாட்டு மருத்துவம் பயன் தந்தது.

இதற்கு இடையே நம் கவிஞருக்குத் திருமணமும் நிறைவேறியது. கரூர் வீரப்பரின் மூன்றும் மகளாரான **முத்தம்மாள்** என்பவரைக் கவிஞர் வாழ்க்கைத் துணைவியாராக ஏற்றார். நாமக்கல்லிலே திருமணம் நடந்தது. மணம் நடந்தவுடன் இல்வாழ்வும் தொடங்கிற்று. குடும்பப் பொறுப்புச் சார்ந்த பிறகு படிப்பது இயலுமா?

காது வலியும் கலியாணமும் கவிஞர் படிப்பைத் தடை செய்தன அவர் இல்லறவாழ்வினை இனிது தொடங்கினார் ஏதேனும் தொழில் ஒன்றை மேற்கொண்டாக வேண்டும் கவிஞரின் தந்தையார் தம் தனையருக்குத் தொழில் தேடத் தொடங்கினார் எவருக்கும் தத்தம் தொழிலே மேலானது எனத் தோன்றும். ஆதலால், கவிஞரைப் போலீஸில் சேர்க்கத் தந்தையார் விரும்பினார். சூழ்நிலையும் அதற்கு ஓரளவு துணை புரிந்தது.

**இராபர்ட்ஸன் துரை** சென்னையில் அவ்வமயம் போலீசு இலாகாத் தலைவர்; வேங்கடராமப் பிள்ளைக்கு மிகவும் வேண்டியவர். அவர் தயவால் பிள்ளை கவிஞரைப் போலீஸில் புகுத்த விரும்பினார்; ஒரு முறை சென்னை சென்று மீண்டார்; மீண்டவர் கொண்ட மகிழ்ச்சிக்கு எல்லை இல்லை. மைந்தர் போலீஸ் இன்ஸ்பெக்டர் ஆய்விட்டார் என்பதே அவரது நினைவு. அவர் நினைவிலும் மகிழ்விலும் தவறில்லை துரை அப்படி உறுதி கூறியிருந்தார். 'அடுத்த மாதம் இடையிலே ஆட்கள் பொறுக்குவோம். நீ மகனுடன் தவறாது வந்துசேர். எடுத்த எடுப்பிலே இன்ஸ்பெக்டருக்கே எடுக்கிறேன்,'' என்பது துரை கூறிய உறுதி உரை. இதை வந்தவரிடம் எல்லாம் தந்தையார் சொல்லி வியந்தார். ''துரையின் தயவால் விரைவிலே பதவி உயர்வும் கிட்டும்! மகனுக்கு நல்ல முன்னேற்றமும் உண்டு!'

என்று மகிழ்ந்தார் தந்தையார்.

ஆனால், இவ்வளவு மகிழ்ச்சியில் ஒரு சிறிதும் நம் கவிஞருக்கு இல்லை. போலீஸ் வேலையில் கவிஞருக்கு விருப்பம் இல்லை. வேலைக்குப் போக வேண்டும் என்ற ஆவலே அவருக்கு இல்லை. 'காது கேளாமல் ஒருவரிடம் ஏவல் கேட்பது எப்படி?' என்பது நினைவு. இம்மூன்றும் அவர் மனநிலையைக் குலைத்தன. தந்தையார் போக்கில் வெறுப்பும் கூட்டியது. எப்படியும் வேலை வேண்டா என்று சொல்லித் தொலைக்க நினைத்தார். காதின் விளைவு சொல்லிப் பாதி விருப்பமின்மை காட்டினார். ஆனால், காதின் செய்தி தந்தையாருக்குப் பெரியதெனப்படவில்லை 'துரை இருக்கும் போதே பதவி பெற வேண்டும். பின்னர் வழியில்லை,' என்பதே தந்தையார் நினைவு. 'காதுக்கு மருத்துவம் பின்னர்ச் செய்வோம். வந்த பதவியை நழுவவிடுவது அழகன்று,' எனக்கூறி அவர் மைந்தரைத் தேற்றினார்.

சென்னை செல்லும் நாள் நெருங்கியது. வேங்கடராமர் கவிஞருக்குத் தேறுதல் சொன்னார்; அடிக்கடி கூப்பிட்டு நல்லுரை நவின்றார். கவிஞருக்கோ, இஃதொரு தொல்லையாய்ப் பட்டது. எவ்வளவு சொல்லியும் தந்தையார் கேட்கவில்லை. அன்பர் சிலர் மூலமும் தந்தையார் மைந்தரை வற்புறுத்தினார். வேறு வழியற்ற வகையிலே கவிஞர் ஒரு முடிவுகட்டினார். எப்படியேனும் இப்பிடிப்பினின்று விலக வழி தேடினார். சென்னை செல்லும் முன்பே மனையை விட்டு நீங்கினார். கவிஞருக்குத் தமக்கையாரான

விருத்தாம்பாள் எனபவர் கரூரில் வாழ்ந்து வந்தார். செலவுக்குப் பணமும் தருகிறேன் என்றனர். இரவே கவிஞர் கரூருக்கு ஓடினார்.

பின்னர்த் தந்தையார் அடைந்த வருத்தம் சொல்லும் தரமன்று. நெடுநாள் வரையும் கவிஞரைத் திட்டினார். போலீஸ் வேலையை விட்டாலும் வேறு வேலையையாவது முயன்று தேடினால் தந்தையாரின் சிந்தை மகிழும். நம் கவிஞருக்கோ, அலுவலில் மனமே இல்லை. மைந்தரின் இப்போராட்டநிலை தந்தையாருக்கு வெறுப்பைத் தந்தது. ஆனால், கவிஞரின் நிலையோ வேறு. காது மருத்துவத்துக்குச் சென்றபோதும் அவர் சித்திரத்தை மறக்கவில்லை. திரும்பி வந்தும் அதை விருத்தி செய்துகொண்டிருந்தார். சித்திரத் தொழில் வாழ்க்கைக்குப் பயன்படாது என்பது தந்தையார் நினைவு. எனவே, மீண்டும் மைந்தரை அலுவலில் அமர்த்தவே தந்தையார் முயன்றார். வேறு வேலை கிடைக்க வழி தேடினார்.

தம் நண்பர் ஒருவர் நாமக்கல்லுக்குத் தாசில்தாராய் வந்தது தந்தையாருக்குத் தெரிந்தது. அவர் உடனே அந்நண்பரைக் கண்டு பேசினார். நண்பரும் வேலை தர இசைந்தார். மிக்க மகிழ்ச்சியோடு வேங்கடராமர் வீடு திரும்பினார்; நேரிலும் பிறர் மூலமும் இதையேனும் மறுக்காது ஏற்கக் கவிஞரை வேண்டினார். கவிஞரும் செவி சாய்த்து வேலையேற்க மனம் இசைந்தார். தாலுக்கா ஆபிசில் குமாஸ்தா வேலை கிடைத்தது. மூன்று மாதம் கவிஞரும் அவ்வேலை பார்த்தார்; பிறகு அதனையும் உதறி எறிந்தார்.

தாசில்தார் இல்லாத நேரத்தில், கவிஞர் பள்ளிப் பிள்ளைகளுடன் சென்று பந்தாடினார். திடீரெனத் தாசில்தார் வந்தார். அவர் வந்தது கவிஞருக்குத் தெரியாது. வந்தவர் கவிஞரை ஓர் அலுவலுக்காகத் தேடினார்; தேடியும் காணாமல், ஆளைவிட்டுக் கூட்டிவரச் செய்தார். கவிஞர் வந்ததும் சிந்தை நொந்து பேசினார். விளையாடியதைக் கண்டித்தார். கவிஞருக்கு இது மனக் கசப்பைத் தந்தது. மற்றும் ஒரு முறை இப்படியே நடந்தது. இருந்தாலும் வேலையை விட்டால் தந்தையார் வருந்துவாரே என்று கவிஞர் கவன்றார்; பின்பு வேலை நேரத்தில் விளையாடுவதை நிறுத்தினார்; விரைவில் அலுவலை முடித்து ஏதேனும் சித்திரம் வரைவார். இதனை மட்டும் மேலதிகாரி விரும்புவாரா!

பிறிதொருநாள் தாசில்தார் ஊரில் இல்லை; அலுவல் பார்க்க வெளியூர் போயிருந்தார். கவிஞருக்கு வேலை விரைவிலே முடிந்தது. எஞ்சிய நேரத்தில் ஏதாவது செய்ய விரும்பினார். கடிதத்தை எடுத்துப் படம் எழுதத் தொடங்கினார். கவிஞரோடு துணை அலுவல் பார்த்துவந்த ஒருவர், வரதராசையர் என்பவர். அவர் அன்றிருந்த கோலம் கவிஞர் படம் எழுத மிகவும் பொருத்தமாயிருந்தது. அவர் நிலையை அப்படியே நம் கவிஞர் படம் எழுதினார். அந்த நேரத்தில் பின் கதவின் வழியாய்த் தாசில்தார் நுழைந்தார். படத்தைக் கண்டதும் அவருக்குச் சினம் பொங்கிற்று; பல முறை சொல்லியும் கேளாமல் திருந்தாதது வருத்தமும் தந்தது. அவர் கவிஞரை அழைத்துக்

கடுமையாய்க் கண்டித்தார். அக்கடுமையும் கண்டிப்பும் கவிஞர் உளத்தைக் கலக்கின. கவிஞர் பின்னும் அப்பணியில் அமர விருப்பமில்லை; உடனே வேலையினின்று விடுதலை பெற விரைந்தார்; விலகுவதாக எழுதித் தாசில்தாருக்கு அனுப்பியும் விட்டார், தந்தையாருக்கும் செய்தி தெரிவித்தார்.

'இந்த வேலையும் தொலைந்ததே!' என்று தந்தையார் வருந்தினார். 'வேலையை விட்டது தவறு.' என்று உரைத்தார். 'மேலவர் ஆணையை மறுப்பது தகாது,' எனச் சுட்டினார். 'அலுவலில் கோபம் காட்டுவது ஏலாது,' எனவும் பேசினார். கேட்ட கவிஞர், எதுவும் பேச வழியில்லை. வாய் மூடித் தலை கவிழ்ந்து நின்றார் பேச்சுக்கு இடையே தாசில்தாரே நுழைந்தார் தந்தையாரின் உள்ளத்தில் மகிழ்வு பூத்தது 'வேலையை மீட்டுத் தரலாம்!' என்ற ஆவலே அதற்குக் காரணம்.

வந்த தாசில்தார் நொந்த நம் கவிஞரை அழைத்தார். தந்தையாரிடமும் நடந்ததைக் கூறினார், 'கண்டித்தது, உன் நன்மைக்கே,' என உரைத்தார்; கவிஞரை மேல் நிலைக்கு உயர்த்தும் நயப்புரை கூறினார்; அரசாங்க அலுவலின் வரிசையைப் பறை சாற்றினார் என்ன சொல்லியும் கவிஞர் கவனிக்கவில்லை. விலக்கு மனுவை மீண்டும் பெற இருவரும் வேண்டினர். வேலை விருப்பம் இருந்தால்தானே அவரது ஆணை நிறைவேறும்? கவிஞர் வாய் மூடி மௌனியாய் இருந்தார். "தானே கனியாததைக் தடிகொண்டு அடிப்பதன் முடிவு என்ன? அவனைக் கசக்குவதில் பயனில்லை! நான் போய் வருகிறேன்!" எனத் தாசில்தாரும்

விடை பெற்று மீண்டார்

தந்தையார் கொண்ட துயர் சொல்லுந்தரம் அன்று. கடமையை உணர்ந்து தந்தையார் மனம் உடைந்து போனார். மீண்டும் கவிஞருக்கு வேலை தேடினார். மூன்றாம் முறை நாமக்கல் ஆரம்பப் பள்ளியில் ஆசிரியர் வேலை கிடைத்தது. நம் கவிஞர் மூன்றாம் வகுப்புக்கு ஆசிரியர். தந்தையாரை மகிழ்விக்கவே கவிஞர் அதனை ஏற்றார். சொந்த விருப்பம் இல்லை எனவே, அதுவும் இடையிலே முறிந்தது. மூன்று மாதம் வேலை பார்த்தார், நான்காவது மாதம் வீடு வந்து சேர்ந்தார். தலைமை ஆசிரியர் கவிஞரை மேலும் வேலையில் அமர்த்த விரும்பவில்லை. ஆசிரியர்கள் அரசியலில் ஈர்ப்பு அதிகம் காட்டல் தகாது. கவிஞரோ, முற்போக்கு அரசியல் வாதியானார். இந்த வேலை போனதிலும் தந்தையாருக்கு வருத்தம் மிகுதி.

தந்தையார் தேடிய அலுவல்கள் மிகப்பல. எதையும் மைந்தர் ஏற்கவில்லை. மைந்தருக்கு உள்ளக் கிளர்ச்சி இன்மையே காரணம். ஓவியம் வரைதலிலே பால்யம் முதல் கவிஞருக்கு வேட்கை அதிகம். அதற்கு வந்த தடையோ, ஒன்றிரண்டல்ல பல தடைகளை மீறியும் ஓவியக்கலை கவிஞரைத் தேடி வந்துள்ளது. இதை உணர்ந்து தந்தையார் திருப்பி இருந்தால் அவர் சிந்தை குளிர்ந்திருக்கும். தந்தையார் காட்டிய வழியில் நின்றால் கவிஞர் புகழ் பெற மாட்டார். கவிதைத் திறனும் ஓவியப் புலமையும் அரசியல் போரில் வழி வகுத்தன.

ஆசிரியர் வேலையைவிட்டு நம் கவிஞர் சோம்பலுற்று இல்லை; வீட்டில் இருந்த சித்திரப்

வரைந்தார். அவர் வரைந்த சித்திரத்தைப் பலரும் வியந்து பேசினர். திலகர், [illegible] விவேகானந்தர், இராமகிருஷ்ணர் முதலியவர்களின் திருவுருவப் படங்களை வரைந்தார். படங்கள் யாவும் பொதுவிடம் சென்றன. கவிஞரின் ஓவியத் திறமை வெளி ஆயிற்று. முளையில் விளைந்த அதுவே தொழிலாயும் அமைந்தது. தன்னுடனே வளர்ந்த அது, விளைவு தரக் கேட்பானேன்! பலரும் மெச்சப் படம் எழுதினர். ஆசிரியரும் கணக்கருமாய் இருந்தால், பெறுவது பதினைந்து ரூபாய். நம் கவிஞர் படமெழுதியபோது அதனினும் சீரிய வருவாய் வந்தது. ஒரு படம் எழுதினாலே ஐம்பது அறுபது ரூபாய் வரும்.

கவிஞருக்குச் சித்திரத் தொழிலால் பல வித்தகர் உறவு கிடைத்தது. இஞ்சினீயர் பா. வெ. **மாணிக்க நாயக்கர்** கவிஞரிடம் அன்பு பூண்டார். **ஜார்ஜ்** மன்னர் முடி சூட்டு விழா டில்லியில் நடந்தது. நாயக்கர் கவிஞரைப் படம் எழுத வேண்டினார். கவிஞர் மன்னர் அரியணை அமர்வும் இந்தியத்தாய் முடி சூட்டலும் படம் வரைந்தார்; படத்துடன் நாயக்கரைத் தொடர்ந்து டில்லியை அடைந்தார். பார்த்தவர் கண்ணைப் படம் கவர்ந்தது. அப்படத்திற்காகக் கவிஞருக்குப் பரிசு கிட்டியது. பரிசு பெற்ற கலைஞருக்கு மன்னர் விருந்து நடத்தினார். நம் கவிஞரும் மன்னர் அருகமர்ந்து விருந்து உண்டார். தங்கப் பதக்கம் ஒன்று பாராட்டின் குறி என வழங்கப்பட்டது.

டில்லியிருந்து திரும்பிய பின்பு சித்திரத் தொழிலும் சிறந்து நடந்தது. [illegible]

கவிஞரின் பொருளும் புகழும் நன்கு பரவின. 1914-ஆம் ஆண்டு திருச்சி அரசியல் மாநாடு ஒன்று நடந்தது. **இராம்பள்ளி ஜமீந்தார்** அதன் வரவேற்புத் தலைவர். அவர் நம் கவிஞர்க்கு உற்ற நண்பர். சித்திரத்தையும் கவிதையையும் பொருந்த வும் புகழ்ந்து கவிஞரை ஊக்கினார். **கருணாகர மேனன்** தலைமையில் **பெசண்டு** அம்மையார் மாநாட்டைத் திறந்து வைத்தார். அதன் சார்பில் பொருட்காட்சி ஒன்று நடந்தது. கவிஞரின் படங்கள் பல அதில் இடம் பெற்றிருந்தன. அப்படங்களுக்கு எல்லாம் பரிசு அளித்து நம் கவிஞருக்குத் தங்கப்பதக்கம் ஒன்றும் வழங்கினார். பெசண்டு அம்மையார் சில நகைச்சுவைப் படங்களைப் பெற விரும்பினார். விரும்பியபடியே படங்கள் தரப்பட்டன. அவற்றிற்கென ரூபாய் நூறும் தனியே கிடைத்தது.

1910-ஆம் ஆண்டில் சென்னையில் சித்திரக் கலைக் காட்சி ஒன்று நடந்தது. அரசியலார் ஆதரவில் அது நடத்தப் பெற்றது. ஆதலால் அதில் பரிசு பெறக் கவிஞருக்கு ஆசை பிறந்தது. அழகிய பல சித்திரம் வரைந்து அனுப்பினார். முதலில் தந்தையார் கவிஞரைச் சென்னைக்கு அனுப்ப மனம் ஒப்பவில்லை. பணம் தரவும் மறுத்தார். பின்னர் அன்பர் பலர் துணையினால், தாயின் உடன்பாட்டினாலும் தந்தார். நாற்பது ரூபாய்ச் செலவில் படங்கள் சட்டம் இடப்பட்டன. அக்காட்சியில் வெள்ளிப் பதக்கப் பரிசு வந்தது. கவிஞர் பெயரே முதல் வரிசையில் பரிசு பெற்று உயர்ந்தது. சென்னைப் பத்திரிகையில் படங்கள் புகழ்ந்து எழுதப்

பெற்றன

அங்ஙனம் நம் கவிஞர் பெற்ற பரிசும் வரிசையும் எண்ணிலில் அடங்காதவை. தந்தையார் உள்ளமும் சிறிது மாறியது. மைந்தர் வேலை பாராத கவலையை அவர் மறந்தார். மைந்தரை அவர் சிந்தை மகிழ்ந்த வழியில் இருப்பாதது தம் குறை எனவும் உணர்ந்தார். பின்னர்ப் படம் வரைதலே நம் கவிஞரின் தொழில் ஆயிற்று. 1913—1920 வரை ஏழாண்டுகள் சித்திரத் தொழில் சிறப்புற நடந்தது. ஆண்டுக்குக் குறைந்தது நான்கு படம் வரைவார். ஒன்றுக்குச் சுமார் எண்ணூறு ரூபாய் கிடைக்கும். படம் எழுதுவதுடன் நிழற்படம் பிடிக்கவும் கவிஞருக்குத் தெரியும். அதிலும் மாதம் இருநூறு ரூபாய் வருவாய் வரும். இப்படி எவருக்கும் அடிமை ஆகாத தொழில் அவரைத் தேடி வந்தது.

சிப்மான் துரை சென்னையில் பெரிய இஞ்சினீயர், நல்ல கலையுணர்ச்சி உள்ளவர்; சித்திரக்கலையிலும் சிறந்த திறமை. அவர் பிறர் திறமை கண்டு போற்றுபவர்; தொழிலை ஆதரிக்கும் தூய உள்ளத்தினர். விரும்பியதை மகிழ்ந்தளிக்கும் கொடைத் திறமும் மிக்கவர்; குழந்தை அன்பு மிகுதியும் கொண்டவர்.

அவருக்கு ஒரு குழந்தை இருந்தது. அதனை அவர் உயிரினும் இனியதாய்ப் பேணினார். குழந்தையின் அழகும் அவரை மகிழ்வித்தது. திடீரென அக்குழந்தை நோய் கண்டு இறந்தது. அவர் எய்திய துயருக்கு இறுதி இல்லை. இறுதி நேரத்தில் அவர் படம் எடுக்கவும் இல்லை. நினைவுப் படம் ஒன்று இருந்தால் மனத்துயரை மாற்றும். எடுத்த படமும் சரியாயில்லை. குழந்தையின் மரணவுருவையே அது காட்டிற்று. இறந்த பிறகு எடுத்த அப்படத்தைத் துரை எப்படியும் செப்பனிட முயன்றார். தமது முயற்சியால் பலன் ஏற்படவில்லை. பிறரைக்கொண்டு மூடிய கண்ணைத் திறக்க முயற்சி செய்தார். ஒன்றிலும் கருதிய முடிவு கைகூடவில்லை. இருந்தாலும் படத்தை எப்படியும் சீர் செய்ய முயன்றார்.

ஒரு முறை பார்சென் துரை, நாமக்கல் வந்திருந்தார். வந்தவர், மாலையில் அவ்வூர் நகரமண்டபத்துள் நுழைந்தவர். மண்டப முகப்பிலே பெரிய படம் ஒன்று மாட்டியிருந்தது. ஆசிரியர் இலக்கு

மணையர்என்பாரது உருவப் படம் அது அதனை வரைந்தவர் நம் கவிஞரே. கவிஞர் பெயரும் கீழே எழுதப்பட்டிருந்தது. இலக்குமணையர் அலுவலினின்று விலகினவர். அவர் நினைவுக்குறியாய் அது அங்கு வைக்கப்பட்டது. படம் துரையின் கண்ணையும் கருத்தையும் கவர்ந்தது. அது கையினால் வரையப்பட்டது என்பதையும் அவர் அறிந்தார். உடனே இறந்த தம் மகள் நினைவு அவருக்குத் தோன்றிற்று. கவிஞரை அழைத்து வருமாறு ஆள் அனுப்பினார்

இஞ்சினீயர் அழைக்கக் காரணம் கவிஞர் நெஞ்சிற்படவில்லை. எப்படியும் காண வேண்டும் என்ற நினைவு அவருக்கு எழுந்தது. தந்தையாரும், "பெரியதுரை தயவு இருந்தால் உயர்பதவி கிடைக்கும்; சென்று வா," என்று ஆசி கூறி அனுப்பினார். கவிஞர் மேனாட்டு உடையினை அணிந்தார். அழைக்க வந்திருந்தவர் ஓவர்சீயர். அவரோடு கவிஞரும் விரைந்து சென்றார்.

கவிஞர் வரவுக்குக் காத்திருந்த துரையும் கை குலுக்கிக் கவிஞரை வரவேற்றார். கவிஞருக்கு ஒரு சிறு விருந்தும் நடந்தது. பின்பு துரை தமது கதையினைச் சொன்னார்; இறந்த மகளின் படத்தையும் நீட்டினார். கேட்ட கதையும் பார்த்த படமும் கவிஞர் மனதை உருக்கின. அப் படம் குழந்தை இறந்த பிறகு உட்கார வைத்து எடுக்கப்பட்டது. "வேறு படம் வீட்டில் இல்லை இருப்பதில் குழந்தையின் இறுதிக்கால அழகு பொலியவில்லை இதனையே நீர் எப்படியும் செப்பனிட்டுப் பெரிதாக வரைய வேண்டும்," என்று

துரை கவிஞரை வேண்டினார்; படம் வரைய ரூபாய் நூறு தருதற்குத் துரை இசைந்தார். கவிஞரும் உடன்பட்டு வீடு திரும்பினார்.

தந்தையாரும் செய்தி அறிந்தார்; மைந்தர் துரையிடம் பழகியதில் மகிழ்ச்சி கொண்டார். துரை தயவால் அலுவல் கிடைக்கும் என்று எண்ணினார்; நல்ல நாளில் கவிஞரைப் படவேலையைத் தொடங்கச் செய்தார் கைவண்ணம் எல்லாம் துலங்கக் கவிஞரும் படத்தைச் செவ்வனம் எழுதி முடித்தார்; நற்பெயர் பெறும் நினைவால் பற்பல முறை திருத்தினார். துரை சொன்ன குறிப்பைப் புரையற எண்ணினார். பத்தே நாளில் படம் வரைந்து முடிந்தது. மீண்டும் ஒரு வாரம் ஒப்பு நோக்கினார்; முடிந்த திறமை எல்லாம் அதில் படிந்தபடி கண்டார். மறு நாளை துரையினைக் காணவும் முடிவு செய்தார்.

சொல்லிய நாளில் துரையும் மறவாது ஆள் அனுப்பினார். கையும் படமுமாய்க் கவிஞர் சென்றார். மகிழ்வு கொண்டு துரை விரைந்து வரவேற்றார். அன்று போலவே கவிஞருக்கு விருந்தும் நடந்தது. 'துரை மனப்படி வரைந்திருக்க வேண்டுமே' என்று கவிஞர் வருந்தினார். பிறகு இருவரும் தாழ்வாரம் சென்றனர். துரை இடையே வந்த ஓவர்சியரையும் விரைந்து விடை தந்து அனுப்பினார்; கவிஞரை எதிரே இடம் தந்து அமர்த்தினார்; படத்தையும் வாங்கிப் பிரித்தார்; கண்டதும் மகிழ்ச்சி கொண்டார் அவர் அகத்து மகிழ்ச்சி முகத்திலே பொலிந்தது கவிஞரும் துரையின் செய்கையை அமர்ந்து நோக்கினார்.

துரை படத்தை விடாது பார்த்தார், முன்னும் பின்னும் கவனித்தார். எட்ட நின்று பார்ப்பதும், கிட்ட நின்று நோக்குவதும் ஆனார். விலகி நின்று முகத்தை அண்ணாந்து நோக்கினார். ஓரிடம் படத்தை வைத்து வேறிடம் நின்று கண்டார். மூலையில் நின்று சாலவும் நோக்கினார். இப்படிக் கால் மணி நேரம் கழிந்தது. துரையோ, வாய் திறந்து எதுவும் பேசவில்லை. கவிஞர் நெஞ்சில் துணுக்கம் கொண்டார். துரையின் முகத்திலே மகிழ்ச்சி இல்லை.

பிறகு துரை கவிஞரின் அருகே வந்தார். வந்ததும் மனம்விட்டுப் பேசினார் அல்லர். கவிஞரின் இடத்தோளில் வலக்கையை இட்டார். மீண்டும் துரையிடம் மலைத்த காட்சியே நிலைத்தது. இருமையின் வியப்பை மகளின் துயரம் உள்ளடக்கிற்று. வியப்பும் துயரும் துரையிடம் மாறி மாறி வந்தன. கடைசியில் துரை கவிஞரை நோக்கினார்; "வரைந்த படம் மிகவும் சிறந்தது! குழந்தையை நேரில் காட்டியது போலத் தீட்டினீர்! கோணற் சிரிப்பும் கண்ணின் உயிர்க்களையும் தவறாது இருக்கின்றன. என் மனைவி காணின் மிகவும் மகிழ்வாள்! சித்திரத்தில் வித்தகர் நீர்! வாழ்வில் வெற்றியும் வளமும் பெறுக!" என நயந்தும் வியந்தும் பேசினார்.

துரை, "பேசிய ரூபாய் ஐம்பது அமையாது; மேலும் தரவேண்டும்," என்று உள்ளே சென்றார்; நோட்டுக் கட்டுக்களோடு மீண்டார். கட்டு ஒன்றைக் கவிஞரிடம் கொடுத்து, மீண்டும் படம் காணச் சென்றார். கவிஞர் ஆசை மிகுதியாய்

கட்டைப் பிரித்தெண்ணினார். பார்த்ததும் கவிஞர் உடல் வியர்த்தது. எதிர்பாராத வியப்பு அவரை அதிர்ச்சி அடையச் செய்தது. அறுநூற்று எழுபத்தைந்து ரூபாய்கள் அதில் இருந்தன 'துரை செய்யும் சோதனையோ!' என்றும் கவிஞர் கருதினார். இவ்வளவு அதிக ஊதியத்தை அவர் எதிர்பார்க்கவே இல்லை. ஆசை ஏற்கத் தூண்டினாலும், அறிவு எடுக்க மறுத்தது. திரும்பிய துரை, கவிஞர் நிலை தெரிந்தார்; கொடுத்த பணத்தைக் கவிஞர் தொடாததன் குறிப்பை எண்ணினார்; 'கொடுத்தது குறைவோ!' என்று அடுத்து மயங்கினார்.

மயங்கிய துரை கவிஞரை அணுகினார், கவிஞர் நிலைக்குக் காரணம் கேட்டார். "பேசிய தொகை ஐம்பது, மெச்சிக் கொடுத்தாலும் கொஞ்சம் கூடலாம். பதின்மடங்கு மேலும் பெற உரிமையில்லை," எனத் தமது கருத்தைக் கவிஞர் உரைத்தார். நூற்றிருபத்தைந்தே மிகுதி என்று கூறித் துரை ஏற்க வேண்டினார்; "அன்பின் காணிக்கை அது. முன்பின் பாராது கொள்ளும்," என்று மேலும் மன்றாடினார். பிறகு கவிஞர் காட்டத் துரை கட்டினைச் சோதித்தார். ஐந்து நூறு ரூபாய்கள், பதினேழு பத்து ரூபாய்கள், ஓர் ஐந்து ரூபாய்—இவ்வளவும் நோட்டாய் இருந்தன. கண்ட துரைக்கு வியப்புண்டாகவில்லை, சிரிப்பே வந்தது. வாய் திறந்து சிரித்தார். உடனே நம் கவிஞரை நோக்கி, "நீர் நல்ல புண்ணியவான்!" என்றார்.

கவிஞருக்குப் பேசிய தொகை ரூபாய் ஐம்பது. துரை விரும்பிக் கொடுக்க நினைத்தது நூற்று எழு

பத்தைந்து பின்பு ஐந்நூறு எங்கிருந்து வந்தது? கொடுத்த துரைக்கே விவரம் புரியவில்லை. நெடிது நேர நினைவின் பின் முடிவு தெரிந்தது; மற்றொரு வருகைக்குத் தரவேண்டிய தொகை ஐந்நூறு. அந்தக் கட்டும் இதில் சேர்ந்துவிட்டது எனினும், துரை இம்முடிவைத் 'தெய்வக் கட்டளை' என ஏற்றார். "நீர் முழுமையுமே பெறவேண்டும்," என்று கவிஞரைத் தொழுதார் கவிஞரோ, துரையின் கருத்தை மறுக்க விரும்பவில்லை. வலிய வந்ததை மகிழ்வுடன் ஏற்றார்.

அடங்கா வெற்றியுடன் கவிஞர் வீடு வந்து சேர்ந்தார் வரும் வழியெல்லாம் கவிஞர் செல விற்குத் திட்டமும் இட்டு வந்தார். சித்திரத் தேவைக்கு வேண்டும் பணம் தந்தையார் தருவ தில்லை. மைந்தர் வேலை பாராத வருத்தமே காரணம். படம் எழுதிப் பிழைப்பது மேல் என அவர் நினைக்கவில்லை வீண் காலக் கழிவு என்பதே தந்தையார் நினைவு ஆகவே, சித்திரச் செலவிற்குச் சொந்தப் பணம் ஒதுக்கக் கவிஞர் கருதினார்; அதிக வரவு ஐந்நூற்றையும் அதற்கு என அமைத்தார்; சாயப் பெட்டியும் தூரிகையும் பல கருவிகளும் வாங்கினார். அதிக ரூபாய் ஐந்நூறு கிடைத்தது தந்தையாருக்குத் தெரியாது.

படம் எழுதிய கூலி நூற்றெழுபத்தைந்து என்பதே தந்தையாரின் நினைவு அதற்கே அவர் கொண்ட மகிழ்ச்சிக்கு எல்லை இல்லை அவர் முன்பு மைந்தர்மீது கொண்ட வெறுப்பெல்லாம் நீங்கினார், வேலை பாராவிட்டாலும் கலையிலாவது திறமை வளரும் என எண்ணினார். கவிஞரும்

றுரையின் பரிசால் தொழில் தேர்வு பெற்றார் சித்திர தொழிலின் வித்தகத்தை அப்பரிசு உயர்த்திற்று; தந்தையார்க்கு மைந்தர்மீதிருந்த வெறுப்பையும் போக்கிற்று; வாழ்விலும் கவிஞரை முன்னணிக்கு ஊக்கிற்று; திறமான புலமையைப் பிற நாட்டினர் போற்றிய குறியும் ஆயிற்று. இத்தனையும் தந்த அதனை '**நல்லபரிசு**' என்று சொல்லலாம் அல்லவா?

வங்காளப் பிரிவினையை வெள்ளையர் அரசாங்கம் 1906ல் செய்தது. அப்பிரிவினை தேசிய உணர்ச்சிக்கு உரம் தந்தது. மக்கள் எங்கும் ஆட்சிக்கு எதிராகக் கிளர்ச்சி செய்தார்கள் **யோகி அரவிந்தர்** 'வந்தே மாதரம்' எனனும் இதழ் நடத்தினார் அதன் மூலம் மக்கள் கிளர்ச்சி வளர்ச்சி பெற்றது. **திலகர், கோகலே** முதலான தலைவர்கள் அரசியலை எதிர்த்தும் பேசினார்கள் அரவிந்தர் மீது வழக்கும் நடந்தது **சி. ஆர். தாஸ்,** அரவிந்தர் திறத்தில் வாதாடினார். நாடெங்கும் அடக்குமுறை அதிகரித்தது இந்நிலையில் நாட்டு நிலையை மறந்திருக்க எவருக்கும் இயலாது. மாணவர்கள் மட்டும் இதற்கு ஒரு விலக்கா! மாணவர்களும் கலந்து பங்கு கொண்டார்கள். அப்பொழுது நம கவிஞர் கல்லூரியில் கற்று வந்தார்.

கவிஞரும் தீவிர அரசியலில் ஈடுபட்டார். முற்போக்கு அரசியல் இதழ்களைத் தப்பாது படிப்பார்; அரசியல் கட்டுரைகளையும் நெட்டுருப் போடுவார், கூட்டங்கட்கும் வாட்டம் இலாது செல்வார்; இரவில் அரவிந்தர் கடிதங்களைப் படிப்பார்; "பெற்ற அன்னையின் இரத்தத்தை வெள்ளை அரக்கன் உறிஞ்சுகிறான்! இரக்கம் அற்று அன்னையை மீட்காமல இரேன்! அன்னை சாகும்போது உன்னோடு காதற்பேச்சுப் பேச நேரமில்லை!" என்று அரவிந்தர் தம் மனைவியாருக்கு வரைந்

இருந்தார். இது கவிஞரின் மனத்தை மிகவும் பிணித்தது. பாரதியார், அரவிந்தர் முதலியவரைக் காண விரைந்தார்.

பின்னர் நம் கவிஞர் வாழ்க்கையில் புகுந்தார். புகுந்ததும், அரசியல் உணர்ச்சி மிகுந்து வந்தது. சித்திரத் தொழிலைச் சிறிது புறக்கணித்தார். பல கூட்டங்களிற் சென்று பேசினார். பள்ளியில் பெற்ற சொற்பொழிவுத்திறன் கவிஞருக்கு எளிதில் புகழ் தந்தது. அவரை அழையாத இடமும், அவர் போகாத ஊரும் இல்லை. அவர் மேடைகளில் இனிமையும் கனிவும் நிரம்பப் பாடுவார்; உணர்ச்சி ததும்பப் பேசுவார். பாட்டாலும் பேச்சாலும் உணர்ச்சியூட்டிய கவிஞரைப் பலரும் போற்றினர்.

காந்தி அடிகள் ஆப்பிரிக்காவில் இந்தியர் உரிமைப்போர் நடத்தினார் அக்காலை. அடிகள் இந்தியருக்கு உதவி நிதி திரட்ட வேண்டினர். இங்கும் கோகலே தலைமை பூண்டு நிதியீட்டினார். நம் கவிஞரும் பொருளீட்டும் முயற்சியை மேற்கொண்டார்; ஊரூராகச் சென்று பல பேருரைகள் நிகழ்த்தினார். உணர்ச்சியூட்டுமாறு பேசி நிதியும் ஈட்டினர். நாமக்கல்லில் மட்டும் மூவாயிர ரூபாய் வசூலாயிற்று. முதல் முதல் நம் கவிஞர் செய்த அரசியற்பணி இதுவே. கவிஞரின் சொற்பொழிவாற்றல் பலரையும் கவர்ந்தது. 'கவிஞர் இல்லாத கூட்டம் அமைதி பெறாது,' என்னும் நிலை வந்தது.

1914ல் திருச்சி மாவட்டத்தில் அரசியல் மாநாடு ஒன்று நடந்தது. அதில் பலரும் நம்

கவிஞருக்குத் தலைமை தர விரும்பினர். செயலாள ராயிருந்து தொழிலாற்றுமாறு வேண்டினர். அன்பர் பணியே அரணியெனக் கவிஞரும் இசைந் தனர். அதில் ஒரு பொருட்காட்சியும் நடந்தது. காட்சிச் சாலைக்குக் கவிஞரின் படங்களும் பாட்டி தந்தன. அவர் செயலாளராய் இருந்து ஆற்றிய பணியைப் பலரும் வியந்தனர். இப்படிப் பெருமை பெருகவே, கவிஞரும் சீரிய அரசியல் தலைவ ராஞர். திருச்சி சேலம் இரண்டிற்கும் கவிஞர் தலைமை பூண்டார்.

1921 முதல் 1930 வரை பத்தாண்டுகள் கவி ஞர் வாழ்வில் புத்தாண்டுகள். நாமக்கல் காங்கிரஸ் தலைவருள் ஒருவர் நம் கவிஞர். வருவாய் குறை யும் அளவிற்குத் தம் தொழிலையும் மறந்தார்; 'நாட்டுப் பணியே நற்பணி,' என்று வீட்டையும் துறந்தார்; பெரிய பல சேவைகளை அரிய முறை யில் செய்தார்; கரூர்க் காங்கிரசில் சரியான ஆளில்லை எனபது தெரிந்தது. உடனே விரைந்து சென்று, தலைமை தாங்கினர்; காந்தியடிகளின் ஒத்துழையாமை இயக்கத்தையும் ஆதரித்தார். பத்தாண்டுகள் கரூரில் தனித்தலைவர் என நம் கவிஞரே விளங்கினர். காந்தியடிகளைக் கரூருக்கு அழைத்த பெருமையும் கவிஞருக்கே உரியது.

முதலில், நம் கவிஞர் அரசியலில் திலகருக்கே ஆதரவாளர்; முற்போக்கு வாதமே எப்போதும் பேசுவார், கோகலே முதலிய மிதவாதிகளைக் கன விலும் விரும்பார். திலகரது வழக்கில் ஆறாண்டு சிறை வாசம் அவருக்குக் கிடைத்தது. அப்போது சீமையில் இருந்த கோகலே, வாய் திறவாது இருந்

தார் கண்டு மற்போக்கினர் பலரும் கோகலே யைக் கடிந்தனர் கடிந்தவர் கூட்டத்துள் நம் கவிஞரும் கலந்தவர். பிறகு காந்தியடிகள் நாடு திரும்பி விடுதலைப் போரினைத் தொடங்கினார். காந்தியடிகள் கோகலேயைத் தம் தலைவர் என்றார். அது குறித்து அடிகளாரிடத்தும் நம் கவிஞருக்கு முதலிலே பிடிப்பில்லை.

காசி இந்து பல்கலைக் கழகத் திறப்பு விழா நடந்தது. அது பல மன்னர்கள் நன்கொடையால் தொடங்கியது. பண்டித மாளவியா முன் அமைப்பில் நின்று அக்கழகம் கண்டார். திறப்பு விழாவில் மன்னர் பலரும் சிறப்புற வீற்றிருந்தனர். விழா முடிவில் காந்தியடிகள் வாழ்த்துக் கூற வந்தார். அவர் வாழ்த்தியதோடு அமையவில்லை; ஆடம்பர வாழ்வு சுட்டி அரசர்களைக் கடிந்தார்: "ஏழ்மையும் மடமையும் இன்றி நாடு நலியும், நாம் ஆடம்பரம் பேசுவது பாவம்!" என்றார். கேட்ட பலரும் வாட்டம் உற்றனர். பலபத்திரிகைகள் காந்தியடிகளைத் தூற்றின ஆயினும், அப்பேச்சுக் கவிஞரைக் கவர்ந்தது. கவிஞர் நம் அடிகளை அஞ்சாத நெஞ்சினர் என்பதை உணர்ந்தார். எவ்விடத்தும் தமது கடமை மறவாத திடம் உடையவர் எனப் போற்றினார்; ஏழைகள் சார்பிலே பேசும் பெரியர் என அடிகளைப் போற்றினார். சிறுகச் சிறுகக் 'காந்தி பக்தி' நம் கவிஞரிடம் வேரூன்றியது. அன்று முதல் இன்றளவும் "நான் காந்தி பித்தன்," என்று கவிஞரே கூறுகிறார்.

காந்தியடிகள் 1920-ஆம் ஆண்டு அரசியலில் ஒத்துழையாமையைப் புகுத்தினார். அவர் தூண்

டிய **திலாபத்து** இயக்கத்தையும் காங்கிரஸ் ஏற்றது. முஸ்லிம்கள் பெருவாரியாகக் காங்கிரஸில் சேர்ந்தார்கள். ஒத்துழையாமை பற்றி முடிவு செய்யக் கல்கத்தாவில் 'தனிக் காங்கிரஸ்' கூடிற்று. திலாபத்து மாநாடும் அதனை அடுத்து நடந்தது. தலைவர்களுடைய சாதாரணர்களும் பெருந்திரளாகக் கூடினார்கள். அங்கே **'திலகர் கட்சி, காந்தி கட்சி'** என இரு வேறு பிரிவுகள் ஏற்பட்டன. 'அரசியலில் சத்தியமும் சாத்துவிகமும் புகக் கூடாது,' என்பது திலகர் கட்சி. காந்தியடிகளின் ஒத்துழையாமையில் பலருக்கு விருப்பமில்லை. தமிழகத்துத் தலைவர் பலரும் அன்று திலகர் கட்சியிலே இருந்தனர். இருந்தும், நாட்டில் காந்தியடிகளின் செல்வாக்கு எல்லை மீறியது. இருதிறத்தாரும் தத்தம் கட்சிக்கு மக்களைத் திரட்டினர். **ஹனீபு சாயபு** என்ற முகமதியர் உதவியாலே நம் கவிஞர் கல்கத்தா சென்றார். கவிஞருக்கு, அவர் தமது சொந்தப் பொறுப்பில் ரூபாய் நானூறு தந்தார். கவிஞரும் சென்று காந்தி கட்சிக்கு வாக்குக் கொடுத்து மீண்டார்.

கல்கத்தாக் காங்கிரஸில் நம் கவிஞருக்குப் பல தலைவரின் நட்புக் கிடைத்தது. கப்பலோட்டிய **தமிழர் சிதம்பரனாரை** இடையிலே கண்டு மகிழ்ந்தார். சிதம்பரனார் கவிஞரின் தமிழறிவைப் போற்றினார்; கவிதை புனையும் ஆற்றலையும் பாராட்டினார்; கவிஞரது நாட்டுக் கும்மியைப் பாடக் கேட்டு மகிழ்ந்தார். கவிஞரும் சிதம்பரனாரது குண இயல்பு கண்டு, மனமிளகினார். **சுத்தானந்த அடிகளும்** கவிஞருக்கு அரசியல் தந்த தோழரே ஆவர்

கரூரில் நாடகக் கொட்டகைக் கலகம் ஒன்று நடந்தது. அக்கலகம் காங்கிரஸுடன் தொடர்பு படுத்திப் பேசப்பட்டது. அது பற்றிய உண்மையை காந்தியடிகள் அறிய விரும்பினார். திருச்சிக் காங்கிரஸ் கமிட்டி நம் கவிஞரையே உண்மை காண ஆணையிட்டது. கவிஞரது முடிவு அடிகளுக்கு அனுப்பப்பட்டது. இப்படிப் பலரது நம்பிக்கைக்கு உரியவராய் நம் கவிஞர் திகழ்ந்தார். நடுநிலை வழுவாத தன்மைகளைப் பெற்றது நம் கவிஞரது சிறப்பு.

காந்தியடிகளைக் காங்கிரஸின் மேலாக நம் கவிஞர் மதித்தார். "காந்திய அரசியலைக் காட்டிலும் அவரது ஆன்ம நேர்மைக் கொள்கையே என்னை அடிமை கொண்டது," என்று கவிஞரே எழுதுகிறார். காந்தியத்தைக் கடைப்பிடிப்பதிலும் அவர் வழுவினதில்லை. காந்தியம் கவிஞரது சொந்த வாழ்விலும் புகுந்து திகழ்ந்தது. கவிஞரின் சொந்த மனைவியார் முத்தம்மாள். முத்தம்மாளுக்குக் குழந்தையில்லை. வேறு மணம் புரிந்தேனும் விழைந்து அதைப் பெறுவது விட்டுவிட்டார். முத்தம்மாளே தம் தங்கையார் சவுந்தரத்தைக் கணவருக்கு மணம் செய்து வைக்க இசைந்தார். மற்றவரும் அதற்குப் பரிந்து பேசினர். ஆனால், நம் கவிஞரோ, இறுதிவரை அதற்கு உடன்படவில்லை. "காந்தியம் தவறும்," என்பது கருதியே அம்மணத்தை நம் கவிஞர் மறுத்தார்.

காந்தியம் தவறாத கவிஞரின் சேவையை எவரும் மெச்சினர். 1937-ஆம் ஆண்டில் காங்கிரஸ் கட்சி பதவிக்குப் போட்டியிட்டது. தேர்தலுக்குக் காங்கிரசின் ஆட்கள் பொறுக்கினார்கள். சேலம்

நகராண்மைக் கழகத்துக்கு நம் கவிஞர் உறுப்பினர் ஆனார். எவருமே கவிஞருடன் போட்டியிடவில்லை. பல காலம் அக்கழகவுறுப்பினராயிருந்து கவிஞர் சிறப்புற்றார். இபுராகிம் என்ற முகம்மதியர் மற்றோர் உறுப்பினர் கவிஞரின் பாடலில் சிலவற்றைக் கழகச் செலவில் அச்சிட அவர் முடிவு கொண்டுவந்தார். அது பள்ளிப் பிள்ளைகட்கும் பாடமாயிற்று, எல்லாவுறுப்பினரும் ஒரு மனமாக அம்முடிவினை ஏற்று நிறைவேற்றினர்

கவிஞர் அரசியல் காரணமாகச் சிறையும் செல்ல நேர்ந்தது. 1932-ஆம் ஆண்டில் காந்தி அடிகளின் மெய்வழிப்போரில் (சத்தியாக்கிரகத்தில்) நம் கவிஞர் ஈடுபட்டார் ஓராண்டு சிறைத் தீர்ப்பும் வேலூர் வாழ்வும் அவருக்குக் கிடைத்தன. சிறை வாழ்வு மட்டுமன்றி, அவர்தம் நிறைவாழ்வின் நலமும் குலைந்தது. மூத்த மனைவியார் முத்தம்மாள் இறந்தார். உடலுறுதியும் தளர்ந்தது. இலக்கியப் பணியும் சித்திரத் தொழிலும் தடைபட்டன. போதிய வருவாயை இழந்து குடும்ப வளமும் இடுக்கண் உற்றது. இவை எவையும் பேணாது நம் கவிஞர் தூய சேவை செய்தார்; பிறந்த பொன்னாட்டை மறவாது பேணினார்; பிறர் நலமே பேணித் தந்நலம் மறந்தார், தம் நலத்தினும் நாட்டு நலம் பெரிதல்லவா? தன்னைக் கேடு சூழினும், நாடு நலம் பெற வாழ்வதே சீரிய வாழ்வு. அச்சீரிய வாழ்வே நம் கவிஞர்தம் அரசியல் வாழ்வு. அவர்தம் வாழ்வு நாட்டிற்கும் நமக்கும் நல்ல வழி காட்டும்!

ஓவியமும் காவியமும் ஒன்றுபட்டு இணைந்தவை. இரண்டிற்கும் அடிப்படை கலைத்திறன் ஒன்றே ஆகும். கற்பனையில் எழுந்த கருத்தை இருவரும் பொற்புற அமைப்பர். எனவே, ஓவியப் புலவர், காவியப் புலவர் ஆதலும் கூடும். நம் கவிஞர் சீரிய ஓவியப்புலவர் என்பதை அறிந்தோம். அவரை, **வரகவி பாரதியார்** ஒரு முறை 'ஓவியப் புலவரே, வருக!' என அழைத்தார். இனி நம் கவிஞரின் காவியப் புலமையைக் கருதுவோம்.

நம் கவிஞருக்குக் கவிதையுள்ளம் இளமையிலேயே வாய்த்திருந்தது. அதனை அக்கால நாடக மேடையும் நன்கு பண்படுத்திற்று. நாடகம் காண்பதில் அவருக்கு ஆசையும் அதிகம். தெருக்கூத்தினையும் விடாது நடந்து போய்க் காண்பர். ஓசை நயமும் பொருட்செறிவும் உடைய பாடல்கள் அவர் மனத்தைக் கவரும். அக்கவர்ச்சி அவரையும் பாடும் முயற்சியில் தூண்டியது. இளமையிலேயே பல பாடல்கள் பாடினார்; பிறகு, நாடகப் பாடல்கள் பாடுவதைத் தொழிலாகவும் கொண்டார்; திரைச் சீலைகட்கும் படமும் எழுதித் தருவார். இரண்டு தொழிலாலும் அவருக்குப் பொருளும் திரண்டு வந்தது.

நடிப்புப் புலவர் **கிட்டப்பா**வுக்கு நம் கவிஞர் பாட்டுக்களில் நாட்டம் மிகுதி. அவர் நாளும் புதுப் புதுப் பாட்டுக்களை கவிஞரிடம் கேட்டுப் பெறுவார். கவிஞர் புத்தகம் தொகுக்கும் அள-

**விற்று** நாடகப்பாடல்கள் பாடினார். ஆனால் அனைத்தும் இன்று இறந்து ஒழிந்தன. கவிஞரின் அரசியல் வாழ்வே அதற்குக் காரணம். எனினும், அவ்வரசியலால் நம் கவிஞருக்கு வேறு வழியில பரிசு வந்தது. அன்று முதல் அவர் நாட்டடிமையைப் போக்கவே பாட்டுக்கள் பாடினார். அவர் பாட்டினைப் பலரும் பாடி ஊட்டமும் பெற்றனர். **'நாமக்கல் கவிஞர்'** எனப் பாமரரும் போற்றினர்.

1914-ஆம் ஆண்டு தூத்துக்குடியில் ஒரு கவிதைப் போட்டி நடந்தது. வெற்றி பெற்றவருக்கு வரிசைப்படி பரிசும் தர இருந்தது. அப்பரிசுக்குக் **'கோகலே பரிசு'** என்பது பெயர். தேசாவேசம் தரும் பாடல் நூறு தருபவர் அப்பரிசினைப் பெறுவர். **'நாட்டுக் கும்மி'** என்ற பெயரில் நம் கவிஞர் நூறு பாட்டையும் பாடினார். எளிய நடையும் புலமையழகும் அதில் போட்டி இட்டன. பாடலுள் முதல் நான்கும் கடவுள் துதி. **அரவிந்த நாதன்'** எனப் பிரமனைத் துதித்தார்; மங்கை பங்கனைக் **'கங்காதரன்'** என்றார்: கண்ணனைக் 'கோபால கிருட்டிணன்' எனச் சுட்டினார். அப்பாடல்களில் எல்லாம் இரு பொருள்கள் அமைந்திருந்தன. அரவிந்தர், கோகலே, திலகர் என்பவர் பெருமையும் மறைமுகமாய் நிறைந்திருந்தது. இருபொருளை ஒருங்கு அமைக்கும் கவிதைத்திறன் அனைவருக்கும் எளிதன்று!

காந்தி அடிகளைக் குறித்தும் சிலேடையில் ஒரு பாடல் வந்திருந்தது. காந்தியைக் கந்தனோடு அதில் ஒப்பிட்டிருந்தார். தாமரைமேல் இருக்கும்

பிரமன் கந்தமலர் மேலவன் கந்தமலர் மேலானுக்கும், கந்தன் ஞானபலம் காட்டினன். இதனைச் சுட்டும் அடிகளில் காந்தியடிகளின் பெருமையும் கலந்திருந்தது. 'அரவிந்தருக்கும் மேலான ஆன்ம பலம் காட்டிய சாந்தன்' எனக் காந்தியை ஏத்தியிருந்தார். இப்படி எல்லாம் கவிகள் பலபடியாய்ச் சிறந்திருந்தன. அதனை நாட்டினருக்குக் காட்டப் போட்டியாளர்கள் விரும்பவில்லை.

தலைவர்களைச் சுட்டும் கவிகளில் மூன்றினை நீக்கிவிட வேண்டினர். கோகலேயைப் பற்றியதை மட்டும் நீக்காமல் வைத்தனர். காரணம், பரிசில் தருபவர் அரசியலில் கோகலே வரிசையைச் சார்ந்தவர். அரவிந்தர், காந்தி, திலகர் இவர்களை அவர்கட்குப் பிடியாது. திலகரையும் காந்தியையும் கலகக்காரர்களாய் மதித்தார்கள். 'அரவிந்தர்க்கும் மேல்' எனக் காந்தி பெருமை கூறிய அப்பொழுது வழியில்லை. ஆகவே, கவிஞரிடம் மூன்று பாடலையும் நீக்க அவர்கள் வேண்டினார்கள். கவிஞரோ, அதை மறுத்தார். முடிவில், கவிஞர் பாட்டு, போட்டியையே எட்டிப் பார்க்கவில்லை. வேறு சிலர் பாட்டுக்களே பரிசிலைப் பெற்றன.

பரிசுப் பாடல்கள் பிறகு வரிசையாக வெளி வந்தன. நாட்டன்பர் பலர், கவிஞரின் பாட்டையும் அச்சிட்டனர். எங்கும் பலரும் கவிஞர் பாட்டையே ஏற்றுப் போற்றினர்; பத்திரிகைகள் பலவும் பாராட்டி எழுதின; மதிப்புரைகள் பல சிறப்புற வந்தன. கவிஞரது குரல் பலருக்கும் கேட்டது. பரிசு பெற்றது போலவே, நம் கவிஞர் வரிசையிலும் உயர்ந்தார். தாமே வரும் வரிசையிலும்

ஒருவர் தரும் பரிசிலோ சிறந்தது!

சேலம் இலக்கியக் கழகத்தார் நம் கவிஞரை அழைத்தனர். அழைப்பிற்கு இணங்கிக் கவிஞரும் சென்றார். ராஜாஜி உட்படப் பல அறிஞர் சூழ்ந்திருந்தனர். கவிஞர் பாட்டுக்கள் அங்கு அரங்கேற்றப்பட்டன. பாட்டுக் கேட்ட பலரும் நம் கவிஞரை உச்சிமேல் வைத்து மெச்சினர்.

காந்தி அடிகள் உப்பு மறுப்புப் போரைத் தொடங்கினார். நாட்டு மக்களுட் பலரும் அதில் கூட்டம் கூட்டமாகக் கலந்தனர். கலந்தவர் பலருக்கும் சிறை வாழ்வும் தடியடியும் கிடைத்தன. அப்போரிலே காந்தியடிகள் தண்டி யாத்திரை செய்தார். நம் கவிஞர் அப்பொழுது ஒரு பாட்டைப் பாடினார். 'கத்தி இன்றி ரத்தம் இன்றி யுத்தம் ஒன்று வருகுது!' என்று தொடங்கும் பாடல் அது. பாட்டும் பொருளும் நேரத்திற்கு ஒத்திருந்தன. காலத்தை ஒத்த தகுதியால் சாலவும் அது பேறு பெற்றது.

அப்பாட்டை ராஜாஜி மிகவும் மெச்சினார். வேதாரணியம் உப்பு மறுப்புப் போருக்கு அப்போது அவர் தலைமை தாங்கினார். தொண்டர் படை ஒன்று திருச்சியினின்று சென்றது. வேதாரணிய வீரர்கள் அப்பாட்டைத் தங்கள் வழி நடைப் பாட்டாக ஏற்றார்கள். பாட்டும் மெட்டும் வழி நடைக்கு வாய்த்து இருந்தன. காலடிக்கு ஏற்ற படி பாட்டின் நாலடியும் முடிந்திருந்தன. பொறுமைப் போரின் உள்ளுரையையும் அது பெருமையுறக் காட்டிற்று.

பாட்டு, அதன் பொருள், பெறும் பயன் இம்

மூன்றையும் நாட்டவர் கண்டனர். இம் மூன்றும் கூடியபாடியை மேலாகப் பேசினர். கவிஞரின் புகழ் மணம் திக்கு எங்கும் வீசிப் பரவிற்று. **'தமிழ் நாட்டின் தேசியகவி'** என்று அவர் பட்டமும் பெற்றார். ராஜாஜி தஞ்சை புகுந்தபோது கவிஞருக்கு ஒரு கடிதம் எழுதினார். பாட்டின் அடிப்படை உணர்ச்சியை அவர் நேரில் கண்டவர். எழுதிய கடிதம் கவிஞரைப் புகழ்ந்தது. "இந்த நேரம் பாரதி இல்லையே என்று எண்ணினேன்; அந்தக் குறையை நீங்கள் நீக்கினீர்கள்!" இப்படி நம் கவிஞரை ராஜாஜி புகழ்ந்து எழுதியிருந்தார். இது நிற்க.

1924-ஆம் ஆண்டில் சென்னையில் 'அனைத்திந்திய தேசியக் காங்கிரசு' நடந்தது. தேசபக்தர் எஸ். ஸ்ரீனிவாச அய்யங்கார் வரவேற்புக் குழுத் தலைவர். தேசியப் பாடல்களுக்கு எனப் புலவர் போட்டி ஒன்று வைத்தார். நம் கவிஞர் புலவர் பலரோடு போட்டி இட்டார். முடிவில் பரிசு கவிஞரையே தேடி வந்தது. தங்கப் பதக்கம் ஒன்றும் அதன் அறிகுறியாய்க் கவிஞருக்குக் கிடைத்தது. இதிலிருந்து நம் கவிஞரும் **'காங்கிரசுப் புலவர்'** ஆனார்.

தாம் பெற்ற புலமையால் கவிஞர் தமிழுக்கும் உற்றது செய்தார். சிறையில் கிடந்து உழலும் போதும் அவர் திருக்குறளை ஆராய்ந்தார்; திருக்குறளுக்குப் புதிய உரையும் கண்டார். இனிய எளிய கவிதையில் **'அவளும் அவனும்'** என்னும் நூலைப் பாடியுள்ளார். கம்பர் கலைவளத்தைக் கவிஞரது **'இலக்கிய இன்பம்**

மலைவுறக் காட்டும். **'என் கதை'** என்ற நூல் அவர் தம் வரலாற்றை மொழியும். **'மலைக் கள்ளன்'** என்ற நவீனம் கலைக்கண்ணோடு காட்சி தரும். **'தமிழிசையின் சிறப்பு'** அவர் எழுதிய இசைத் தமிழில் காணும் தமிழுக்குத் தங்கமான இலக்கியம், அவர் தம் **'சங்கொலி'** மிக்க பழந்தமிழர் பண்பாட்டைத் **'தமிழன் இதயம்'** திறந்து காட்டும். அவர், மேடையில் பேசிய பேச்சு எல்லாம் **'கவிஞன் குரலில்'** கேட்கலாம். இவை கண்ட அரசினர் நம் கவிஞரைத் தக்க வகையில் போற்றவும் மறக்கவில்லை. சென்னை அரசாங்கம் நம் கவிஞரைத் தனது **'அரசவைக் கவிஞர்'** என ஏற்றுள்ளது.

"வாழும் காலத்திலேயே தக்க கவிஞரைத் தமிழகம் மதித்ததே!" என நாமும் மகிழலாம்! கவிஞர் பதவி பெற்றது பெரிதன்று, பெற்றதை ஏற்ற முறையே போற்றுதலுக்கு "எனக்கு இதற்குரிய தகுதி பெரிதன்று, பெரிய புலவருக்குத் தர வேண்டிய அரிய பதவி. எனவே, பிற புலவரின் சார்பிலே நின்று இதனை ஏற்கிறேன்," என்று அன்று கூறினார். 'பெருக்கத்து வேண்டும் பணிவு,' என்பது வள்ளுவர் வாக்கு. பணிவையே அணி எனப் பேணுபவர் நம் கவிஞர். அவருக்கு மேலும் பல வளங்கள் எய்தும் என்பதில் ஐயம் இல்லை. அவர் வளம் பல பெற்றுப் பல்லாண்டு வாழ இறைவனை வேண்டுவோம்!

III

கவியோகியார்

# சுத்தானந்தர்

## I பிறப்பும் இளமையும்

**சிவகங்கை**, பாண்டி நாட்டுப் பழம்பதி களுள் ஒன்று. மருதிருவர் வீரம் காட்டி விளங்கிய விழுமிய பெருவீரர்களின் உறைவிடம், தமிழ்ப்புலவர் பலரோடு தொடர்புடையது. கம்பர் தமது இறுதிக்காலத்தை இங்கேயே கழித்தனர் என்பர். **விசையப்பர், பிச்சுவையர் இராமலிங்கர்** முதலியோர் பலர் தோன்றிய பெரும்புலவர்கள். அவர்கள் வீறுபெற்று விளங்கியதும் இவ்விடமே.

**சங்கரையரின்** குடும்பம், சிவகங்கையில் பெயர் பெற்றது. அக்குடும்பத்தார் ஐதராபாதில் அரசறிய வாழ்ந்தவர் கல்வியும் ஒழுக்கமுமே அவர் தம் குலதனம். பாரம்பரிய வாழ்வு பெற்ற அந்தணர் குலத்தில் வேங்கடம் அரங்கநாதர் என்பவர் தோன்றினார். அரங்கநாதர் நல்ல உடல் உரம் வாய்ந்தவர் தமிழிலும், தெலுங்கிலும், வடமொழியிலும் கற்ற புலவர் அவர் திருப்பூவணக்கோயிலில் அலுவல் பார்த்து வந்தார். அவர் தம் மனைவியார் **மீனாட்சி அம்மாள்** என்பவர். அவர்தம் இல்வாழ்க்கை நல்லறமாய் விளங்கிற்று. அந்நல்லறப்பயனாய்

நால்வர் மைந்தர் பிறந்தனர். அந்நால்வருள் மிக்கவர் **சடாதரர்.**

சடாதரர் என்பது, திருப்பூவணத்து இறைவன் பெயர். அரங்கர் அப்பெயரைத் தம் மைந்தர்க்குச் சூட்டினார். சடாதரர், முனிவரை ஒத்த மனநிலையுடையவர், நல்ல கட்டுருக்கு வாய்ந்தவர்; கள்ளம் கபடமற்ற உள்ளத்தினர்; கடவுள் வழிபாட்டிலும் மிக்கவர்.

அவர்தம் மனைவியார் **காமாட்சி அம்மையார்.** அவ்வம்மையார் சிறியசெல்வக்குடும்பத்திலே பிறந்தவராயினும், வீட்டுவேலைகளைத் தாமே செய்யும் நாட்டம் உள்ளவர், கணவர் கருத்தறிந்து நடப்பவர், விருந்தோம்பலும் ஈகையும் மிக்கவர்; மருத்துவமும், மந்திரமும் செய்து ஊருக்கு உதவுமியல்புடையவர்; எந்தக் குழந்தையையும் சிந்தை மகிழ்ந்து அணைக்கும் இயல்பினர். அவ்வம்மையார் சடாதரர் மனைக்கு ஒரு விளக்கமாய் விளங்கினர். அன்பும் அறனுமே அவர்தம் இல்வாழ்க்கையின் பண்பும் பயனுமாய் இருந்தன. அவ்விருவருக்கும் நம் **சுத்தானந்தர்,** ஆயிரத்து எண்ணூற்றுத் தொண்ணூற்று ஏழாம் ஆண்டு மே மாதம், பதினோராம் நாள், தமிழகம் தழைக்கத் தோன்றினர்.

பெற்றவர் குழந்தையைக் கண்டு மகிழ்ந்தனர்; பிள்ளையின் வருங்காலத்தைக் கணித்தனர். இது "யோக ஜாதகமன்று; யோகி ஜாதகமே" என்று ஒருவர் கூறினர். பிள்ளைக்குப் பெயரிடும் பருவம் நிறைந்தது. **'வேங்கடரமணி'** என்று பெற்றோர் பெயரிட்டனர். ஆனால், பெற்றோரிட்ட பெயர் நாளடைவில் மறைந்தது. இறுதியில் ஒரு

துறவியார் தந்த பெயரே நன்கு நிலைத்தது அதுவே, '**சுத்தானந்தர்**' என்பது.

சுத்தானந்தர் இளமை முழுவதும் சிவகங்கையிலே கழிந்தது. சிவகங்கையின் சூழ்நிலை இவரது வாழ்க்கையை நல்ல முறையில் உருவாக்கிற்று. இவரது வீட்டினை அடுத்துக் கோயிலும் மடமும் உண்டு; கல்வி நிலையமும், குளிக்கும் குளமும பக்கத்திலே இருக்கும். வேதம் ஓதும் பாடசாலை ஒன்றும் வீட்டை அடுத்திருந்தது. '**ஆத்தாள் ஊரணி**' என்ற அழகிய தாமரைக்குளமும் அருகே உண்டு. இச்சூழ்நிலைகள் இவரது மனத்தை நன்முறையிலே பண்படுத்தின. இளமையிலேயே சுத்தானந்தர் ஆலயம் புகுந்து இறைவனை வணங்குவர்; பஜனை மடத்திற்குச் சென்று இறைவனைப் பாடுவர்; தாமரைக்குளத்தருகே அமர்ந்து, தமிழமுது பருகுவர், அடிக்கடி கோயிலும் வனமும் சென்று, இயற்கையைக் கண்டு களிப்பார். இவற்றை எல்லாம் கருதியே போலும் "சுத்தானந்தர், சிவகங்கையே எனது சிவகங்கை," என்பார்.

நல்ல முறையில் பிள்ளைகளை வளர்த்தல் பெற்றவர் கடன் ஆகும். சடாதரர் பூசையும் பஜனையும் செய்வதைப் பார்த்து, சுத்தானந்தர் அவற்றையும் தாமும் தவறாது செய்து வருவார். இச் சிறுவயதுப் பழக்கம் சிலையில் எழுத்தாய் என்றும் அமைந்து நின்றது. துறவு நிலைமை சில நேரம் இவருக்கு உலக வெறுப்பை ஊட்டும். திரௌபதி அம்மன் கோயில் சென்று, இவர் பாரதக் கூத்துப் பார்ப்பது உண்டு; வீட்டில் வந்து, தாம் பார்த்தபடியே நடிப்பார்.

அரிச்சந்திர நாடகத்தை ஒருமுறை இவர் கண்டார், அரிச்சந்திரன் பட்ட துயரங்களைக் கண்ட போது 'ஐயோ'! என்று வாய்விட்டலறினார் உண்மையை மதித்துணரும் திறம் அதனால் இவருக்கு உண்டாயிற்று

தாயார் ஒருமுறை இவரைக் கடைக்கு அனுப்பினார் கடைக்குச்சென்ற இவர், தேவையான பொருள்களை வாங்கிக் கொண்டு பணமும் கொடுத்துவிட்டார், மளிகைக்காரர் கொடுத்த மிச்சத் தொகையை வரும் வழியில் எண்ணினார். காலணா அதிகமாய் இருந்தது தாயாரிடம் ஓடி வந்தார்; "அம்மா, இன்று காலணா இலாபம்!" என்று நிகழ்ந்ததைச் சொன்னார் 'பாவம்! வியாபாரியை ஏமாற்றக் கூடாது,' என்று தாயார் கற்பித்தார் பின்பு இவர் தாமே மீண்டும் சென்று காலணாவை மளிகைக்காரரிடம் கொடுத்துவந்தார். இது சுத்தானந்தருக்கு ஒரு நல்ல படிப்பினை ஆயிற்று.

பிற உயிர்கள் வருந்துவதைக் காண நம சுத்தானந்தர் பொறுப்பதில்லை. இவர் ஒரு நாள் தம் பாட்டியார் நெய்யில் மொய்த்திருந்த எறும்புகளை அப்புறப்படுத்தாமல் தேய்த்ததைக் கண்டார், உடனே மனம் நடுங்கிப் பாட்டியாரைக் கடிந்தார் தோ வீதியில் எறும்புப் புற்றுகளுக்கு இவர் அடிக்கடி குறுநொய் போடுவர். இவர் தாயார், வீட்டில் பொறி வைத்து எலி பிடிப்பது உண்டு, தந்தையார் அவ்வெலிகளை அடிப்பர். இவரது இளைய மனத்திற்கு இது பிடிக்கவில்லை. ஆகவே, நாடொறும் இவர் எழுந்த

வுடன் பொறியை எடுத்து நெடுந்தொலைவிற் செல்லுவார்; பொறியிலகப்பட்ட எலியை ஊருக்கு அப்பால் உள்ள கற்றுழைப் புதரில் விட்டுவிட்டு வீடு திரும்புவார்.

இறந்தவரைக் கண்டபோதெல்லாம் இவரது மனம் இறப்பினைப்பற்றி நினைக்கும். அந்நினைவு 'உடலும் உலகும் நிலையா,' என்ற தலையாய கருத்தை இவருக்கு வற்புறுத்தும். வீட்டிலும் வெளியிலும் நடக்கும் சகோதரச் சண்டைகளால் இவரது மனம் சலிக்கும். இவருக்குத் துறவியாரான பாட்டனார் ஒருவர் உண்டு. இவர் ஒரு முறை அவரைத் தோட்டத்தில் இருத்தி அவருக்குப் பணிவிடைகள் செய்தார். அவரும் 'தியானம், மோனம்' முதலிய யோக வழிகளை இவருக்குப் பயிற்றுவித்தார். இவ்வாறு துறவுள்ளம் இவருக்கு இளமையிலே வளர்க்கச் சூழ்நிலை உதவிற்று

சுத்தானந்தர் வீட்டுக் கொல்லையிலே தேன் கூடு ஒன்று இருந்தது. இவர் அதனை ஒவ்வொரு நாளும் தவறாது கவனிப்பார். ஈக்கள் பூக்களில் அமர்ந்து தேன் எடுப்பதும், அதைக் கூட்டில் கொண்டுவந்து சேர்ப்பதும், இவருக்கு வியப்பாகத் தோன்றும். இதிலிருந்து சிக்கன வாழ்வின் சிறப்பினை நன்குணர்ந்தார். இப்படியே எறும்பின் சுறுசுறுப்பும் இவரது வாழ்வுப்பாதைக்கு உரிய வழி காட்டிற்று.

நம் சுத்தானந்தரின் இளம்பருவ வாழ்வு இப்படி மூன்று கிளைகளாய் வளர்ந்தது. இவரது ஒரே குறிப்பு, கடவுள்; ஒரே பயிற்சி, அன்பு; ஒரே செயல், கருணை.

சுத்தானந்தர், குழந்தைப் பருவத்திலேயே மூத்தவர் படிக்கும் புத்தகத்தை எடுத்துப் படிப்பர்; அவர்கள் அறியாதபடி பள்ளிக்கும் சென்று மீளுவர். பயிலும் மாணவர்கள் வீட்டு வழியே போவதைக் கண்டால், இவருக்கும் அங்கினைவு எழும். உடனே புத்தகமும் கையுமாய் இவர் பள்ளி செல்லுவார். 'வருவதுதானே வரும்,' என்பர். வற்புறுத்தினாலும், தன் விருப்பு இன்றிப் படிப்பு வராது. படிப்பு இவரைத் தானே வந்தடைந்தது.

இளமையிலேயே இவருக்குத் தமிழிலே ஒரு தனியன்பு ஏற்பட்டது. இவர் ஒரு நாள் தமிழ் வகுப்பிற்குத் தாமே சென்றார். **தெய்வசிகாமணியார்** என்பவர், தமிழ் ஆசிரியர். அவர், இவரது தமிழன்பைக் கடிதில் உணர்ந்தார்; "நீ மாலையில் வைத்தியம்பிள்ளை மடத்தில் வந்து இரு; நான் உனக்குக் கல்வி கற்பிக்கிறேன்," என்றார். அதன்படியே புலவர் வரவு நோக்கி மடத்தில் இருந்தார். தெய்வசிகாமணியார் வந்து இவருக்கு இரண்டு திருக்குறளை நெட்டுருச் செய்வித்தார்; "தம்பி, நீ நன்குபடி; எண்ணும் எழுத்துமே கண். அறிவு, நீரூற்றுப்போலப் படிக்கப் படிக்கப் பெருகும். உன் ஊக்கத்திற்குத் தக்கபடியே அறிவும் வளரும்," என்று அக்குறள்களின் பொருளையும் எடுத்து இனிது விளக்கினார். இவ்வாறு நம் சுத்தானந்தர் முதலில் திருக்குறளையே கேட்டுப் படித்தார். "புலவர் அன்று சொல்லிய

குறள்கள் என்றும் என் வாழ்வில் ஊறின," என்று நம் சுத்தானந்தரே சொல்லுகிறார்.

நம் சுத்தானந்தருக்குப் பள்ளி புகும் முன்னரே '**பராபரக் கண்ணி**' பாடம் ஆகி இருந்தது. இவர் எழுத்தெழுத்தாக அதனை எடுத்து எழுதிப் பழகினார் கோயிலிலும், கோபுரத்திலுமே இவருக்கு இப்படிப்பு நடந்தது. பராபரக் கண்ணியால் இவருக்கு எழுத்து நன்கு பிடிபட்டது. தந்தையாரும் வீட்டில் இவருக்கு எண் சுவடி வாய்பாடு கற்பித்தார். எனினும், இவருக்குக் கணக்கில் விருப்பமில்லை. பின்னர் இவர் இரட்டைத்தெரு அரங்கையங்கார் பள்ளிக்கூடத்தில் சேர்ந்து படித்தார். அங்கு, பால சிட்சை, நீதி சதகம், ஆத்தி சூடி, நல்வழி என்னும் நூல்கள் இவருக்குப் பாடமாயின.

தொடக்கப்படிப்பு முடிந்ததும் பெற்றோர் சுத்தானந்தரை ஆங்கிலம் கற்பிக்கும் பள்ளிக்கு அனுப்ப விரும்பினர். ஆனால், இவர் ஆங்கிலத்தைப் பள்ளியிற் பயில விரும்பவில்லை. ஒரு நாள் சுத்தானந்தர் தாமரைக்குளம் சென்றார். ஆசிரியர் தெய்வசிகாமணியார் வழக்கம் போல அங்கு வந்திருந்தார். "தமிழறிஞரே! நான் தமிழே கற்பேன்; ஆங்கிலம் எனக்கு வேண்டுவதில்லை; ஆகவே, ஆங்கிலப் பள்ளிக்குப் போகாமல் ஓடி வந்து விட்டேன்! தேடி வந்த எனக்குத் தமிழ் கற்பியுங்கள்," என்று சுத்தானந்தர் புலவரிடம் முறையிட்டார். அதனைக் கேட்ட புலவர், "அது சரியன்று: தமிழை நன்கு படி; காலத்துக்குத் தக்க கல்வியும் வேண்டும்; அதனால், ஆங்கிலமும்

படி," என்று சொல்லி அனுப்பினர் பின்னர் அவர் ஆணைப்படி சுத்தானந்தர் சிவகங்கை உயர்நிலைப் பள்ளியில் சேர்ந்து ஆங்கிலத்தையும் பேணிக் கற்றனர்.

இவர் தந்தையார் எளிய நிலையிலே வாழ்ந்து இவர் படிப்பிற்குப் பணம் செலவழித்தார். தந்தையார் படும் பாடு கண்டு இவர் உள்ளம் குழைவர். பள்ளிப்பருவம் முழுவதும் இவர் தாமே தம் ஆடையை வெளுத்து உலர்த்துவர்; கோயில் விளக்கின் துணைகொண்டு படிப்பர்; புத்தகம் வாங்க இயலாதபோது தாமே கையால் பிரதி செய்து படிப்பர்; பிறருக்குப் புத்தகம் **'பைண்டு'** செய்து கொடுத்துக் கூலியும் பெறுவர்.

மேல் வகுப்பில் கற்கும்போது இவர் ஆங்கிலமே பேசினர். எழுதுவதும் நினைப்பதும் ஆங்கிலத்திலேயே நடைபெறும். நூல் நிலையம் சென்று அரிய நூல்களை ஆராய்ந்து படிப்பர். **ஷேக்ஸ்பியரை**யும், ஷெல்லியையும் தவறாது மனப்பாடம் செய்வர்; **வீரசவர்க்கார்** எழுதிய **'இந்திய விடுதலைப் போர்'** என்னும் நூலைப் படித்து, நாட்டுப்பற்றும் மிக்கவராயினர்; தமிழையும் தனித்து முயன்று படித்து உயர்ந்தனர். தெய்வசிகாமணிப் புலவரும் இவர் முயற்சியில் ஒத்துழைத்து உயர்ச்சி பெற உதவினர். "கம்பரும் திருவள்ளுவருமே சீரிய நூல்கள்; அவற்றை விடாதுபடி," என்று புலவர் உரைக்கினர். நாடோறும் தாமரைக்குளம் சென்று சுத்தானந்தர் தமிழ் கற்று வருவர்; நாட்டரசன் கோட்டைக்கும் அடிக்கடி நடந்து செல்லுவர்; அங்குக் கம்பர்

சமாதியின் அருகிருந்து இராமாயணத்தைப் படிப்பார்

படிக்கும் காலத்திலே சுத்தானந்தருக்கு நாடகத்தில் நாட்டம் மிகுதி. இவர் பல நாடகங் களை நடந்து சென்று காண்பார்; ஒரு நடிகரிடம் நடனமும் கற்றனர்; நடிகர்களின் பாடலைப் பெற்றுத் தாமும் பாடம் செய்து வந்தனர். இறு தியில நாடகத்தில் சேர வேண்டும் என்னும் நினைவும் இவருக்கு வலுத்தது. நடிகர்களோடு சேர்ந்து அயலூருக்கு ஓடிவிடவும் முடிவு செய் தனர். ஆயினும், இவரது மனமே இவரைத் தடுத்து நிறுத்தியது. ஆனால், பள்ளியில் நடக் கும் நாடகங்களில் நடித்தனர். நடிப்புக்கான பரிசுகள் பல இவர் பெற்றதும் உண்டு; மாணவர் சங்கச் செயலாளராயும் பணியாற்றினர்; ஆண்டு விழாவையும் பலர் கொண்டாட நடத்தினர்.

இவர் மாணவர் கூட்டங்களில் எல்லாம் கலந்து பேசுவர்; பிறர் பேசுவதைத் தாமும் சென்றிருந்து கேட்பார்; ஓய்வு நேரங்களில் உலக நிகழ்ச்சிகளையும் உற்று நோக்குவர். உலக அரங் கில் வாழ்க்கை நாடகத்தின் பல கோணங்கள் இவருக்குத் தோன்றும். "வறுமைக் காட்சியும் பிச்சை பெற்றுண்ணும் உலகமும் தொலை யாவா!" என்று ஏங்குவர். "பிச்சை புகும் உலகம் ஒழியத் தொழில் உலகம் வளர வேண்டும். உழைப்பையும் பிழைப்பையும் ஒன்று சேர்க்க வேண்டும்." என்னும் முடிவினை இவர் அன்றே கண்டார். பல நேரங்களில் ஏழைகள் வாழ்வை நினைத்துக் கல்வி அறையில் இவர் கண்ணீர் விடு வர். இச்சூழ்நிலைகளால் இவருக்கு இளமை யிலேயே ஆன்ம அறிவு வளர்ந்தது.

ஒரு நாள் வகுப்பில் ஆசிரியர் கூட்டல் கணக்குப் போட்டார், 'ஒன்றும் ஒன்றும் இரண்டு,' என்று கற்பித்தார். நம் சுத்தானந்தர் எழுந்து, 'ஒன்றும் ஒன்றும் ஒன்றே,' என்றார். உடனே பிரம்படி விழுந்தது. "சீவான்மாவும், பரமான்மாவும் ஆகிய இரண்டும் கூடினால் ஒன்றுதானே?" என்றார் நம் சுத்தானந்தர் ஆசிரியர் மீண்டும் ஓர் அடி கொடுத்து இவரை வகுப்பிற்கு வெளியே அனுப்பினார்.

நாட்டுத் தொண்டிற்கு ஆன நல்லறிவும் இவருக்குப் பள்ளியிலே கிளைத்தது. அக்காலம் **வீர சிதம்பரனார்** தூத்துக்குடியில் கப்பலோட்டினார். கப்பலுக்கு ஊர் ஊராகச் சென்று பொருள் திரட்டப்பட்டது, சுத்தானந்தரும் தோழர் பலரோடு கூடிப் பிடியரிசி வாங்கி அதற்கு உதவினார்

காலஞ்சென்ற **சத்தியமூர்த்தி** அடிக்கடி சிவகங்கை வருவர் மாணவர்கட்கு அவர் அரவிந்தர் கதையை ஒருமுறை எடுத்துச் சொன்னார் அதைக்கேட்ட அன்று முதல் இவருக்கு அரவிந்தர்மீது பற்று உண்டாயிற்று.

மதுரை வந்தபொழுது பசுமலையைப் பார்த்துவர ஒருமுறை சுத்தானந்தர் சென்றிருந்தார்; ஆசிரியர் பயிற்சிப் பள்ளிக்கும் போனார். அதன் தலைவர் **மைக்கேல்** பம்பவர் இவரை நன்கு அறிவர். அவர் ஆசிரியர் பயிற்சி வகுப்பில் சேர இவரைத் தூண்டினார். சிவகங்கைப் பள்ளித் தலைவரும் அதற்குச் சான்றிதழ் தந்து உதவினார். பிறகு சுத்தானந்தர் பசுமலைக்கு வந்து ஆசிரியர் பயிற்சிக்கும் படித்தார்.

இவர் என்றும் படிப்பில் தவறியதில்லை, பசுமலையிலும் செவ்வனம் கற்ருர்; மைகலேவின் வீட்டிற்குச் சென்று, பாடக்குறிப்பு எழுதி வருவார்; வாரக் கூட்டங்களில் எல்லாம் தவருது பேசுவார், ஆசிரியர்களோடு விடுதிக்குச் சென்று பழகுவார். சிககாகோப் பல்கலைக் கழகத்துக் கலைப் புலமைக்குரிய பாடங்களையும் தனித்துப் படித்தார், ஆங்கில இலக்கியங்களையும் பாங்குறக் கற்ருர்; குழந்தைக் கல்விக்குரிய பல நூல்களையும் விரைந்து பாடங் கேட்டார்; மாதிரி வகுப்பில் நேர் முறை ஆங்கிலம் போதித்துப் புகழ் பெற்ருர்; தமிழ் போதிப்பதிலும் முதல்வர் ஆனுர்; குழந்தைக் கல்வி, பள்ளி ஒழுங்கு, புதிய போதனு முறை முதலான நூல்கள் பல எழுதினுர், நூல் நிலையத்தையும் நன்ருகப் பயன்படுத்தினுர்; பல தமிழ்க் கவிகளும் பாடினுர், ஐம்பது போதனு முறை நூல்களை ஒப்பிட்டுப் படித்தார்; இப்படிக் கருத்தூன்றிய படிப்பால், தேர்விலும் முதன்மை பெற்ருர். "பசுமலையில் ஒரு நொடியும் வீணுக வில்லை. நான் கல்வித் தவம் புரிந்தேன," என்று இவரே கூறுகிருர். பள்ளித் தலைவரும், "பேறு சுறுசுப்புள்ள இளைஞர் இவர்; போதனு முறையிற் சிறந்தவர்; பல்கலைகள் தெரிந்த தமிழ்ப்புலவர். எந்தப் பள்ளியும் இவரைச் சிந்தை மகிழ்ந்து ஏற்கும்," என்று பாராட்டினுர் ஆசிரியர்கள் போற்றப் படிப்பது மாணவர்க்கு அழகல்லவா?

'கல்வியின் நோக்கம் ஒழுக்கமே,' என்பர். பசுமலைக் கல்வி இவரது வாழ்வில் சீரிய மாறுதலைத் தந்தது. பாதிரிமார் பணியை இவரது உள்

ளம ஆதரித்தது. அவர்களைப் போன்று நல்வழி யில பணி செயய உறுதியும் கொணடார், விவி லிய நூலையும நன்கு கற்ருர, கிறித்தவரோடு கோயிலுக்கும போனுர், ஏசு நாதர் சரிதையைக் காவியமாகவும் செயதார், சிலுவைக் காட்சியில் ஏசுநாதராகவே நடித்தார்

சுத்தானந்தருக்கு, "நாம சன்மார்க்கத் தொண்டன் ஆகவேண்டும்," என்ற நினைவைப் பசுமலையே தந்தது. இதனுல், இவர், "பசுமலைக்கு என்றும் நான் நன்றி செலுத்துவேன், அங்கேதான் நான் என் கடமையை உணர்ந்தேன, பாதிரிமார் கள் வாழ்க! என்று வாழ்த்துக கூறுகிருர் பாதிரி மார்களைக் கணடே இவருக்குத தொண்டாற் றும் மனப்பான்மை தோன்றியது பாதிரிமார் களை முன் மாதிரியாகக் கொண்டே இவர் தம் தொண்டையும் மேற்கொண்டார். இப்படி இவ ரது வருஙகாலத்தை உருவாக்கியது பசுமலையே

"தன் கையே தனக்கு உதவி," என்பதை நம் சுத்தானந்தர் இளமை முதலே வாழ்க்கையின் குறிக்கோளாகக் கொண்டவர் எனவே, படிக்கும் பொழுதே தம் முயற்சியால் பணம் ஈட்டினார். படிப்பு முடிந்ததும், பல தொழிலில் இவர் மனம் ஈடுபட்டது விலங்கு மருத்துவத்தில் தேர்ந்து மருத்துவராக முயன்றார் பின்னர் அதில் வெறுப்பு ஏற்பட்டது தந்தையாரின் தூண்டுதலால் கணக்கர் வேலைக்கு விண்ணப்பம் செய்தார். அதுவும் தக்க பயன் தரவில்லை. **நீதிபதி கோபால ராவை** அலுவல் தரவேண்டி இவர் நேரில் கண்டார். "உன் புலமையைப் பாழாக்காதே, ஆசிரியர் தொழிலுக்கு முயற்சி செய், இலக்கியத் துறையிலே புகு," என்று அவர் சுத்தானந்தருக்கு நல்வழி காட்டினார். அதன் பின்னரே, இவர் பசுமலை சென்று ஆசிரியர் பயிற்சிபெற்றார்

ஆசிரியர் பயிற்சி பெறுமுன் இவர் சிவகங்கை அரசர் பள்ளியில் சில காலம் பணி புரிந்தார் பிறகு பசுமலை ஆசிரியப் பயிற்சிப் பள்ளிக்குச் சென்று சிறந்த தேர்ச்சி பெற்றார். உடனே திருமங்கலம் பள்ளி ஒன்றுக்குப் போய், அலுவல் வேண்டினார்; ஆயினும், அஃது இவருக்குக் கிட்டவில்லை. அதிலிருந்து இவர் வலுவில் வந்த அலுவலுக்கும் முயலுவதில்லை என்னும் முடிவுக்கு வந்தார்.

சுத்தானந்தருக்கும் குடும்பத்திற்கும்

நாடர்பு நீங்கியது. இவர் துறவு பூண்டு தொண்டு செய்யத் தலைப்பட்டார்; பலவூர்களுக்கும் சென்று கல்வித்தொண்டும் ஒழுக்கப் பிரசாரமும் செய்து வந்தார். அப்பொழுது காட்டுப் புத்தூரில் ஆசிரியர் வேலை காலியாயுள்ளது என்று இந்து பத்திரிகையில் ஒரு விளம்பரம் வந்தது. சுத்தானந்தர் அதற்கு விண்ணப்பம் செய்தார். இவரை வேலைக்கு அமர்த்தி உத்தரவும் வந்தது. இவர் அங்குச் சென்று வேலையை ஏற்றார்.

சுத்தானந்தரை ஆசிரியராக அடைந்த பேற்றினை அறிந்த பலரும் வியந்தனர். தலைமை ஆசிரியர் சுந்தரமையர், இவரது அருமை தெரிந்து, பெருமைப்படுத்தினார். இவர் மாணவர்களிடம் அன்பும், அவர்கள் மனம் மகிழுமாறு கற்பிக்கும் திறனும் ஒருங்கே வாய்ந்தவர். எனவே, மாணவர் எல்லாரும் இவரைத் தம் உயிரெனப் போற்றினர்.

காட்டுப்புத்தூர் ரெட்டியார் தோட்டத்து அருகே ஒரு சிறிய கொட்டகை உண்டு. சுத்தானந்தர் அதனையே தமது இருப்பிடமாகக் கொண்டார். கலை ஆர்வம் கொண்டு கவிதை புனைவதற்கு நல்ல சூழ்நிலையாய் அஃது உதவிற்று. துறவு நெறிக்குரிய யோக நிலையை மேற்கொள்ளவும் அது வசதியளித்தது. ஆசிரியத் தொழிலும் துறவித் தொண்டும் நல்ல முறையில் செழித்தன. எனவே, காட்டுப்புத்தூரில் சுத்தானந்தருக்குப் பற்றுதல் மிகுதி. இவ்வூரிலேயே 'இவரது **பாரத சக்தி**' என்ற பெருங்காப்பியம் உருக்கொண்டது. சுத்தானந்தர் கவிதைக்கும் இவ்வூரே புதுமை தந்தது. காட்டுப்புத்தூரைச்

சுத்தானந்தர் 'பாட்டுப்புத்தூர்' என்றே வழங்குவர்.

சுத்தானந்தர் கற்பித்த முறை பற்றி நாம் புகழ வேண்டுவது இன்று. "இவரைப் பெற்ற ஆசிரியர் பதவியே புகழ்பெற்றது," என்று பள்ளித்தலைவர்கள் பேசினார்கள். "நாங்கள் வீட்டில் படிக்கத் தேவையில்லை, இவரிடம் பாடம் கேட்டதே போதும," என்று இவரிடம் பயின்றவர்கள் சான்று கூறினார்கள் விடுமுறைக் காலங்களில் மாணவர்களையும் உடன் கூட்டிப் பொதுநலத் தொண்டு செய்தார் சுத்தானந்தர். இதற்கு இடையே சாரணப் பயிற்சியும் பெற்று வந்தார். சாரணத்தொண்டும் நன்முறையில் நடந்தேறியது. "ஆக்கமும் ஊக்கமும் கொண்ட நல்லாசிரியர் இவர்; இவரால் பள்ளி வாழ்வில் புதிய உணர்ச்சி ஏற்பட்டிருக்கிறது," என்று பள்ளி மேற்பார்வையாளர் இவரைப் புகழ்ந்து எழுதினர்

சுத்தானந்தர் ஆசிரியத் தொழிலைத் திறமையுடன் மேற்கொண்டார். எனினும், இவருக்கு அத்தொழிலிலேயே பெரும்பற்றுதல் இல்லை. "மனம் இறைவனிடம் ஈடுபட வேண்டும், கை பொதுநலப் பணியே புரிதல் வேண்டும், நாட்டிற்கும் மொழிக்கும் பெரும்பணி ஆற்றல் வேண்டும்," என்ற கொள்கைகள் இவரை ஆட்கொண்டன. எனவே, இவர் சாரணப் படையை அமைத்து, அதன்மூலம் அரும்பெரிய பணிகள் புரிந்தார்; சாதி சமய வேற்றுமையை நீக்க முனைந்தார்; இருக்குலத்தார் இருக்கும் சேரிகளுக்குச் சென்றும் தொண்டு இயற்றினார்

பிறகு சுத்தானந்தர் வாழ்வில் சிறு மாறுதல் நேர்ந்தது. நாட்டுப் பணிபுரியத் துணிந்து வெளி வரலானார். 'கிலாபத்து' இயக்கத்திற் பங்கு கொண்டார். முகமதியர் மசூதி சென்று அவர்தம் சமய உண்மைகளையும் ஆராய்ந்தார்; காந்தியடிகளைக் கண்டு அவரது மெய்ந்நெறி வாழ்க்கையில் பற்றுதல் கொண்டார்; கதர் உடுத்து அன்னிய உடைகளைக் கொளுத்தினார்; மதுவிலக்கு இயக்கங்களில் சேர்ந்து மறியலும் செய்தார். எனவே, இவருக்கு அரசாங்கக் கண்காணிப்பும் வலுத்தது. ஒற்றரும் உளவாளிகளும் இவரை அகலாது சூழ்ந்தார்கள். தலைமை ஆசிரியரும் இரண்டொரு முறை இவரை அழைத்து எச்சரிக்கை செய்தார். இவர் மனமும் அடிமைத் தொழிலை வெறுத்தது. 'ஆசிரியர் அரசியலில் கலத்தலாகாது,' என்ற முறையில் உத்தரவும் வந்தது. அதற்கு, இவர் ஒப்பந்தம் எழுத வேண்டியவர் ஆனார். அதற்கு மனம் ஒப்பாமல், அந்த வேலையையே உதறி எறிந்தார்.

சுத்தானந்தரின் பள்ளித் தோழர் ஒருவர் தேவகோட்டையினர். அவர் அங்குத் தேசியக் கல்லூரி ஒன்றை நிறுவினார். அவர் சுத்தானந்தரை அங்கு ஆசிரியராய் அமருமாறு வேண்டினார். இவரும் நண்பர் விரும்பியவாறே சென்றார். இவர் விஞ்ஞானம், ஆங்கிலம், பூகோளம், தமிழ் முதலிய பல பாடங்களைக் கற்பித்தார்; மாணவர்க்குச் சாரணப் பயிற்சியும் வழங்கினார். இங்ஙனம், மொழித் தொண்டு, கதர்த்தொண்டு, சாரணீயம் முதலியன நன்கு நடைபெற்றன.

தேவகோட்டையில கட்டற்ற நிலையில் சுத்தானந்தர் காந்தீயத் தொண்டும் செய்தார்

இந்நிலையில் அப்பள்ளிக்கூடம் அரசியல் ஆணைக்கு உட்பட்டது. பள்ளியை நடத்துபவர் அரசாங்க நன்கொடையை எதிர்பார்த்து அங்ஙனமே மாற்றினர். தேசியப் பள்ளிக்கூடம் என்ற நிலை அன்று முதல் மாறிவிட்டது பின்னர், இவர் அங்குத் தங்குவதில் பயன் இல்லை என்பதை அறிந்தார்; உடனே வேலையைவிட்டு விலகினார். பின்னர்ச் சேரன்மாதேவியில் வ.வே சு ஐயர் தம்மை அன்புப்பணிக்கு அழைத்தமைக்கிணங்கி அங்குச் சென்று அருந்தொண்டாற்றுவாராயினர்

வ. வே சு. ஐயர், சுத்தானந்தரை வரவேற்ற போது, "உங்கள் கலையும் தவமும் இங்கு நன்கு நடைபெறும்," என்று ஆசி கூறினார். சுத்தானந்தர் வாழ்வும் ஐயர் வாழ்வுடன் இணைந்து பெயர் பெற்றது. குருகுல அமைப்பு வேலைகளில ஈடுபட்டு இவர் அருந்தொண்டாற்றினார், அங்கும் பாரத சக்தி நூலைத் தொடர்ந்து பாடினார்.

குருகுலத்தில், இலக்கியச் சேவை, கல்வி கற்பித்தல், பத்திரிகை நடத்துதல் முதலிய எல்லாப் பொறுப்பையும் இவர் ஏற்றார், **பாலபாரதிப்** பத்திரிகையைப் பொறுப்பேற்றுச் சிறப்புற நடத்தினார், மாணவர்களை ஆங்கில மொழியிலும் சாரணப் பயிற்சியிலும் தேர்ச்சி பெறச் செய்தார்; தாமும் கம்பரைப் புதிய முறையில் ஆராய்ந்தார்; ஐயரோடு கூடி ஓமர் முதலிய பிற நாட்டிலக்கியங்களையும் போற்றி கற்றார் இப்படிக் குருகுலத்திலே சுத்தானந்தரது இலக்கியப்

பசிக்கு நல்லுணவு கிடைத்தது. பால பாரதியில் இவர் தமிழ நாட்டுச் சிறப்புச் செல்வங்களைக் குறித்துக் கட்டுரை எழுதினார், சிறிய மொழி பெயர்ப்புக்களையும் நேரிய முறையில் செய்தார்; தாம் அதுவரை ஈட்டியிருந்த பொருளையும் அதற்கெனக் கொடுத்தார். ஐயரின் பிரிவிற்குப் பின்பு குருகுலம் கலைந்தது. சுத்தானந்தருக்கு அதன் மீது இருந்த பிடிப்பும் விட்டது. அதனால், இவர் அதனையும் விட்டு நீங்கிப் பின்பு தம் போக்கிலேயே நடந்தார்.

சுத்தானந்தர் பல திறப்பட்ட துறைகளில் ஈடுபட்டார். சிறிது காலம் பத்திரிகாசிரியர் தொழிலை மேற்கொண்டார். எனினும் அரசியற் பணியே இவரது கருத்தைப் பெரிதும் கவர்ந்தது. இவர் குருகுலத்தை விட்டு நீங்கியதும், நேரே தஞ்சை சென்று, **'சமரச போதினி'** என்ற இதழுக்கு ஆசிரியரானார், தலையங்கமும் கலையங்கமும் எழுதி இதழின் இலக்கிய நிலையை உயர்த்தினார்; பொருள் பொதிந்த கட்டுரைகளை எழுதினார்; 'கிராம சேவை'ப் பகுதியில் நாட்டிற்கு உரிய அரசியல் திட்டத்தை விளக்கினார்; வகுப்பு வாதங்களை ஒழித்துக் கட்டினார்; 'தமிழக மாந்தர் அனைவரும் தமிழரே,' எனப் போதித்தார்; பின்பு திருவிடைமருதூர் சென்றார் அங்குத் **'தொழிற் கல்வி'** என்ற இதழைத் தோற்றுவித்தார். இவர் காஞ்சிபுரத்தில் இருந்த போது **'இயற்கை'** என்னும் பத்திரிகையை நடத்தினார்; பின்பு சென்னை சேர்ந்து, **'சுயராஜ்யா'** என்ற தமிழ்த் தினசரியின் ஆசிரியர் ஆனார்.

சுத்தானந்தருக்கு இளமையிலேயே துறவுள்ளம் வலுத்தது. உலகக் காட்சியும் குடும்பச் சண்டையும் அதனை மேலும் வளர்த்தன. "நான் யார்? என் நெஞ்சம் யார்?" என்றெல்லாம் ஆராய்ந்து முடிவு காண முயன்றார் இவரது வாழ்வும் கவலைப் படலமாய் இருந்தது. ஒரு நாள் இவர் புளியமரத்தடியிலே கவலையுடன் அமர்ந்திருந்தார். நண்பர் ஒருவர் புளியம் பழத்தை வீழ்த்த எறிந்த கல் இவரது மண்டையில் விழுந்தது. மண்டையுடைந்து உதிரம் முகத்திலும் வழிந்தது. அதனால், எல்லையில்லாத தொல்லைக்கு இவர் உள்ளானார்.

அந்நிலையில், பழம் தின்று ஏரியில் கைகழுவ வந்த ஒரு துறவியார் சுத்தானந்தர் நிலை கண்டு துணுக்குற்றார். காயத்தைக் கழுவிப் பச்சிலைச் சாறும் பிழிந்தார்; தம் துண்டைக் கிழித்துக் காயத்தைக் கட்டினார். அத்துறவியாரின் பரிவுடைய செயலால் இவரும் அவரை விரும்பினார். பிறகு துறவியார் இவரைத் தனியிடம் கூட்டிச்சென்று, "நீ, சுத்தன்; ஆனந்தன், கவலையற்றவன், காற்றினைப் போல உலவு; உன் உடற்சட்டை, வினை புரிய இறைவன் தந்தது; வினை முற்றியதும் அது பாம்புச் சட்டைபோலக் கழலும்; உலகு உன்னை வருத்தும்; வருந்தாதே; சோதனைகட்கும் கலங்காதே; வருவன யாவும் நலமே தரும்; உனது கன்மக்களிம்பைத் திருவருள் நீக்கும்; எது வரினும் இறைவனிடமே

முறையிடு." என்ற பொருளுரைகளைத் துறவியார் அருளினார் 'ராஜயோகம்' முதலிய சாதனைகளிலும் இவரைத் துறவியார் பயில்வித்தார்

பல பெரியார்களின் பேருரைகளையும் சுத்தானந்தர் கேட்டுத் தெளிந்தார். சிவகங்கைக்கு ஒரு முறை பெசண்டு அம்மையார் வந்தார். சுத்தானந்தர் அவரைத் தனித்துக் கண்டு வணங்கினார். பெசண்டும் மில்டனிலிருந்து இரண்டு அடிகளைச் சொல்லி, அவற்றின் பொருளை விளக்கினார். "மனமே மனிதன். மனம் விண்ணை நரகாக்கும்; நரகையும் விண்ணாக்கும், வெறுக்கும் அடிமை ஆகாதே, விண்ணில் அடிமையாய் இருப்பதிலும், நரகில் விடுதலையோடிருப்பதே மேல்." என்ற அவ் வடிகளின் பொருள் சுத்தானந்தர் கருத்தைக் கவர்ந்தது. பிற்காலத்தில், மில்டனைப் படிக்கும்படியும் இவரை அது தூண்டிற்று.

மதுரையில் சுத்தானந்தருக்கு அம்மானார் வீடு ஒன்று உண்டு. அம்மானார் பெருஞ் செல்வர். அவருக்குக் குழந்தை இல்லை என்ற குறை இருந்தது. அதனால், அவர் நம் சுத்தானந்தரைத் தத்து எடுத்து வளர்க்க நினைத்தார். பெற்றோர் இருவரும் அப்படியே செய்ய விரும்பினர். சுத்தானந்தரும் அவ்வாய்ப்பினைப் போற்றியிருந்தால், பெருஞ் செல்வராய் இருந்திருக்கலாம். ஆனால், இவர் குழந்தைப் பருவத்திலேயே செல்வத்தை வெறுத்தார்; அம்மானாருக்கு மகனாகவும் மறுத்தார்.

அவ்வாறே சுத்தானந்தர் திருமணத்தையும் விரும்பவில்லை. ஆனால், பெற்றோர் தம் கடமையை

நிறைவுபெறுவதில் கருத்தாய் இருந்தனர். பசுமலை வாழ்வு சுத்தானந்தருக்குக் கட்டற்றுத் தொண்டு செய்வதை நினைப்பூட்டிற்று. தாய் தந்தையர் நேரிலும் கடிதமூலமும் இவர் மனத்தை மாற்ற முயன்றனர். எதுவும் போதிய பயன் தரவில்லை.

சுத்தானந்தரின் துறவுக்குக் காரணம் அவரே கூறுகிறார், "எனது நேரம் முழுதும் ஆன்ம பரிபூரணத்திலும் அருட்பணியிலுமன்றி வேறு எதிலும் ஒரு மூச்சுக்கூட வீணாக என்னால் முடியாது. உலகின் சுமையாக நான் வாழேன். பணியுள மட்டுமே வாழ்வேன், பின்பு இறையோடு கலந்து இன்பம் உறுவதே என் வாழ்வின் பெருநோக்கம்."

தந்தையார் இவரது மனநிலையை அறிந்து கொண்டார். தாயாரும் பிள்ளையின் பிற்கால வாழ்வைத் தடைசெய்ய விரும்பவில்லை. ஆகவே, சுத்தானந்தர் அரிதின் முயன்று விடுதலை பெற்றார். பிறகு இவர் வாழ்வு எல்லாம் கட்டற்ற பொதுநல வாழ்வுதான். பின்னைய வாழ்வில் எல்லாம் இவர் உள்ளம் தூய்மை பெறவே துடித்தது. தாம் பெற்ற தவவலியால் பொதுப் பணியே இவர் புரிந்தார்.

சுத்தானந்தர் துறவியானாராயினும், தாம் மேற்கொண்ட துறவு நிலைவேறு. பெண்களை வெறுக்கவோ, அன்றி காட்டினை விட்டு ஓடவோ இவர் முயன்றதில்லை. 'பிறர்க்கென வாழ்வதே பெருவாழ்வு,' என்பதையுணர்ந்தார்; அப்பெருவாழ்விலே தந்நலத்தடைகள் புகாதபடி வழி கண்டார். எனவே, இவரது துறவு நாட்டிற்கும் மக்

கருக்குப் பன்மை தருவது ஆயிற்று. "பன்னூறுபல கம் உயர்ந்த தன்னலம் துறந்த தொண்டே தவம்," என்பது இவரது தவநெறி விளக்கம்.

இவர்தம் ஒழுக்க நெறிகள் யாவும் தன்னலம் நீத்த வழியையே காட்டும். முதலில் இவர் உறங் கும் காலத்தைச் சுருக்கினார். இரவு நடுநிசி வரை எழுத்தும் படிப்புமாய் இருப்பார். பிறகு சிறிது நேரம் இறைவனைக் கண்மூடிக் கருத்திலிருத்து வர். என்றும் படுக்கையில் இவர் படுத்ததே இல்லை. தலையணையைக் கண்ணுற்காணவுமாட் டார். இளமையிலிருந்தே உப்பு, புளி, மிளகாய் இன்றி உண்ணத்தொடங்கினார். நாடோறும் இரண்டு மூன்று முறை நீராடுவார். எண்ணெய் தேய்த்துக் குளிப்பதில்லை. இருபது வயது முதல் இவருக்குப் பழம், பால், கடலையே உணவு. சமைத்த உணவையும் இவர் அரிதாகவே உண்பார்.

தமது உழைப்பின் பெருமையைச் சுத்தா னந்தர் நன்கு உணர்ந்தவர். பிறர் உழைப்பால் தாம் பிழைப்பது தகாது என்பது இவர் கருத்து. "உழைத்தவனுக்கே உண்ணும் உரிமையுண்டு," என்பது இவர் கொள்கை. ஆகவே, இவர் நாள் முழுவதும் தாமே மெய்வருந்தி உழைத்து உண் பார். தமிழ்க்குருகுலத்தில் இவர் சில காலம் இருந்து வந்தார். அப்பொழுதெல்லாம், தாமே உழுதுண்டு, நூற்று உடுத்தார்.

வெற்றுரையால் பயன் இல்லை. அதில் கழி யும் வலிமையை உள்ளடக்கிச் செயல் புரியவே ஞானியர் நினைப்பர். அதன்பொருட்டுத் துறவி கள் 'மோனநிலை' பூண்பதும் உண்டு. சுத்தானந்

தரும் 'பேசாநிலை' மேற்கொண்டார். பெரும்பாலும் நாள் ஒன்றுக்கு மூன்று மணிநேரமே பேசுவார். இன்று வரை இவர் ஆயுளில் முக்காற்பாகம் பேசாமலே கழிந்துளது. பன்னிரண்டாம் ஆண்டிலிருந்தே இவர் பேசாநிலை பூண்டார். 1922-ஆம் ஆண்டுக்குப் பிறகு வாரம் இரண்டு நாள் அறவே இவர் பேசியதில்லை 1928-ஆம் ஆண்டிலிருந்து இருபத்தோராண்டுகள் நிறைவாகப் பேசாநிலையைப் பேணியுள்ளார்.

இப்படி இவர் கடுந்தவம் மேற்கொண்டது மிகமிக அருமையானது. ஆனால், இவர் தவத்தால் எய்திய பயன் நாட்டிற்கும் நமக்குமே உரியது பிற துறவிகளைப்போல இன்பவுலகு பெற இவர் யோகம் புரியவில்லை. இவர் கண்மூடி ஞானியாய்க் காட்டுக்குள் நாட்டினை மறந்தவரும் அல்லர். தமக்கென வாழாது பிறர் உரிமை பெறவே இவர் தவம் இருந்தார் அளவற்ற இலக்கியப் பணிகளை எல்லாம் இவர் இத்துறவு நிலையிலேயே செய்து முடித்தார், அரசியலிலும் ஈடுபட்டார்; சமூகசேவையும் மறவாது செய்தார்; அறநிலையங்கள் பல நடத்தினார், வீடு வீடாகச்சென்று எழுத்தறிவுறுத்தினார். பத்திரிகாசிரியராய் இருந்தும் பெரும்பணி ஆற்றினார்; தனி வகுப்புக்கள் நடத்தித் தமிழும் கற்பித்தார்; கவிதைத் தொண்டாலும் நாட்டினை நலம்பெறச் செய்தார். இவர் துறவு இப்படி நாட்டிற்கே புதுமை வழி காட்டிற்று. இதை அறிந்து மகிழும் தமிழுலகு '**கவி யோகியார்**' என்றே இவரைப் பாராட்டுகிறது.

சுத்தானந்தர் அரசியல் தொண்டிலும் ஈடுபட்டிருந்தார். பள்ளிப் பருவத்திலேயே, தெப்பரஞர் நாட்டுக்கப்பலுக்கு நிதி திரட்டித் தந்தார். திலகர் இயக்கத்தில் இவர் ஒலியாய் இருந்தார்; பெசண்டு அம்மையாரின் தன்னுட்சி இயக்கத்தையும் தாங்கி ஏற்றார். இந்து முஸ்லீம் ஒற்றுமையை விரைந்து பேணினார், தீண்டாமையை அறவே ஒழிக்கத் துடிதுடித்தார். இறுதியில், காந்தீய இயக்கத்தில மனம் கலந்து உழைத்தார்; கரூரில், கள்ளுக்கடை மறியலுக்குத் தலைமை ஏற்றுப் பணி புரிந்தார்; காந்தீயத்தைப் போற்றித் தலையங்கங்கள் தீட்டினார்; தேசியப் பாடல்கள் பாடி மக்களுக்கு நாட்டுப் பற்றையும் ஊட்டினார்.

காந்தீயத்திலும், நாட்டுத் தொண்டிலும் சுத்தானந்தருக்குக் குறி. காங்கிரசில் பெரிய பதவிகளும் இவருக்கு வர இருந்தன. எனினும், அவற்றை நாடும் உள்ளம் வேண்டும் அல்லவா? அஃது இவருக்கு இல்லை. கிராமத் தொண்டு, தீண்டாமை, கதர் இம்மூன்றுமே இவரது அரசியல் தொண்டின் உயிர் நிலை. குழந்தை மணம், கட்டாய மணம் இவற்றைப் போக்க இவர் உதவினார். தீண்டாமை, மதுவருந்தல் இவற்றை நீக்க மக்களை வேண்டினார்; காந்தீயக் கொள்கையினின்று அணுவளவும் தவறாது ஒழுகினார்; எவரையும் கைத்தொழில் கற்றுப் பிழைக்கவே ஏற்புறுத்தினார்; கதர்ப் பற்றினைத்

தாமும் கொண்டு பிறருக்கும் ஊட்டினார், பேச்சளவில் நில்லாது செயலிலும் நடத்தி வெற்றி காட்டினார்

சென்ற இடம் எல்லாம் சுத்தானந்தர் நிலையங்கள் நாட்டிச் சமூகத்தொண்டு செய்தார், பெண்ணுரிமைப் பணிகளில் கண்ணும் கருத்துமாய் உழைத்தார், **பாமணி**யில் அறநிலையம் கண்டார், **பாலையூ**ரில் சக்தி நிலையம் கண்டார்; மருதூரில் கௌதம நிலையம் உருப்படுத்தினார்; பல நிலையங்கள் மூலம் மக்கட்கு அன்புப் பணியே ஆற்றினார்; நாகபட்டினம் சென்று சீர்திருத்த மாநாட்டைத் திறந்து வைத்தார்; சென்னை இயற்கை மாநாட்டிற்கு வரவேற்புத் தலைவராய் அமர்ந்தார், இராணி பேட்டையில் பலி மறுப்பு இயக்கம் நடத்தி வெற்றியும் கண்டார்

அன்றைய அரசியலில் சத்தியாக்கிரகப் போராட்டம் நடைபெறவில்லை. தேர்தல் போட்டியையே அரசியல் அன்று கண்டது. சிறை செல்லும் தொண்டு எதுவும் இயற்ற இவருக்கு வாய்ப்பும் இல்லை. பட்டம் பதவிகளுக்காகப் போட்டியும் பொறாமையும் வலுத்தன. உண்மை ஊழியம் கண்டு உயர்த்துவாரும் அருகினர். இவர் உள்ளமும் அரசியல் மேடையில் ஏறி நிற்க விரும்பவில்லை; மலைக்குகையிலே அடங்கி ஒடுங்கி அமர விழைந்தது "நான் எதிர் காலத்தை நோக்கித் தவம் புரிபவன்," என்று அரசியலுக்கு விடை கொடுத்து அருளியல் வாழ்விலே புகுந்தார்.

இவர் நேராக **விருபாட்சிக் குகைக்குச்** சென்றார். அக்குகை இரமண அடிகள் அப்பொழுது தங்கியிருந்த இடம். அங்கிருந்த நண்

பர் கணபதி வேதியரும் இவரை வரவேற்றார். இவர் இரமணரைக் கண்டு வணங்கினார் இவரது இதயமலரில் பேரின்பத்தேன் ஊறியது. பெரும் பொருளுரைகளை அடிகளிடம் கேட்டுத் தெளிந்தார். பசிக்கனலைத் தணிக்க வில்வமும வேர்க்கடலையுமே இவர் கொள்ளும் உணவு. அருவியில முழுகுவதும நிட்டையில் ஆழ்வதுமே இவருக்குத் தொழில் பாம்புடனும் குரங்குடனும் அன்புடன் பழகினார். அடிக்கடி பல திங்கள் சமாதி நிலையில் தங்குவதும் உண்டு. பற்றற்ற பல துறவியரும் இவருக்கு உற்ற நண்பர் ஆயினர். பொறுமைக்கும் மனவொருமைக்கும் ஆன நல்ல பயிற்சிகள் இங்கு நடைபெற்று வந்தன. பலவேத நுட்பங்களையும யோகப் பயிற்சிகளையும் கணபதி வேதியார் மூலம் இவர் கற்றறிந்தார். இப்படி யிருந்த குகை வாழ்விலேயே இவர் மனம் மிகவும் மகிழ்ந்தது.

எனினும, சுத்தானந்தர் இந்தக் குகையிலேயே தங்கவும் விரும்பவில்லை. தந்நலம் பேணித் தவத்திலே காலங்கழிப்பது பழுதெனப்பட்டது. இவர் நிட்டையிலும் யோகத்திலும் வரும் தனி இன்பத்தினை வெறுத்தார். பொதுநல வாழ்வில் இவர் மனம காதல் கொண்டது. இறையருளும் இவர் நிறைமனம் பெற வழி காட்டிற்று. இரமண அடிகளிடம், இவர் மறையாது தமது குறையை முறையிட்டார். 'பாரத சக்தியை உலகிற்குக் கொடு, வாக்கினால் போதாது அடங்கிப் பணி செய்,'' என்ற ஆணை பிறந்தது. அடிகள் தந்த ஆணையை நிறைவேற்ற இவர் தனியிடமே தேடினார்.

சுத்தானந்தருக்கு அரவிந்த அடிகளிடம் முன்னமே அன்பு உண்டு. அதனால், அரவிந்தர் இயற்றிய **ஆரியா, கர்மயோகி, வந்தேமாதரம்** இம்மூன்றினையும் தவறாது படித்து வந்தார். கணபதி வேதியர் இவரிடம் வந்து, "அரவிந்தர் நிலையத்தில் தங்கலாம்," என்றனர். சுத்தானந்தர் அதனையே இறைவன் ஆணை என மேற்கொண்டனர், அரவிந்தருக்கும் விண்ணப்பம் எழுதினார். கணபதி வேதியரும் நல்ல அறிமுகம் தந்தார். வேறு சிலர், 'செல்ல வேண்டா,' எனத் தடுத்தனர். எனினும், இவரது மனச்சாட்சியை இவரால் மீற முடியவில்லை. இரமண அடிகளும் ஆசி தந்து இவரை வழி அனுப்பினார். சுத்தானந்தர் உடனே புறப்பட்டுப் புதுச்சேரி சேர்ந்தார். பழைய நண்பரான **சர்மா** என்பவர் இவரை அங்குப் போற்றி வரவேற்றார்.

சுத்தானந்தர் மறுநாள் அரவிந்தரைக் காண நிலையம் சென்றார். காட்சி பெற அரவிந்தரது ஆணையும் பிறந்தது. சுத்தானந்தர் சென்று அவரது காட்சியைக் கண்டார். அரவிந்தர் மலை போல வீற்றிருந்தார். இவரைக் கண்டதும் அரவிந்தர் புன்னகை செய்து தலையசைத்தார். சுத்தானந்தரும், அரவிந்தரை மலரிட்டு வணங்கினார். அரவிந்தரது ஆசியும் இவருக்குக் கிடைத்தது. மறுநாளே சுத்தானந்தர் அரவிந்தர் நிலையத்தில் தொண்டரானார்; கையில் சேர்ந்திருந்த பொருளை எல்லாம் நிலையத்திற்கே வழங்கினார். இருபத்தோராண்டுகள் பேசாநிலை மேற்கொண்டார். சுத்தானந்தரின் தெய்வப் புலமையும்

எழுந்தது இவர் **'பாரத சக்தி'** காவியம் முதல **'ஆத்ம சோதனை'** வரை பல நூல்களை எழுதினார். எல்லா நூல்களாலும் தமிழும் தமிழ் நாடும் தக்க பயன் பெற்றன

சுத்தானந்தர் நான்கு ஆண்டுகள் அரவிந்தருக்கு உணவு தயாரித்தார்; நிலையத்தில் இருந்த **நளினி சர்** என்பவரிடம் வங்கமொழியைக் கற்றார்; பங்கிம் சந்திரர், தாகூர் முதலியவர் இயற்றிய நூல்களை மூலமொழியிலேயே படித்தார். இவர் பல கவிதை மலர்களைச் சூட்டித் தாயின் முன்னையை வழிபட்டார். நாளும் இவர் காலை மூன்று மணிக்கே எழுவார் பின்பு இருந்து பகலி நேரம் எழுத்துப் பணி புரிந்தே உணவினை நாடுவர். உண்ட உணவும், பாலும் பழமுமே ஆகும் உணவிற்கும் அங்குப் பிறர்கையைநோக்கி நிற்கவில்லை. வழக்கம் போல உழைத்தே தமது உணவைத் தேடிக்கொண்டார்.

முதல் ஏழாண்டுகள் இவர் அரவிந்தர் இயற்றிய நூல்களையே கற்றார். அவர் நூல்களுட்பலவற்றை இவர் மொழி பெயர்த்ததும் உண்டு அரவிந்தரின் கவிதைகளையும் ஆராய்ந்து மகிழ்ந்தார். **'அரவிந்தப் பிரகாசம்'** முதலிய பல நூல்களை எழுதிச் செய்ந்நன்றி காட்டினார். பின்பு பாரத சக்தி நூலை மீட்டும் புதுக்கி எழுதினார். ஏராளமான இலக்கியங்களும் இசைப்பாடல்களும் வெளி வந்தன. ஆய்வு நூல்களையும் ஓய்வின்றி எழுதிக் குவித்தார். பிரெஞ்சு, இத்தாலி, ஜெர்மன், ஜப்பான் முதலிய பிறநாட்டு மொழிகளையும் கற்றுச் சிறந்தார்; கீழ் நாட்டு மொழி